வெளியீடு 6-7-98 Issued 6-7-98

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, அக்டோபர் 16, 1997 – தொகுதி 38 – எண் 1

Thursday the 16th October, 1997 – Volume 38 – No. 1

பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

[Price Rs. 3.00

407/97

D.
V241, 31'N97.
N97. 38·1.
218444.

Hø1
—97

## 16–10–1997

# உள்ளடக்கம்

பக்கங்கள்


(i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் v-viii

(ii) Personnel of the Government of Tamil Nadu ix-xii

(iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் xv-xvi

(iv) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி) xvii-xxvii

**1. வினாக்கள்-விடைகள்--**

உடுக்குறியிட்ட வினாக்கள் 1-64

***2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)--***

*(அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997* 65

*(ஆ) தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1997* 65-66

*(இ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997* 66-67

*(ஈ) இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997* 67-68

*(உ) பதிவு செய்தல் (தமிழ்நாடு இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997* 68-69

| | பக்கங்கள் |
|---|---|
| 3. அறிவிப்பு-- | |
| இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 (ஆ.இ.) | 67 |
| 4. அரசினர் தீர்மானங்கள்-- | |
| (அ) விதி 33-ஐத் தளர்த்தல் | 69 |
| (ஆ) விதி 30(3)-ஐத் தளர்த்தல் | 121 |
| (இ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல் | 132-134 |
| 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)-- | |
| (அ) தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 | 69-76 |
| (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு, 1997 | 76-120 |
| (இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 | |
| (ஈ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 | |
| (உ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 | |
| (ஊ) தமிழ்நாடு மின்சார (நுகர்வின் மீதான வரிவிதிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவு, 1997 | 121-125 |
| (எ) தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 | 125-127 |


218444.




| | பக்கங்கள் |
|---|---|
| 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)--தொடர்ச்சி | |
| (ஏ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் விலங்கின அறிவியல்கள் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 | 127-132 |
| (ஐ) தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 | 134-146 |
| (ஒ) இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 | 146-154 |
| (ஓ) பதிவு செய்தல் (தமிழ்நாடு இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 | 154-156 |
| 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- | 156-157 |


D
V3, 31 N 97
N 97. 38.1

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் -- செல்வி எம். பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. முதலமைச்சர் | : | **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** *பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.* |
| 2. கல்வி அமைச்சர் | : | **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** *தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை, முன்னாள் இராணுவத்தினர்.* |
| 3. மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** *மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம், மின்சாரம்.* |
| 4. வருவாய்த் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** *வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிர்வாகம், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.* |
| 5. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் | : | **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** *நகராட்சி நிர்வாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.* |

6. வேளாண்மைத் துறை அமைச்சர். : மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. துரைமுருகன்:
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத்திட்டம், செயற் திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :
போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகம் மற்றும் நெடுஞ்சாலைகள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

10. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கே.என். நேரு:
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

11. பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. க. சுந்தரம்:
பால், பால் பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்று வாரியம், இடவசதிக் கட்டுப்பாடு.

12. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).



13. சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆலடி அருணா:
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட கடன் நிவாரணம்.

14. கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:
கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல், மாசுக் கட்டுப்பாடு.

15. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

16. வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:
வனம், சின்கோனா, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம்.

17. வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்பு திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

18. ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

19. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம்.

20. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் : மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:
கால்நடை பராமரிப்பு.

21. சமூக நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன்:
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட்ட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிர்வாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்.

22. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்.

23. சுற்றுலாத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:
சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

24. கதர்த் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

25. மீன் வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:
மீன் வளம் மற்றும் மீன் வளக் கழகம்



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR—Selvi M. FATHIMA BEEVI

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education** .. **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko. Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugham:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

10. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru K. N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

11. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.

12. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.



13. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

14. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N. K. K. Periasamy:** Handlooms, Textiles and Environmental Pollution Control.

15. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M. R. K. Panneer-selvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

16. **Minister for Forest and Printing** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona, Stationery and Printing and Government Press.

17. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

18. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

19. **Minister for Information and Publicity** .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act.

20. **Minister for Animal Husbandry** .. **The Hon. Pulavar B. M. Senguttuvan:** Animal Husbandry

| | | |
|---|---|---|
| 21. | **Minister for Social Welfare** | .. **The Hon. Tmt. S. P. Sarkunapandian:** Social Welfare, including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Service Scheme. |
| 22. | **Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 23. | **Minister for Tourism** | .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| 24. | **Minister for Khadi** | .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| 25. | **Minister for Fisheries** | .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பேரவைத் தலைவர்**

மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

**பேரவைத் துணைத் தலைவர்**

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

***மாற்றுத் தலைவர்கள் பட்டியல்***

1. திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்
2. திரு. இரா. ஆவுடையப்பன்
3. டாக்டர் வை. இராமசாமி
4. திரு. செ. இராமலிங்கம்
5. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்
6. திரு. கே. சுப்பராயன்

**செயலாளர்**

திரு. டி. சாலமன் ஜெயபால்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல்., | .. | இணைச் செயலாளர் |
| 2. திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல்., | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| 3. திரு. துரை சுந்தரராஜுலு, எம். ஏ., | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 4. திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல்., | .. | துணைச் செயலாளர் |
| 5. திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல்., | .. | துணைச் செயலாளர் |
| 6. திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல்., | .. | துணைச் செயலாளர் |
| 7. திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல்., | .. | துணைச் செயலாளர் |
| 8. திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல்., | .. | துணைச் செயலாளர் |
| 9. திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல்., | .. | துணைச் செயலாளர் |
| 10. திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல்., | .. | துணைச் செயலாளர் |
| 11. திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி., | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 12. திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட்., | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 13. திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம்., | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 14. திருமதி வீ. நா. உமா, பி.ஏ., | .. | குழு அலுவலர் |
| 15. திரு. க. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 16. திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 17. திரு. சௌரி. அய்யாதுரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |

| | | |
|---|---|---|
| 18. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 19. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 20. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 21. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ. , பி.ஜி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 22. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 23. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 24. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 25. | திருமதி என். துளசிபாய், பி.ஏ., | .. சார்புச் செயலாளர் |
| 26. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ., | .. சார்புச் செயலாளர் |
| 28. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 29. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 30. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 31. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 32. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ., | .. தலைமை நிருபர் |
| 33. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல்., | .. தலைமை நிருபர் |
| 34. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி., | .. தலைமை நிருபர் |
| 35. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ., | .. தலைமை நிருபர் |
| 36. | திரு. நா. நடராஜன், பி.ஏ., | .. தலைமை நிருபர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)
## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | .. அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | .. மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. | .. புவனகிரி |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. | .. அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. லி. | .. கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. | .. மேட்டுப்பாளையம் |
| 10. | அழகராஜா, திரு. என்.ஆர். | .. தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. | .. சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. | .. கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், திரு. வ. | .. செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | .. ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | .. பவானிசாகர் |
| 18. | ஆண்டி அம்பலம், திரு. எம். | .. நத்தம் |
| 19. | ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். | .. வில்லிவாக்கம் |
| 20. | ஆலடி அருணா, திரு. | .. ஆலங்குளம் |

21. ஆல்பன், டாக்டர் வே. .. திருவட்டாறு
22. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்
23. ஆறுமுகம், திரு. டி.பி. .. திருச்செங்கோடு
24. ஆறுமுகம், திரு. வீரபாண்டி எஸ். .. வீரபாண்டி
25. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணாநகர்
26. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)
27. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்
28. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்
29. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு
30. இராசன், திரு. வி. பி. .. ராஜபாளையம் (செ.வ.)
31. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்
32. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
33. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி
34. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
35. இராமச்சந்திரன், திரு. சி.இரா. .. தொண்டாமுத்தூர்
36. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்
37. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
38. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்
39. இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். .. பள்ளிப்பட்டு
40. இராமஜெயம், திரு. ந.பூ. .. மயிலாப்பூர்
41. இராஜரெட்டி, திரு. ச. .. தளி
42. இராஜேந்தர், திரு. டி. .. பூங்காநகர்



43. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)
44. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
45. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்
46. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
47. கணேசன், திரு. இ. .. எடப்பாடி
48. கணேசன், திரு. கே. சி. .. ஜெயங்கொண்டம்
49. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்
50. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்
51. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
52. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
53. கல்யாணம், திரு. குத்தாலம் பி. .. குத்தாலம்
54. கன்னையன், திரு. க. .. தொட்டியம்
55. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி
56. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை
57. கிட்டு, திரு. சைதை கா. .. சைதாப்பேட்டை
58. கிருட்டிணன், திரு. பசும்பொன், தா. .. சிவகங்கை
59. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
60. கிருஷ்ணன், திரு. எஸ். வி. .. நாங்குநேரி
61. கிருஷ்ணன், திரு. சீ. வெ. .. வேடசந்தூர்
62. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்
63. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
64. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
65. கோபால், திரு. பா. .. மேட்டூர்

| | | |
|---|---|---|
| 66. | கோபு, திரு. சி. | .. அணைக்கட்டு |
| 67. | கோமதி சீனிவாசன், திருமதி | .. வலங்கைமான் (செ.வ.) |
| 68. | கோவிந்தன், திரு. ப. | .. தாரமங்கலம் |
| 69. | கோவிந்தன், திரு. வி. | .. பேரணாம்பட்டு (செ.வ.) |
| 70. | சக்ரபாணி, திரு. ஆர். | .. ஒட்டன்சத்திரம் |
| 71. | சண்முகம், திரு. கோ. | .. திருப்பத்தூர் |
| 72. | சண்முகம், திரு. சி. | .. ஆலந்தூர் |
| 73. | சண்முகம், திரு. ம. | .. கிணத்துக்கடவு |
| 74. | சந்தானம், திரு. எல். | .. சோழவந்தான் |
| 75. | சந்திரசேகரன், திரு. சி. | .. சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 76. | சந்திரசேகரன், திரு. துரை. | .. திருவையாறு |
| 77. | சமயநல்லூர் செல்வராசு, திரு. எஸ்... | சமயநல்லூர் (செ.வ.) |
| 78. | சம்பத், திரு. ஏ.ஜி. | .. முகையூர் |
| 79. | சரஸ்வதி, திருமதி ஆர். | .. தாராபுரம் (செ.வ.) |
| 80. | சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. | .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 81. | சாமிநாதன், திரு. மு.பெ. | .. வெள்ளக்கோவில் |
| 82. | சிங்காரவேலு, திரு. வி.பி. | .. வால்பாறை (செ.வ.) |
| 83. | சிவபுண்ணியம், திரு. வை. | .. மன்னார்குடி |
| 84. | சிவராமன், திரு. ஆர். | .. திருப்பத்தூர் |
| 85. | சிவராஜ், திரு. சு. | .. ரிஷிவந்தியம் |
| 86. | சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். | .. பனமரத்துப்பட்டி |
| 87. | சிவானந்தம், திரு. ஆர். | .. ஆரணி |



| | | |
|---|---|---|
| 88. | சிவாஜி, திரு. இ.ஏ.பி. | .. திருத்தணி |
| 89. | சின்னய்யா, திரு. வெ. | .. திருமயம் |
| 90. | சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். | .. விருதுநகர் |
| 91. | சுகவனம், திரு. இ.ஜி. | .. பர்கூர் |
| 92. | சுடலைமுத்து, திரு. அ. | .. போடிநாயக்கனூர் |
| 93. | சுதர்சனம், திரு. டி. | .. பூந்தமல்லி |
| 94. | சுந்தரம், திரு. க. | .. பொன்னேரி (செ.வ.) |
| 95. | சுந்தரம், திரு. ந. | .. காரைக்குடி |
| 96. | சுந்தரம், திரு. பி.ஆர். | .. ராசிபுரம் |
| 97. | சுந்தர், திரு. கே. | .. உத்திரமேரூர் |
| 98. | சுப்பராயன், திரு. கே. | .. திருப்பூர் |
| 99. | சுப்பிரமணி என்கிற சி.சு.மணி, திரு. சி. | .. திருவள்ளூர் |
| 100. | சுப்பிரமணி, திரு. பி.என். | .. ஆற்காடு |
| 101. | சுப்பிரமணியன், திரு. அ.லெ. | .. திருநெல்வேலி |
| 102. | சுப்புலட்சுமி ஜெகதீசன், திருமதி | .. மொடக்குறிச்சி |
| 103. | சுரேஷ் ராஜன், திரு. என். | .. கன்னியாகுமரி |
| 104. | செங்குட்டுவன், புலவர் பூ.ம. | .. மருங்காபுரி |
| 105. | செங்கை சிவம், திரு. | .. பெரம்பூர் (செ.வ.) |
| 106. | செல்லக்குமார், டாக்டர் அ. | .. தியாகராயநகர் |
| 107. | செல்வம், திரு. ரெ. | .. குளித்தலை |
| 108. | செல்வராஜ், திரு. டி. | .. உடுமலைப்பேட்டை |
| 109. | செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. | .. கொளத்தூர் (செ.வ.) |

110. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்
111. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
112. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
113. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
114. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
115. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
116. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
117. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
118. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
119. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
120. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு
121. தமிழரசன், திரு. குழந்தை. .. விருத்தாசலம்
122. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
123. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
124. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
125. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
126. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1
127. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
128. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
129. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
130. திருஞானசம்பந்தம், திரு. வி. .. பேராவூரணி
131. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
132. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்
133. துரை, திரு. க. .. திருவெறும்பூர்



134. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
135. துரைமுருகன், திரு. .. காட்பாடி
136. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
137. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
138. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
139. நடராஜன், திரு. டி. .. செஞ்சி
140. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
141. நன்னன், திரு. கொ. வி. .. செங்கம் (செ.வ.)
142. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
143. நாஞ்சில் மனோகரன், திரு. கி. .. திருவல்லிக்கேணி
144. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
145. நேரு, திரு. கே.என். .. லால்குடி
146. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
147. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
148. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
150. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
151. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
152. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
153. பாண்டுரங்கன், திரு. என். .. பெரணமல்லூர்
154. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
155. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
156. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

157. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
158. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
159. புரட்சிமணி, திரு. எஸ். .. மங்களூர் (செ.வ.)
160. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
161. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
162. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
163. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
164. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
165. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா.)
166. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
167. பொங்கலூர் நா. பழனிச்சாமி திரு. .. சிங்காநல்லூர்
168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
169. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
170. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
171. மகேந்திரன், திரு. ஆர். .. நாட்ராம்பள்ளி
172. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
173. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
174. மணி, திரு. டி. .. விளவங்கோடு
175. மணி, திரு. நெல்லிக்குப்பம் அ. .. நெல்லிக்குப்பம்
176. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
177. மணிக்கண்ணன், திரு. ஆ.ஜெ. .. திருநாவலூர்
178. மணிநாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்



179. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்
180. மணிவர்மா, திரு. கே. .. தண்டராம்பட்டு
181. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
182. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
183. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
184. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
185. மாரி அய்யா, திரு. .. புதுக்கோட்டை
186. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
187. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி
188. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
189. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
190. முத்துராமலிங்கம், திரு. எம். .. திருமங்கலம்
191. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
192. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
193. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
194. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
195. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
196. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
197. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
198. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
199. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
200. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
201. ரவி அருணன், திரு. கு. .. தென்காசி

202. ரவிசங்கர், திரு. கு. .. விளாத்திகுளம்
203. ராசேந்திரன், திரு. ஏ. .. போளூர்
204. ராணி, செல்வி க. .. தலைவாசல் (செ.வ.)
205. ராமசாமி, திரு. ஏ.எம். .. ஆத்தூர்
206. ராமச்சந்திரன், திரு. செ. .. திருப்பரங்குன்றம்
207. ராஜு, திரு. எஸ். .. பொள்ளாச்சி
208. ராசேந்திரன், திரு. எஸ்.கே. .. சத்தியமங்கலம்
209. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். .. காங்கேயம்
210. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் (கிழக்கு)
211. வல்லரசு, திரு. பி.என். .. உசிலம்பட்டி
212. வாசுகி முருகேசன், திருமதி .. கரூர்
213. விஜயகுமார், திரு. கே.எம். .. சாத்தூர்
214. விஜயன், திரு. டி.சி. .. திருவொற்றியூர்
215. வீரப்பன், திரு. கோ.க. .. கபிலர்மலை
216. வெங்கடசாமி, திரு. பி. .. ஓசூர்
217. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி
218. வெங்கடாசலம், திரு. ஜி.எல். .. பாலக்கோடு
219. வெங்கடேசன், திரு. ச.க. .. மதுராந்தகம்
220. வெங்கடேசன், திரு. பே.வே.ஸ்ரீ. .. காவேரிப்பட்டினம்
221. வெங்கிடு, திரு. ஜி. பி. .. கோபிச்செட்டிப் பாளையம்
222. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். .. அரூர் (செ.வ.)
223. வேணு, திரு. கே. .. கும்மிடிப்பூண்டி



224. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
225. வேலாயுதன், திரு. சி. .. பத்மநாபபுரம்
226. வேலுசாமி, திரு. வ. .. மதுரை கிழக்கு
227. வேல்சாமி, திரு. க. .. நாமக்கல் (செ.வ.)
228. வேல்துரை, திரு. பா. .. சேரன்மகாதேவி
229. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்
230. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். .. திருச்செந்தூர்
231. ஜோதிகண்ணன், திரு. மு.ந. .. முசிறி
232. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
233. ஆன் டி'மான்டி, திருமதி .. நியமனம்
234. (வெற்றிடம்) .. அருப்புக்கோட்டை
235. (வெற்றிடம்) .. குன்னூர் (செ.வ.)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**புரட்டாசி 30, ஈஸ்வர - திருவள்ளுவர் ஆண்டு 2028**

**1997, அக்டோபர் 16, வியாழக்கிழமை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்,** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்*

*பண்புபா ராட்டும் உலகு."*

*நீதி வழுவாமல் நன்மைகளைச் செய்து, பிறருக்குப் பயன்படப் பணியாற்றுகிறவர்களின் நல்ல பண்பை உலகம் பாராட்டும்.*

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 41. திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

**41—**

**உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்**

*** 6230—திரு. மு.பெ. சாமிநாதன்:**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, வெள்ளக்கோவில் ஒன்றியம், உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்க, 1997-98 ஆம் ஆண்டிலே கருத்துரு பெறப்பட்டு, புதிய அரசு உயர்நிலைப் பள்ளிகளைத் தேர்வு செய்யும்பொருட்டு அமைத்த உயர்மட்டக்குழு இப்பள்ளியைப் பரிந்துரை செய்யாததால், 1997-98 ஆம் ஆண்டில் தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளில் இப்பள்ளி இடம்பெறவில்லை.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நடுநிலைப் பள்ளியானது வெள்ளக்கோவிலில் இருந்து 15 கிலோ மீட்டர் தொலைவிலே அமைந்துள்ளது. அங்கேயிருந்து மாணவர்கள் மேல்நிலைப் படிப்புக்கு வெள்ளக்கோவில் அல்லது மூலனூர் பகுதிக்குத்தான் செல்லவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே வருகிற ஆண்டிலாவது இந்தப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப்பள்ளி 15 கிலோ மீட்டரில் இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தார். ஆனால் 7 கிலோ மீட்டரில் இன்னொரு உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. மேலும் அந்தப் பள்ளிக் கூடத்தில் 35 மாணவ, மாணவிகளே எட்டாவது வகுப்பில் படிக்கிறார்கள். ஏறத்தாழ 80 பேர் படிக்கக்கூடிய பள்ளிக்கூடங்களுக்கு முன்னுரிமை தரவேண்டும். ஏனென்றால் 50 பேராவது மேல் வகுப்புக்கு வருவார்கள். இந்தப் பள்ளிக்கூடத்தில் 30-35 மாணவ, மாணவிகளே உள்ளார்கள் என்ற காரணத்தாலும், 7 கிலோ மீட்டர் தூரத்தில் இன்னொரு உயர்நிலைப் பள்ளிக்கூடம் இருக்கிறது என்ற அடிப்படையிலும் இதற்கான இட வசதி இப்போது செய்யப்பட்டிருக்கவில்லை என்ற நிலையிலும், இது அந்தப் பரிந்துரையில் முன் இடத்தைப் பெறமுடியவில்லை. முன் இடம் பெறக்கூடிய பள்ளிக்கூடங்களுக்கு, முன்னுரிமை வழங்கி அவைகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலைமையே அரசுக்கு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 ஏக்கர் நிலம் இலவசமாகக் கொடுக்கப்பட்டு அத்துடன்





அரசுக்குச் செலுத்தவேண்டிய ரூ. 60,000 டெபாசிட் கட்டுவதற்கும் தயாராக இருந்து, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 8 ஆம் வகுப்பிலே 90 குழந்தைகளுக்கு மேலாகப் படிக்கக் கூடிய சூழ்நிலையில் அரசு எதிர்காலத்தில் அதை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தி அனுமதி தர ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொல்கிற அனைத்தும் நிறைவேற்றப்படுகிறபோது, அரசும் தன் கடமையை நிறைவேற்றும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆ. ஞானசேகரன்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்துனை விதிமுறைகளையும் நிறைவு செய்துள்ள என்னுடைய தொகுதியிலுள்ள அன்னமங்கலம் உயர்நிலைப் பள்ளியை வரும் நிதி ஆண்டிலாவது மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆவன செய்வது என்பது, பரிந்துரைக் குழுவைக் கருதும்படியாக பரிசீலிக்கும்படியாகக் கேட்டுக்கொள்வதுதான். மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற எந்த வேண்டுகோளும், அந்தந்தக் குழுக்களுக்கு அனுப்பப்பட்டு, அங்கே உள்ள பல்வேறு பள்ளிகளை ஏற்கவேண்டுமென்ற வேண்டுகோளில், உயர்த்தவேண்டுமென்ற வேண்டுகோளில் முன்னுரிமை அடிப்படையில் அரசு எவ்வளவு நிதி ஒதுக்குகிறதோ, எத்தனைப் பள்ளிக்கூடங்களை ஏற்றுக்கொள்கிறதோ, அந்த அளவு எண்ணிக்கை உள்ள பள்ளிக்கூடங்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. உறுப்பினர் சொல்கிற பள்ளிக்கு அடுத்த ஆண்டு வாய்ப்புக் கிடைக்கலாம் என்று நம்புகிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவதற்கு உரிய குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலே செய்வதைப்போல உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்குவதற்காக அந்தக் குழு பரிந்துரைகளைச் செய்திருக்கிறதா? அப்படி செய்யப்பட்ட பரிந்துரைகளின் எண்ணிக்கை எவ்வளவு? அதிலே,

நான் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கிற கூத்தாநல்லூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கான அறிவிப்பு வந்திருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிவிப்பெல்லாம் வரவேண்டிய காலத்தில் ஜூலைத் திங்களிலேயே வந்து, அது அறிவிக்கப்பட்டுவிட்டது. வராமலிருக்குமானால் அடுத்த ஜூலைக்குக் காத்திருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. தளபதி.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சேடப்பட்டித் தொகுதியிலேயுள்ள மேலப்பட்டியிலே உயர்நிலைப் பள்ளியிலே மேல்நிலை வகுப்பான பிளஸ்-1 தேர்வுக்கு 36 மாணவர்கள் இந்த ஆண்டு படித்துக் கொண்டிருக்கிறார்கள். அனுமதிக்காக விண்ணப்பிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அனுமதி கிடைக்கவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனைக் கொடுத்து உதவுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுமதி கிடைக்காமல் அரசு பள்ளிக்கூடம் மேல் வகுப்பு நடத்துமானால் நடவடிக்கைதான் எடுக்க வேண்டும். (சிரிப்பு) அனுமதி பெற்று நடத்துவதற்குத்தான் அரசுப் பள்ளிக்கூடங்களுக்கு உரிமையுண்டு. ஆனால், தனியார் பள்ளிக்கூடமாக இருக்குமானால், முறைப்படி விண்ணப்பித்திருப்பார்களேயானால் அதுபற்றி ஆய்வு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-97, 1997-98 ஆகிய ஆண்டுகளில் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் அரசுப் பள்ளிகளே தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. ஆனால், எங்கள் பகுதிகளில் எல்லாம் பெரும்பாலும் தனியார் பள்ளிகளே அதிகமாக இருப்பதால் தகுதி வாய்ந்த தனியார் பள்ளிகளுக்கும் வாய்ப்பு தரப்படுமா? கிட்டத்தட்ட தமிழகத்திலே இருக்கின்ற உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் பாதிக்கு சமமாகத் தனியார் நடத்துகின்ற தரமான பள்ளிகளே இருக்கின்றன. ஆகவே, அரசு 100 உயர்நிலைப் பள்ளிகள் ஆரம்பிக்குமானால், தனியாருக்கும் பாதி



பள்ளிகளை, அதாவது 50 பள்ளிகளைக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் வருங்காலத்திலாவது அதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்பதற்கு முன்னாலேயே, கடந்த சில ஆண்டுகளாகத் தனியார் பள்ளிக்கூடங்கள் மேல் வகுப்புக்களைத் தொடங்க வேண்டுமானால் நிதியுதவி கேட்காமல் இருந்தால் தொடங்க அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. இப்போதும் நிதியுதவி கேட்கப்படாவிட்டால் அந்தத் தடையில்லை. ஏனென்றால் சில தனியார் பள்ளிக்கூடங்களில் மேல் வகுப்புக்குப் போதுமான எண்ணிக்கையில் மாணவர்கள் இல்லாமலேயேகூட, இருப்பதாகக் காட்டி அதனால் சில நேரங்களில் தவறு ஏற்பட்டு விடுகிறது. எனவே, தனியார் பள்ளிகளுக்கும் அரசுப் பள்ளிக்கூடங்களுக்கு அனுமதிக்கப்படுகின்ற அதே விதி இருக்கிறது. இருந்தாலும்கூட, நிதியுதவி கேட்காமல் அவர்கள் மேல் வகுப்புத் தொடங்குவதாக இருந்தால் அதற்குத் தடையில்லை. ஆனால், நிதியுதவி கேட்கப்படுமானால் நிதிவசதி அதற்காகத் தனியாக ஒதுக்கப்பட்ட பின்னரே அது ஏற்கப்படவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியிலுள்ள நாமகிரிப்பேட்டை அரசினர் மேல்நிலைப் பள்ளியில் ஆண்கள் அதிகமாகவும், பெண்கள் அதிகமாகவும் கிட்டத்தட்ட 2,500 பேர் இருக்கின்றார்கள். அதில் பெண்களுக்குத் தனியாக மேல்நிலைப்பள்ளி ஆரம்பிக்க வேண்டுமென்றால் தனியாக 5 ஏக்கர் நிலம் தேவையென்று அரசாணை இருக்கிறதென்று கூறியிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கூட மகஜர் கொடுத்திருக்கின்றேன். அந்த இடத்திலே தேவையான இடம் இருக்கின்றது. ஆகவே காம்பவுண்ட் சுவர் - சுற்றுச் சுவர் - ஏற்படுத்தி அந்த இடத்திலே பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஆரம்பிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் பள்ளிக்கூடம் தனிப் பள்ளிக்கூடமாகப் பிரித்து அமைக்கப்பட வேண்டும் என்கிற வேண்டுகோள் சில இடங்களிலே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. சில இடங்களிலே

ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அவர்கள் தனிப் பள்ளிக்கூடம் என்று சொல்லுகிறபோது தனியாகவே அதற்கு இடம், கட்டடம் அத்தனையும் தேவை. அது நிறைவேற்றப்படாவிட்டால் எளிதாகப் பிரிக்க முடியாது. அப்படி பெயருக்குப் பிரிக்கப்பட்டாலும்கூட நடைமுறையில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்க வேண்டிய கட்டாயமான நிலைமை இருக்கும். பிரித்து அமைப்பதிலே பொருள் இருக்காது. இருந்தாலும் விவரங்கள் தெரிந்தபின் அது குறித்துப் பரிசீலிக்க, அந்தப் பரிசீலனைக் குழுவுக்குத் தெரிவிக்கத் தயாராக இருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாநகராட்சியில், மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. ஆனால் உயர்நிலைப் பள்ளியில் ஆங்கில போதனா முறை இருக்கிறது. மேல்நிலைப் பள்ளியில் ஆங்கில போதனா முறை இல்லை. அவர்கள் மனு செய்கிறார்கள். அப்படிப்பட்ட பள்ளிகளுக்கு எஸ்.எஸ்.எல்.சி. வரை ஆங்கில போதனா முறை - இங்கிலீஷ் மீடியம் - இருக்கின்றபோது ஹையர் செகண்டரி எஜுகேஷனுக்கு, இங்கிலீஷ் மீடியம் தருவதற்கு அரசு முன்னுரிமை தருமா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-40*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்கிலம் மூலமாகப் பாடங்கள் நடத்தப்பட வேண்டும் என்ற கொள்கைக்கு இந்த அரசு ஆதரவாக இல்லை. ஆனால், அப்படிக் கட்டாயமாக நடத்த வேண்டிய நிலைமை இருக்குமானால், அதனுடைய செலவுப் பொறுப்பை மாணவர்கள் மாதச் சம்பளம் கட்டுவது மூலமாக ஈடு செய்து கொண்டால் அவர்கள் நிறைவேற்றலாம். எனவே இந்தச் செலவுப் பொறுப்பை மாநகராட்சி, மாணவர்களுடைய சம்பளத்திலிருந்து பெறுவதாக உறுதியைத் தெரிவிக்குமானால் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. மோகனதாசன்.

**திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவெண்காட்டில் அறநிலையத் துறை மூலமாக நடத்தப்படுகின்ற உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளியை சென்ற ஆண்டு.. (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஓர் உறுப்பினர் பேசுகின்றபோது, பேரவைத் தலைவருக்கும் உறுப்பினருக்கும் நடுவிலே யாரும் நடந்து வரக்கூடாது. இது ஓர் எச்சரிக்கை.

**திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறை மூலமாக நடத்தப்படுகின்ற அந்த உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்க வேண்டும் என்று விண்ணப்பம் செய்திருந்தோம். அது இதுவரையில் ஆக்கப்படவில்லை. வருகிற ஆண்டாவது அது ஆக்கித்தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறை மூலமாக நடத்தப்படுகின்ற கல்வி நிலையங்களுக்கு அறநிலையத் துறைதான் பொறுப்பு. அவர்கள் அந்தச் செலவை ஏற்றுக்கொண்டு நடத்துவதாகத் தெரிவிப்பார்களேயானால், அது கல்வித் துறையினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 42, திரு. ச. அழகுவேலு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**42—**

**விழுப்புரம் அரசினர் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு வகுப்புகள்**

***9236— திரு. ச. அழகுவேலு:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் அரசினர் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் துவங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்தக் கேள்வி, ஏப்ரல் திங்களில் கேட்கப்பட்ட காரணத்தால், அப்போதிருந்த நிலைமைக்கு உரிய விடைதான் இங்கே தரப்பட்டிருக்கிறது. விழுப்புரம் அரசினர் கலைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் துவங்க செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. பட்ட மேற்படிப்புக்கு கருத்துரு

அனுப்பப்படவில்லை என்ற நிலைமை இருக்கிறது. ஒருவேளை இந்த ஆண்டு அனுப்பி இருப்பார்களேயானால் அடுத்த ஆண்டு பரிசீலிக்கப்படும்.

**திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் விழுப்புரம் அரசினர் கலைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் துவங்குவதற்கு கருத்துரு அனுப்பவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய முதல்வர் அவர்கள் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் துவங்குவதற்கு கருத்துரு அனுப்பியிருப்பதாகக் கூறுகின்றார்கள். அங்கேயுள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலேகூட பட்ட மேற்படிப்பு வகுப்புகள் நிறுத்தப்பட்டு விட்டன. ஆகவே, இந்த ஆண்டாவது அந்தக் கருத்துருவை ஏற்று இந்த அரசு புதிய பட்ட மேற்படிப்பு வகுப்புகளைத் துவங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய கருத்துருக்கள் வந்திருக்குமானால் வருகின்ற ஆண்டில் அது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்.

**திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மன்னர் கல்லூரி 1947, ஆகஸ்டு 11-ம் தேதியன்று துவங்கப்பட்டது. அழகப்பா கல்லூரியும் அதே நாளில்தான் துவக்கப்பட்டது. காரைக்குடி அழகப்பா கல்லூரி இன்று பல்கலைக்கழகமாக மாறியிருக்கிறது. ஆனால் 1947-ல் சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பே துவக்கப்பட்ட சிவகங்கைக் கல்லூரியில் இதுவரை பட்ட மேற்படிப்பு வகுப்புகள் இல்லை. அதிகச் செலவு அரசாங்கத்திற்கு ஏற்படாத வகையில் 'கணிதவியல்' (பி.எஸ்.சி.) இருக்கிறது. அதற்கு எம்.எஸ்.சி. கொடுக்கலாம். 'வணிகவியல்' (பி.காம்.) இருக்கிறது. அதிலே எம்.காம். கொடுக்கலாம். அதேபோல 'வரலாறு' பி.ஏ. இருக்கிறது. அதற்கு ஆசிரியர்களும் இருக்கிறார்கள். அதற்கு எம்.ஏ. கொடுக்கலாம். ஆகவே அரசுக்குச் செலவு இல்லாத அளவில் பட்ட மேற்படிப்பு வகுப்புகளை சிவகங்கைக் கல்லூரியிலே துவங்குவதற்கு அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல நூறு கல்லூரிகள் — தனியார் கல்லூரிகள், அரசு கல்லூரிகள் தமிழ்நாட்டிலே இருக்கின்றன. அவற்றில் நீண்ட



காலமாக உள்ள கல்லூரிகளும் இருக்கின்றன. புதிய பட்ட வகுப்புகள், மேற்பட்டப் படிப்பு வகுப்புகள் துவங்கப்பட வேண்டுமானால் அங்கேயுள்ள ஆசிரியர்களுடைய பணி முறையை ஆய்ந்து, அந்தப் பணிமுறையில் இந்தப் பணி இந்த அளவில் இடம் பெற முடியும் என்று முதல்வர் அறிக்கை தர வேண்டும். அந்த முதல்வருடைய அறிக்கை கிடைக்குமானால், நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன்.

முற்பகல் 9-45

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில், திருவண்ணாமலையில் அரசினர் கலைக் கல்லூரி இருக்கிறது. அங்கு பட்ட மேற்படிப்பு வேண்டும் என்று பலமுறை மனு செய்தும், இன்னும் கிடைக்கவில்லை. அங்கு ஒரேயொரு பட்ட மேற்படிப்பு, எம்.எஸ்.சி. (பிசிக்ஸ்) மட்டும்தான் இருக்கிறது. மற்ற பட்ட மேற்படிப்புகள் துவங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன். அதேசமயம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கல்லூரி முதல்வர் அனுப்பினால் நிச்சயமாக பரிசீலிக்கப்படும் என்று சொல்கிறார்கள். ஏற்கெனவே கல்லூரி முதல்வர் அவர்கள் அனுப்பி இருக்கிறார்கள். கருத்துருவை அனுப்பியிருக்கிறார்கள். அதையும் பரிசீலித்து ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிக் கல்விக்காக புதிய செலவுக்கு நிதி ஒதுக்கப்படுகிற வாய்ப்பு இல்லை. எனவே, ஏற்கெனவே உள்ள செலவு அடிப்படையில் ஒரு கல்லூரிக்குத் தரப்பட்டிருக்கிற ஆசிரியர்களுடைய எண்ணிக்கையைக் கொண்டு, அவர்களிலே உரிய தகுதி பெற்றவர்கள், அங்கே இருக்கக்கூடிய வாய்ப்பு அந்தச் செலவிலேயே இருக்குமானால் அதைக் கொண்டு அந்தக் கல்லூரியில் மேல் பட்டப் படிப்புகள் அனுமதிக்கப்படுகின்றன. அந்த முறைப்படி இது பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம் மிகவும் பிற்படுத்தப்பட்ட ஒரு மாவட்டம். அந்த மாவட்டத்திலே உள்ள அரசுக் கலைக் கல்லூரியிலே எந்த பட்ட மேற்படிப்பும் இதுவரை

தொடங்கப்படவில்லை. திண்டிவனம் கலைக் கல்லூரியிலே, விழுப்புரம் கலைக் கல்லூரியிலே இதுவரையில் பட்டமேற்படிப்புகள் தொடங்கப்படவில்லை. கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அதாவது முதலாவதாக அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நேரத்திலே தொடங்கப்பட்டு, உருவான அந்தக் கல்லூரிகள், அந்தப் பகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி என்பதால் பிற்படுத்தப்பட்ட பகுதி மக்கள் முன்னுக்கு வரவேண்டும் என்பதற்கான நல்ல எண்ணத்தோடு அரசு தொடங்குகிறது என்று சொல்லி அறிவித்தார்கள். ஆகவே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், வரும் கல்வி ஆண்டிலாவது - கடந்த 4, 5 ஆண்டுகளாகவே, பட்ட மேற்படிப்புத் தொடங்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை அதிகாரிகள் அளவிலே இந்தக் கோரிக்கைகள் நின்றுவிடுகிறதோ, தங்களுடைய மேலான கவனத்திற்கு அவை வரவில்லையோ என்னவோ தெரியவில்லை. எனவே வரும் கல்வி ஆண்டிலாவது - விழுப்புரம் மற்றும் திண்டிவனம் கலைக் கல்லூரிகளுக்கு பட்ட மேற்படிப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா என் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து இயக்குநருக்குத் தெரிவிக்கப்பட்டு, அவர் மூலமாக உரிய முறையில் ஆய்வு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி. ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கல்லூரிப் படிப்புக்கு என்று அரசு தனியாக நிதி ஒதுக்கவில்லை என்று இப்போது சொன்ன பதிலில் சொன்னார்கள். இந்த மாதிரி தனியாக அரசுப் பள்ளி, கல்லூரிகளுக்கு பணம் ஒதுக்கப்படாவிட்டால், ஏழைக் குழந்தைகள் தனியார்களால் நடத்தப்படக்கூடிய கல்லூரிகளிலே பணம் கட்டிப் படிப்பதற்கு என்ன வாய்ப்பிருக்கிறது என்பதையாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? ஏழைகள் எங்கே சென்று படிப்பார்கள்? ஆகையினாலே, அரசுக் கல்லூரிகளுக்கு பணம் ஒதுக்கி, ஏழைகள் தங்கள் வாழ்விலே முன்னேறக்கூடிய அளவிற்குச் செய்ய வேண்டும். எந்த மாப்பிள்ளையும் பெண்ணைக் கட்டிக்கொண்டு போக மாட்டேன் என்று சொல்கிறான், கல்லூரிப் படிப்பு இருக்கிறதா என்று கேட்கிறான், ஆகையினாலே இந்த ஏழைகளுக்காக மேலும் பணம் ஒதுக்கப்படுமா



என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய விளக்கம் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கு ஏற்படுகிறது. ஏழைகளிலே மிக அடித்தட்டிலே இருக்கிற ஏழைகளுக்கு, தொடக்கப்பள்ளிக் கல்வியே நிறைவாகக் கிடைக்கவில்லை என்று அரசாங்கத்திற்குத் தகவல் இருக்கிறது. பள்ளிக்கூடங்களில், தொடக்கப் பள்ளியில் தொடங்கி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி என்று படிப்படியாக ஏறவேண்டி இருக்கிறது. இன்னொன்று, அரசாங்கத்தினுடைய பணமும் பெரும்பகுதி தொடக்கக் கல்விக்குத்தான், ஏறத்தாழ 1000 கோடி ரூபாய், அதற்காகத்தான் செலவாகிறது. மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிக்கு - நான் சொல்கிற புள்ளிவிவரங்கள் குறிப்பிலிருந்து சொல்லும் சரியான புள்ளிவிவரம் அல்ல. ஒரு கருத்துக்காகச் சொல்கிறேன் - 600, 700 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது. கல்லூரிக் கல்விக்கு ஏறத்தாழ 300 கோடி ரூபாய் செலவிடப்படுகிறது. பல்கலைக் கழகங்களுக்கு ஒரு அளவுக்கு ஒதுக்கப்படுகிறது. இதிலே முன்னுரிமை தந்து, அதிக அளவிற்கு ஏழைகள் முன்னேற வேண்டுமானால், தொடக்கப் பள்ளியிலேதான் அதிக கவனம் செலுத்த வேண்டிய கட்டாயமான கடமை எனக்கு இருக்கிறது. இரண்டாவது, ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட நிதி மேலும் மேலும் செலவு அதிகமாகிற வகையில் - யுஜிசி. மூலமாகத் தீர்மானிக்கப்படுகிற ஊதியம் தருகிறபோது, அந்தச் செலவு பல்கலைக்கழகத்திலேயும், கல்லூரிகளிலேயும், ஏறிக்கொண்டே வருகிறது. மூன்றாவது, தொடக்கப் பள்ளிகளைத் தனியார் அதிகமாகத் தொடங்க முன்வருவதில்லை. கல்லூரிகளைத்தான் தொடங்க முன்வருகிறார்கள். நான்காவது, தொழில் அடிப்படையிலான கல்விதான் ஏழைகளுக்கு வாழ்வு அளிக்குமே தவிர, வெறும் பட்டப் படிப்பு வாழ்வு அளிக்கவில்லை என்பது திட்டவட்டமாக நான் அறிந்து இருக்கிற ஓர் உண்மை. எனவே, நிதி ஒதுக்குவதாக இருந்தால், அதை பாலிடெக்னிக் மூலமாக ஒதுக்கி, ஒரு தொழிற் பயிற்சியை அவர்களுக்கு வழங்குவதற்குத்தான் அரசு அதிகக் கவனம் செலுத்தவேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஆனால், எது இயலுமோ, இயன்றவரையில் அதைச் செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

முற்பகல் 9-50

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கல்வி சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்து வருகின்றார்கள். நடப்பு 1997-98 ஆம் ஆண்டிலே அரசு கலைக் கல்லூரி, பாலிடெக்னிக், ஐ.டி.ஐ. போன்ற நிறுவனங்கள் தொடங்குவதற்கு அரசின் குறிப்பில் உள்ளதா? அவ்வாறு இல்லாவிடில் தனியார் தொடங்க முன்வந்தால் அவர்களுக்கு அரசு அனுமதி வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தனியார் தொடங்க முன்வருவார்களேயானால், அவர்கள் அதற்குரிய அடிப்படையான வசதிகளைச் செய்து தரமுடியும் என்று ஆதாரம் காட்டுவார்களேயானால், அவர்கள் தொடங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறது. இந்த ஆண்டு கூட 30, 40 கல்வி நிலையங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு, அப்படி வழங்கப்பட்டதில் ஏ.ஐ.சி.டி.ஈ. மூலமாக அனுமதி வழங்குவதிலே சற்று தாமதம் ஏற்பட்டு, அதன் காரணமாக, 2, 3 திங்கள் கடந்ததால், துவக்கத்திலிருந்து 3 திங்கள் கடந்து விட்டதால் அந்தக் கல்வி நிலையங்கள் இந்த ஆண்டு தொடங்குமானால், மாணவர்கள் அதிகம் சேரமுடியாத நிலைமை ஏற்பட்டு, அந்தக் கல்வி நிலையங்கள் வெற்றிகரமாக இயங்கமுடியாது என்ற அடிப்படையில் அடுத்த ஆண்டு அந்தக் கல்வி நிலையங்கள் துவங்கிச் செயல்படலாம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஐ.டி.ஐ. போன்ற தொழிற் பயிற்சிக் கூடங்கள் தொழிலாளர் நலத்துறையின் மூலமாக ஒவ்வொரு ஒன்றியத்திலும் கூட ஏற்படுத்துவதற்கு அனுமதிக்கப்படுகிறது. இப்படி எது எது முடியுமோ அந்தந்த அளவில் அது செயல்படுத்தப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** வணக்கத்திற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு என்னுடைய தொகுதியிலே நேருபெருமான் பெயரால் ஓர் ஐ.டி.ஐ. துவங்குவதற்கு அனுமதித்த அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல என்னுடைய பொங்கலூர் தொகுதியிலே ஒரு கலைக் கல்லூரி அமைக்கவேண்டுமென்று சொல்லி, தனியார்கள் மூலமாக ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். அதற்கு அரசு அனுமதி அளிக்குமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, சற்று முன்னர் நான் தெரிவித்தது போன்று உரிய





விதிமுறைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டிருக்குமானால், அரசு அதை ஏற்றுக்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண்கள் 43, 44 - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் என்னுடைய அனுமதியைப் பெற்று அவசரமாக வெளியே போயிருக்கின்றார்கள்—ஆகையால், அவ்விரு வினாக்களும் ஒத்தி வைக்கப்படுகின்றன. வினா எண் 45, திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**45—**

**நலிந்தோர் குடும்ப நலத் திட்டத்தில் நிவாரணம் வழங்குதல்**

***7711— திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நலிந்தோர் குடும்ப நலத்திட்டத்தின் கீழ் குடும்பத் தலைவர் இறந்து விட்டால் அரசு நிவாரணம் வழங்கும்போது 18 வயது நிரம்பிய ஆண்பிள்ளை அக்குடும்பத்தில் இருந்தால் நிவாரணம் வழங்க இயலாது என்ற அரசு ஆணையைத் திருத்தி அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நலிந்தோர் குடும்ப நிவாரணத் திட்டத்தின்கீழ் நிவாரணம் வழங்குகிறார்கள். திருத்தி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற முறை கலைஞர் ஆட்சியில் 58 வயதிற்கு உட்பட்ட குடும்பத்தலைவர் இறந்துவிட்டால், தந்தை இறந்துவிட்டால், அவரது குடும்பத்தில் 18 வயது நிரம்பிய ஆண் பிள்ளை இருந்தாலும், குடும்ப நிவாரணத் திட்டத்தின்கீழ் நிவாரணம் வழங்கப்பட்டது. ஆனால் கடந்த ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் 18 வயது நிரம்பிய ஆண் பிள்ளை இருந்தால் என்ற ஒரு நிபந்தனையை விதித்து, நிவாரணம் வழங்க இயலாது என்ற ஒரு புதிய அரசாணையை வெளியிட்டு நலிந்தோரின் குடும்பத்திற்குக் கிடைக்கக்கூடிய அந்த நிவாரணத் தொகை கிடைக்காமல் செய்துவிட்டார்கள். மீண்டும் கலைஞர் ஆட்சி ஏற்பட்டுள்ள இந்தத் தருணத்தில் அந்த நலிந்தோர் நிவாரணத்

திட்டத்தின்கீழ் நிவாரணம் வழங்க இயலுமா, மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** தலைவர் அவர்களே, ஆதரவற்ற நிலையில் உள்ள தகுதி உள்ள குடும்பங்களுக்கு மட்டும் இத்திட்டத்தின்கீழ் நிவாரணம் வழங்கவேண்டுமென்பதுதான் இத்திட்டத்தின் நோக்கம். அத்துடன் தகுதி இல்லாதவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படக்கூடாது என்பதும்தான். எனவே, பொருள் ஈட்டும் மற்றும் வயது வந்த ஆண் வாரிசுதாரர்கள் இருந்தால் அவர்களது குடும்பங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் நிவாரணம் வழங்க வழிவகை இல்லை. உறுப்பினரின் உணர்வினை நான் மதித்து முதல்வரோடு கலந்துபேசி, பரிசீலித்து ஆவன செய்யமுடியுமானால் செய்வேன் என்ற உறுதியை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 46, திரு. ஆ.மு. முனிரத்தினம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**46—**

## பாலாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்

*** 2846— திரு. ஆ.மு. முனிரத்தினம்:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வேலூர் மாவட்டம், காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், மாமண்டூர் கிராமத்தில் பிரம்மதேசம் செல்ல பாலாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் மாவட்டம், காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், மாமண்டூர் கிராமத்தில் பிரம்மதேசம் செல்ல பாலாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ.மு. முனிரத்தினம், இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்ற பதிலை இங்கே கூறியிருக்கிறார்கள். இப்போது மாமண்டூரிலிருந்து பிரம்மதேசம் போக வேண்டும் என்று சொன்னால் கிட்டத்தட்ட 1½ கிலோ மீட்டருக்கு மேல் பாலாற்றை தாண்டிச் செல்ல வேண்டியிருக்கிறது. குறிப்பாக மழைக்காலங்களில், அந்த இடத்திற்குப் போக முடியாத ஒரு நிலை இருக்கிற காரணத்தினாலே, பெரும்பகுதி மக்கள் பிரம்மதேசம் செல்ல மிகவும் இடர்பாடு கொள்கின்ற காரணத்தினாலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒரு முறை மாண்புமிகு உறுப்பினருக்கு இதைப் பற்றி நேரில் தெரிவித்திருக்கிறேன். விதியின்கீழ் அவர் தொடுத்த கேள்விக்குப் பதில் அளிக்கிறேன். குறிப்பாக மாமண்டூர் கிராமத்திலிருந்து பிரம்மதேசம் செல்ல பாலாற்றின் குறுக்கே தரைமட்டத் தாம்போகிப் பாலம் கட்டுவது சிறந்தது அல்ல. போதுமான அளவுக்கு அந்தப் பாலம் உபயோகப்படாது. ஆகையால், பெரிய, உயர்ந்த பாலம் கட்ட வேண்டிய சூழ்நிலை இருப்பதாலும், அந்தப் பாலம் கட்டுவதற்கு ஏறத்தாழ 6 கோடி ரூபாய் செலவாகும் என்று தெரிவித்துள்ளதாலும், அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை இந்தத் துறை நிறைவேற்றுவதில்லை என்ற முடிவும் அவருக்குத் தெரியும். எனவே, சம்பந்தப்பட்ட துறைக்கு அவர் மீண்டும் தெரிவித்து, அதன்மூலம் அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கான முயற்சியை மேற்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிற இந்தப் பாலம் இரண்டு தொகுதிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினை மட்டுமல்ல, இரண்டு மாவட்டங்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையும்கூட 1989-லிருந்து இந்த மாமன்றத்திலே நான் இதை வலியுறுத்தி வருகிறேன். மாமண்டூர், பிரம்மதேசம் இரண்டும் என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய கிராமங்கள். அந்த ஊர்களைக் கடந்து நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய சொந்த ஊரான விழுப்புரத்திற்குச், செல்ல வேண்டுமென்று சொன்னால், மிக எளிதாகச் சென்று விடலாம். போக்குவரத்துத் துறை அமைச்சரிடத்திலே நான் ஏற்கெனவே கோரிக்கை வைத்திருக்கிறேன். மாமண்டூர் கிராமத்திலிருந்து மக்கள் விழுப்புரம் செல்ல

வேண்டுமென்றால், ஒன்று, ஆற்காடு போய் சுற்றிக் கொண்டு வர வேண்டும், அல்லது காஞ்சிபுரம் போய் வரவேண்டும். எனவே, இந்த முறை பகுதி-2 திட்டத்தின்கீழ் இந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டிருக்கிறது. எனவே, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் தன்னுடைய துறையின் மூலம் இதைச் செய்ய இயலவில்லை என்று சொன்னால், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடன் கலந்து இந்தப் பாலத்தைக் கட்டித்தர ஆவன செய்வார்களா என்றும் இதுகுறித்து மறுபரிசீலனை செய்யப்படுமா என்றும் நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணைக் கேள்விக்காக இணை உரிமை கேட்பது நல்லதல்ல. அவரே அந்த உரிய அமைச்சரிடத்தில் சொல்கின்ற வாய்ப்புப் பெற்றவர்; தகுதியையும் பெற்றவர்; எனவே, நான் அமைச்சரிடத்திலே தெரிவிக்க வேண்டும் என்று விரும்பினால் நிச்சயம் தெரிவிக்கிறேன். என் துறையைப் பொறுத்தவரையில் இது இயலாது என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் கட்டப்பட வேண்டிய பாலங்கள் அந்த 'நார்ம்சை' பின்பற்ற முடியாது என்ற காரணத்தினால், விடுபட்டிருக்கின்ற பாலங்களை ஊராட்சித் திட்டத்தின் நேரடித் தொடர்பு இல்லாமல் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களே நேரடியாகக் கட்டித்தர முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் உறுப்பினர் ஒவ்வொருவரும் அவரவருக்குரிய முறையில் கேள்வி நேரத்தைப் பயன்படுத்தி ஒரு வினாவை விபரீதமாக ஆக்கக் கூடாது. இந்தத் துறையைப் பொறுத்தவரையில் இவ்வளவு மதிப்பீட்டில்தான் இன்னின்ன பணிகளை மேற்கொள்ள இயலும் என்பது வரையறுக்கப்பட்டது. அதற்குட்பட்டிருக்குமானால், நிச்சயமாக இந்தத் துறை செய்வதற்குத் தயாராக இருக்கின்றது. ஆனால், அந்த வரம்பை மீறியிருக்கிற காரணத்தினால், அந்தப் பாலங்களை எடுத்துக் கொள்ள முடியாது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 47, திரு. பா. வேல்துரை, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**47—**

## சேரன்மகாதேவி ஒன்றியத்திற்குக் குடிநீர் வசதி

*** 5375— திரு. பா. வேல்துரை:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி ஒன்றியத்திலுள்ள உலகன்குளம், வெங்கட்ரெங்கபுரம் நெசவாளர் காலனி, பொன் மாநகர் ஆகிய பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாடு இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதனைப் போக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சேரன்மகாதேவி ஒன்றியத்திலுள்ள உலகன்குளம், வெங்கட்ரெங்கபுரம், நெசவாளர் காலனி மற்றும் பொன்மாநகர் ஆகிய நான்கு கிராமங்களும் 1996-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மறுஆய்வின்படி பகுதியளவு குடிநீர் பெறும் கிராமங்களாக வரையறுக்கப்பட்டுள்ளது. அதாவது 40 லிட்டருக்குக் கீழ் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது, சேரன்மகாதேவி அருகில் தாமிரபரணி ஆற்றினை நீர் ஆதாரமாகக் கொண்டு பணகுடி, வள்ளியூர் மற்றும் வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, ஆய்வுப் பணிகள் நடந்து கொண்டு வருகின்றன. மேற்குறிப்பிடப்பட்டுள்ள நான்கு கிராமங்களும் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிராமங்களுக்கு முழுமையாக குடிநீர் இல்லாமல் இருப்பது அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். பணகுடித் திட்டம் நிறைவேறுவதற்கு இன்னும் காலதாமதம் ஆகலாம். எனவே, ஏதாவது ஒரு திட்டத்தின் மூலமாக உடனடியாக அந்த கிராமங்களுக்கு தண்ணீர்

வழங்குவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா? மேலும் அமைச்சர் அவர்கள் பாப்பாகுடி, கடையன்குளம் போன்ற பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்தபோது, அந்தப் பகுதிகளிலே குடிநீர் முழுமையாக இல்லாத நிலையை அறிந்து உடனடியாக ஆய்வு செய்வதற்காக உத்தரவிட்டார்கள். அந்தத் திட்டங்கள் என்ன நிலைமையில் இருக்கின்றன? இந்த ஆண்டிலேயே நிறைவேற்றித் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய செயலைப் பாராட்டுகிறேன். நேரில் இருமுறை அவர்கள் தெரிவித்தார்கள். இதே பதிலை அவர்களுக்கு அப்போதும் சொல்லியிருக்கிறேன். இப்போது நான் குறிப்பிடுவது, இந்த 4 பகுதிகளில் குறிப்பாக 2, 3 இடங்களில் 20 லிட்டருக்குக் கீழும், 10 லிட்டருக்கு மேல் 3 இடங்களிலும் கிடைக்கிறது. ஒரே ஒரு இடத்தில் தான் குறிப்பாக இந்தப் பிரச்சினையில் சுத்தமாக தண்ணீர் கிடைக்கவில்லை என்ற நிலைமை இருக்கிறது. இருப்பினும் இந்த தாமிரபரணி ஆற்றிலே உள்ள நீர் ஆதாரம் கொண்டு எடுக்கப்பட்டிருக்கின்ற இந்தத் திட்டத்தை எவ்வளவு விரைவாக நிறைவேற்ற முடியுமோ அவ்வளவு விரைவாக நிறைவேற்றுவதற்கான ஆய்வுகளை ஆய்வுத்துறை நடத்தி வருகிறது என்பதைத் தெரிவித்திருக்கிறேன். அது முடுக்கிவிடப்பட்டிருக்கிறது. நிச்சயமாக இந்தப் பணி எடுத்துக்கொள்ளப்படும். எவ்வளவு விரைவாக முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக முடிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. சேதுநாதன்.

**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்திற்கும், விழுப்புரம் மாவட்டத்திற்கும் வீராணம் திட்டத் தண்ணீர் வருவதாக அறிவித்தார்கள். அந்தத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** தலைவர் அவர்களே, இந்தத் துணைக் கேள்வி மூல வினாவிற்குத் தொடர்புடைய கேள்வி அல்ல. ஆகையினால் தனிக் கேள்வி போடவும்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு, நீங்கள் கேட்கப்போவது மூல வினாவிற்குத் தொடர்புடைய கேள்வியா?

**திரு. மு. அப்பாவு:** தலைவர் அவர்களே, தொடர்புள்ள கேள்விதான். பணகுடி, வள்ளியூர் ஆகிய பேரூராட்சி மன்றங்களுக்கும், அதனுடைய வழியோர கிராமங்களுக்கும் தாமிரபரணியிலிருந்து குடிநீர் கொண்டு வருவதற்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்காக கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 31-ஆம் தேதிக்குள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து மதிப்பீடு தயாரித்துத் தருவதாக மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலேயே உறுதி அளித்தார்கள். அடுத்த ஆண்டு முடிகின்ற நிலை ஏற்பட்டபோது இன்னும் அதனுடைய முழுமையான மதிப்பீடு தயாரிக்கவில்லை என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு சென்றபோது விரைவாக நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்கள். எவ்வளவு காலத்திற்குள் மதிப்பீடு தயாரித்து அரசினுடைய அனுமதியைப் பெற்று திட்டம் ஆரம்பிக்கப்படும் என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது எப்படித் தொடர்புடைய கேள்வியாகும்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** தலைவர் அவர்களே, தாமிரபரணி ஆற்றைத் தவிர இந்தக் கேள்விக்கு தொடர்பு வேறு எதுவும் கிடையாது. தாமிரபரணி ஆற்றில் ஏராளமான திட்டங்கள் போடப்பட்டு நீராதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. எனவே இதற்கு தனிக் கேள்வி போட வேண்டும். இதற்கான பிரச்சினையை நேரிலே அவர்களிடத்தில் நான் தெரிவித்திருக்கிறேன். இந்த மாமன்றத்தில் அவர் தனிக் கேள்வி எழுப்புவாரானால் தக்க பதிலை அளிக்கவும் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 48, திரு. வெ. அ. ஆண்டமுத்து, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**48—**

## தோட்டத் தொழிலாளர்களுக்கு தினக்கூலி வழங்குதல்

***1840—திரு. வெ. அ. ஆண்டமுத்து:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானிசாகரில் அரசு தோட்டத் தொழிலாளர்களுக்கு, கோயம்புத்தூர் வேளாண்மைக் கல்லூரியில் பணிபுரியும் அரசுத் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் தினக்கூலிக்குச் சமமாகக் கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பவானிசாகரில் அரசு தோட்டத் தொழிலாளர்களுக்கும், கோவை வேளாண்மைக் கல்லூரியில் பணிபுரியும் அரசு தோட்டத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் தினக்கூலிக்குச் சமமாக 13-9-1996 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. வெ. அ. ஆண்டமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை வேளாண் கல்லூரியில் பணிபுரியும் அரசு தோட்டத் தொழிலாளர்களுக்கும் பவானிசாகர் அரசு தோட்டத் தொழிலாளர்களுக்கும் கொடுக்கும் சம்பள ஊதியம் மிகவும் வித்தியாசமாக இருந்து வருகிறது. மேலும் 10, 15 ஆண்டுகளாக அங்கே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வேலை நிரந்தரம் செய்யப்படவில்லை. அவர்களுக்கு பி.எஃப் போன்ற சலுகைகளும் வழங்கப்படவில்லை. நம் அரசுத் தோட்டத்திலே 15 வருஷங்களாக வேலை செய்யும் அவர்களுக்கு நம் அரசிலே கிடைக்கும் சலுகைகள் அவர்களுக்கும் கிடைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில்தான் 'ஏ' பிரிவு வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு தினக்கூலியாக ரூ. 22 எனவும் 'பி' பிரிவு வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு தினக்கூலியாக ரூ. 20 எனவும் வழங்கப்பட்டு வந்ததை இந்த அரசு பொறுப்பு ஏற்றவுடன் அரசு ஆணை எண் 8, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை நாள் 10-3-1997-ல் 'ஏ' பிரிவுக்கு ரூ. 32 எனவும், 'பி' பிரிவுக்கு ரூ. 29 எனவும் அதைப்போல கோவை பவானிசாகரில் உள்ள அனைத்துத் தொழிலாளர்களுக்கும் ஒரே அடிப்படையிலே ஊதியம், தினக்கூலி வழங்கப்பட வேண்டும் என்று ஆணையிடப்பட்டிருக்கிறது. இவர்களையெல்லாம் நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்க வேண்டும் என்று இங்கு மாண்புமிகு உறுப்பினர் கேட்டார். 1989-90-ல் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு இருந்தபோதுதான் இதுபோன்ற பணியாளர்களை படிப்படியாக





நிரந்தரப்படுத்த வேண்டும் என்று ஒரு முறை வகுக்கப்பட்டு, ஒரு ஆண்டுக்கு 150 தொழிலாளர்கள் வீதம் நிரந்தரப் பணியாளர்களாக அவர்கள் ஆக்கப்பட்டு வருகிறார்கள்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 49, திரு. ஜி. பி. வெங்கிடு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**49—**

**காளான் பண்ணைகள் தொடங்குதல்**

*** 9249-திரு. ஜி பி. வெங்கிடு:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடல் வளர்ச்சிக்குத் தேவையான பலவித சத்துக்களைக் கொண்ட 'காளான் உற்பத்திக்கு' அரசு உதவி செய்து உற்பத்தியைப் பெருக்க அரசு காளான் பண்ணைகள் தொடங்குமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மத்திய அரசு திட்டத்தின்கீழ் இரண்டு காளான் விதை உற்பத்தி மையங்கள் தலா ரூ. 11.50 லட்சம் மதிப்பீட்டில் மாதவரத்திலும், உதகமண்டலத்திலும் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

**திரு. ஜி. பி. வெங்கிடு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற காய்கறிகள், பழ வகைகளைவிட புரதச் சத்து மிகுந்த காளான் மக்களுடைய உணவு வகைகளில் ஒன்றாகி வருகிறது. எத்தனையோ தனியார்கள் அவர்களுடைய பண்ணையில் இதை உற்பத்தி செய்து விற்பதைக் காட்டிலும் அரசுப் பண்ணைகள் மூலம் அந்த வகையான காளான்களை உற்பத்தி செய்து கொடுத்தால் ஏழை எளிய மக்களுக்கு எளிய முறையில் குறைந்த விலையில் கிடைக்க வாய்ப்பாக இருக்கும் என்பதால் அரசுப் பண்ணைகளில் காளான் உற்பத்திக்கு ஏற்பாடு செய்ய இயலுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையில் மகளிர் பண்ணைத் திட்டத்தின் கீழ் பெண்களுக்கு காளான் வளர்ப்புப் பற்றிய பயிற்சி

இப்போது அளிக்கப்பட்டு வருகிறது. அதுவும் கோவையில் ஒவ்வொரு மாதமும் 5 ஆம் தேதி காளான் வளர்ப்புக்காக ஒரு நாள் பயிற்சி நடத்தப்பட்டு இதுவரை 176 நாட்கள் பயிற்சியை கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகம் நடத்தி உள்ளது. இந்தப் பயிற்சியின் மூலம் இதுவரை சுமார் 10,500 பேர் பயனடைந்திருக்கிறார்கள். ஆகவே, இப்படி பயிற்சி பெற்றவர்கள் தனியாக காளான் வளர்ப்புக்கு அரசினுடைய உதவியைக் கோரினால் அவர்களுக்கு மத்திய, மாநில அரசுகள் மானியம் வழங்கி அவர்களை ஊக்கப்படுத்துகிறது. அல்லது காளான் வளர்ப்புக்கு அவர்கள் திட்டமிடுகின்ற முதலீட்டுக்கு ஏற்றவாறு மானியங்கள் வழங்க மத்திய, மாநில அரசுகளிடம் திட்டங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் முயற்சி செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காளான்கள் காய்கறி மார்க்கெட்டில் கிடைப்பது இல்லை. அது எளிதாகக் கிடைப்பதற்கு அரசு என்ன ஏற்பாடு செய்திருக்கிறது? காளான்களில் பலவகைகள் இருக்கின்றன. சில காளான்களைச் சாப்பிட்டால் காது செவிடாகிறது என்று கிராமப்புறங்களில் எல்லாம் பேசுகிறார்கள். (சிரிப்பு) ஆகவே, இதையெல்லாம் கருத்தில் கொண்டு இப்படிப்பட்ட காளான் சாப்பிட்டால் காது செவிடாகாது என்று சொல்லி அரசு வேளாண்மைத் துறையிலிருந்து ஏதாவது பிரச்சாரம் செய்யுமா? அது மட்டுமல்லாமல் மழை பெய்யும்போது மின்னல் அடித்து காளர்ன்கள் தன்னைப்போல முளைத்து விடுகின்றன. அந்தக் காளான்களில் புராதனச் சத்துக்கள் அதிகமாக இருக்கிறதா? அல்லது வேளாண்மைத் துறையிலிருந்து விலை கொடுத்து வாங்கிப் பயிரிடுகிற காளானில் புராதனச் சத்து (சிரிப்பு) அதிகமாக இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் தெரிய தமிழில் புராதனச் சத்து என்று ஒரு சத்தே கிடையாது. (சிரிப்பு) அது புரதச் சத்து.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 3 காளான் ரகங்களை வெளியிட்டு இருக்கிறது. கோ.1, ஏ.பி.கோ.1, எம்.டி.யூ.1. இந்தக் காளான்களை மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் சாப்பிடலாம், காது





செவிடாகாது. (சிரிப்பு) காளான்கள் எளிதில் காய்கறியைப் போல் மார்க்கெட்டில் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். அது கடைகளில்தான் விற்கும், காய்கறிகள் விற்கக்கூடிய மார்க்கெட்டில் கொண்டு வந்து அதனை விற்பனை செய்வது இல்லை. கடைகளில் வைத்துதான் அதை விற்பனை செய்கிறார்கள். ஆக அவர்கள் சொல்லுவதுபோல் இந்தக் காளான்களை வளர்த்து விற்பனை செய்வதில் ஈடுபட்டு இருப்பவர்கள் விஞ்ஞான அடிப்படையில்தான் இந்தக் காளான்களை வளர்க்கிறார்கள். அது உடல் நலத்திற்குப் பயனுள்ளதாக இருக்கிறது என்றுதான் இதுவரையில் தகவல் வந்திருக்கிறதே தவிர அவர் சொன்னதைப்போல் அது ஒரு மோசமான பொருளாக, உடல் நலத்தை பாதிக்கக்கூடிய வகையில் இல்லை என்ற தகவல்தான் வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காளானுக்கு எதிரி காளான்தான் என்கிற கிராமியப்பழமொழிதான் உண்டே தவிர அது உயிரைக் கொல்லுவதாக இதுவரையில் கிராமங்களில் எந்தப் பேச்சும் இல்லை. ஆகவே, இந்தக் காளானை வளர்ப்பதற்குத் தனியார்கள் 3 நாட்கள் பயிற்சிக்கு 500 ரூபாய், 1,000 ரூபாய் என்று பறித்துக் கொள்கிறார்கள். ஆனால் சரியான பயிற்சியை அவர்கள் அளிப்பதில்லை. ஒன்றியந் தோறும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் விவசாயப் பண்ணைகள், மாதிரி விவசாயப் பண்ணைகள் அமைக்கப்படும் முன்பே என்று சொல்லியிருக்கிறார்கள். அத்தகைய விவசாயப் பண்ணைகள் மூலமாகவாவது, விவசாயிகளுக்குத் துணைத் தொழிலாகப் பயன்படக் கூடிய இந்தக் காளான் வளர்ப்புக்குத் தமிழகம் முழுவதும் ஒன்றியந்தோறும் பயிற்சியளிக்க வாய்ப்பு ஏற்படுத்தித் தருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் எழுப்பிய வினாவின் அடிப்படையிலேதான் இப்பொழுது வேளாண்மை மகளிர் பண்ணைத் திட்டத்தின் கீழே இந்தப் பயிற்சியை நாம் தருகிறோம். அதன்மூலம் 10,500 பேர் பயிற்சி பெற்றிருக்கின்றார்கள். இந்தப் பயிற்சி மாவட்ட

அளவிலும் வழங்கப்பட வேண்டுமென்று இப்பொழுது நாம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கின்றோம். இதற்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. அந்தப் பயிற்சி முறைப்படி விவசாயப் பண்ணையிலே தொழிலிலே ஈடுபட்டிருக்கக்கூடிய மகளிருக்கு வழங்குவதன் மூலம் அவர்களுக்கு ஒரு நல்ல நிரந்தர வருமானம்கூட வரக்கூடிய வகையிலே இது அமையும். இன்னும் சொல்லப்போனால், காளான் ஏற்றுமதிக்கான வாய்ப்பு நிறைய இருக்கிறது. அந்த அடிப்படையிலே இந்தத் தொழில் நல்ல வளர்ச்சி அடைவதற்கு இந்த அரசாங்கம் எல்லாவிதமான உதவிகளையும் செய்யும் என்பதை நான் இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், ஒவ்வொரு கேள்வியிலும் உங்களுக்கு அனுமதி கொடுக்க முடியுமா? (குறுக்கீடு) ஒவ்வொன்றிலும் கையை நீட்டிக் கொண்டிருக்கின்றீர்களே, ஒன்றே ஒன்றுதான். சரி கேளுங்கள். பின் வரிசையிலே இருப்பவர்களுக்குதான் நான் முன்னுரிமை கொடுப்பேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் காளான் சத்துள்ளது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லுகின்றார்கள். நாம் I.C.D.S. திட்டத்தை வைத்திருக்கின்றோம், இப்போது நிலக்கோட்டையிலே Integrated Child Development Scheme-படி அங்கே 120 பால்வாடிகள் வைத்து அந்தக் குழந்தைகளுக்கு நாம் எல்லாவிதமான சத்துணவையும் கொடுத்துக் கொண்டு வருகிறோம். அப்படியிருக்கின்ற இடங்களிலேயாகிலும் ஒரு 5 ஏக்கரை லீசுக்கு எடுத்து அரசாங்கமே, அந்தத் துறையைச் சேர்ந்தவர்களே, காளானை வளர்த்து, அவர்களுக்கு உணவு அளிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கினால், இது மற்றவர்களுக்கெல்லாம் தெரியக்கூடிய ஒரு சூழ்நிலை வருமே என்பதற்காகத்தான் இதை நான் சொல்லிக்கொள்கிறேன். ஆகையினால், அப்படி இந்தத் திட்டத்தை அமைச்சரவர்கள் நிறைவேற்றுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உடனடியாக அதை ஏற்பதற்கு இயலாவிட்டாலும், பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆ ஞானசேகரன்.





**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதன் நலத்துடன் வாழ்வதற்கு உதவுகின்ற காளான், பயிர்களை அழிக்கின்ற பூச்சிகளைக் கொல்லுவதற்குண்டான சக்தியைப் பெற்றிருக்கிறது என்று கூறப்படுகிறது. எனவே, நமது அரசு காளானைப் பயன்படுத்தி, பூச்சிக் கொல்லி மருந்தைத் தயாரிப்பதற்கு நடவடிக்கையெடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, அது ஆராய்ச்சிக்கு உரியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காளான் சாப்பிட்டு யாருக்கும் காது செவிடாவது இல்லை. இருந்தாலும் சில அரசியல்வாதிகளைச் சொல்கிறபொழுதுதான், "நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த காளான்" என்று சொல்கிறார்கள். இப்பொழுது மட்டன் விலையை எல்லாம் பார்த்தால் 105 ரூபாய்க்கு விற்கிறது. ஆனால், காளானைப் பொறுத்தவரையில் மட்டனைப்போல அதே அளவிற்கு வாசனையோடு காளான்களை சமைக்க முடிகிறது. ஆகவே, மட்டனுக்கு பதிலாக காளான்களைப் பயன்படுத்தக்கூடிய அளவில், நம்முடைய அமைச்சரவர்கள் காளான் உற்பத்தியை ஒவ்வொரு கிராமத்திலும் கொண்டு வந்து சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா? இப்பொழுது எத்தனை டன் காளான்கள் இப்படி நம்முடைய தமிழகத்தில் பயிராகின்றது என்பதை அமைச்சரவர்கள் அவைக்குத் தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை டன் என்ற அந்த விவரம் என்னிடம் இல்லை. ஆனால் தனியார் இதுபோன்ற காளான் வளர்ப்பிலே அதிக ஆர்வம் காட்டி, இப்பொழுது Tamil Nadu Agro Industries (TAI) நிறுவனத்தின் மூலம்கூட, செங்கல்பட்டுக்கு அருகே TATA's Dakshina Agro Farm என்ற நிறுவனம் 16 கோடி ரூபாய்ச் செலவிலே காளான் உற்பத்தி செய்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யத் திட்டம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு மாநில அரசு 60 இலட்சம் ரூபாய் மானியமும், மைய அரசு 60 இலட்சம் ரூபாய் மானியமும் வழங்கப்பட உள்ளது. முதல் தவணையாக மாநில அரசால் 40 இலட்சம் ரூபாய் இந்த நிறுவனத்திற்கு மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இது உற்பத்தி செய்ய ஆரம்பிக்கும்போது மீதமுள்ள ரூபாய் 80 இலட்சமும்

[1997 அக்டோபர் 16

மானியமாக வழங்கப்படும். இப்படித் தனியார் முன்வருகிறபோது அவர்களுக்கு மானியமாக மத்திய, மாநில அரசுகளின் நிதி தாராளமாகக் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. அதைப் பயன்படுத்திக்கொண்டு முன் வருவார்களேயானால், இந்த அரசாங்கம் அப்படிப்பட்டவர்களை ஊக்கப்படுத்தும்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 50, திரு. பால. ஆனந்தன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**50—**

**தரைப்பாலத்தைப் புதுப்பித்தல்**

*** 26340-திரு. பால. ஆனந்தன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் ஏற்பட்ட மழையினால் சேதமடைந்த வந்தவாசியை அடுத்த சேதராக்குப்பம் தரைப்பாலத்தைப் புதுப்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டி முடிக்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): வினாவில் குறிப்பிட்டுள்ள தரைப்பாலம் வெள்ள நிவாரண நிதியின்கீழ் தற்காலிகமாக சீரமைக்கப்பட்டுள்ளது. அரசின் நிதி நெருக்கடி காரணமாக அண்மையில் புதுப்பாலம் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. பால. ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சேதராக்குப்பம் தரைப்பாலம் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. இந்தப் பாலத்தின் வழியாக நேரிடையாக 10 கிராமங்களும், மறைமுகமாக 50 கிராமங்களும் பயனடையக்கூடிய நிலையிருக்கிறது. கடந்த டிசம்பர் திங்களிலே ஏற்பட்ட மழையினால் இந்தப் பாலத்தின் முக்கால் பகுதி சீரழிந்துவிட்டது. இதை மத்திய



1997 அக்டோபர் 16]

அரசின் ஆய்வுக் குழுவினர் நேரிடையாகப் பார்வையிட்டுச் சென்றிருக்கிறார்கள். இந்தப் பகுதியிலே பள்ளி செல்கின்ற மாணவர்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் அதிகமாக இதைப் பயன்படுத்துகின்ற காரணத்தினால், பாலம் இல்லாதபட்சத்தில் 12 அல்லது 13 கிலோ மீட்டர் சுற்றிவரக்கூடிய சூழ்நிலையிருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறப்பு சிரத்தை எடுத்துக்கொண்டு, மேலான கவனத்தைச் செலுத்தி, சிறப்புத் திட்டத்தின்கீழ் புதுப்பித்துத் தர ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாவட்டத்திலே மட்டும் இந்த ஆண்டு 6 பாலங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஒரு மாவட்டத்தில் ஒரே ஆண்டில் 6 பாலங்கள் எடுத்திருப்பது அதிகம். அதுவும் குறிப்பாக, கடந்த 20 ஆண்டுகளில் தமிழகத்தில் பாலங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகையே 200 கோடி ரூபாய்தான் இருக்கும். ஆனால், இந்த 1-1/2 ஆண்டுகளிலேயே 250 கோடி ரூபாய் நபார்ட் திட்டம் மற்றும் ஹட்கோ வங்கியின் நிதியுதவி மூலமாக பாலங்களுக்காக ஒதுக்கியுள்ளது இந்த அரசு. ஆகவே, இதுபோன்ற முக்கியத்துவத்தை உணர்ந்து, வருகின்ற காலங்களில் நபார்ட் திட்டத்தின்கீழ் இதனை எடுக்க முடியுமா என்பதை அரசு ஆய்வு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.என். சுப்பிரமணி.

**திரு. பி. என். சுப்பிரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996-ல் வெள்ளத்தினால் சேதமடைந்த ஆற்காடு-இராணிப்பேட்டை செல்லும் பாலாற்றிலுள்ள தரைப்பாலம் பழுதடைந்துள்ளதால், சென்னை-பெங்களூர் செல்லக்கூடிய கனரக வாகனங்கள் இந்தப் பாலத்தின் மேல் செல்ல முடியாது. ஆகவே, ஆற்காடு-இராணிப்பேட்டை செல்லும் பாலாற்றிலுள்ள தரைப்பாலத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பு அளித்த பதிலிலேயே இதற்கும் பதில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 51, திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

51—

## நெடுந்தொலைவுப் பேருந்துகளில் சிறுவர்களுக்குக் கட்டணம் நிர்ணயம் செய்தல்

***6387-திரு. எம். ஆண்டி அம்பலம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெடுந்தொலைவு அரசுப் பேருந்துகளில் சிறுவர்களுக்கான அரைக் கட்[illegible]ணம் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது?

(ஆ) அ[illegible]கான காரணங்கள் யாது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 3 வயதிலிருந்து 12 வயது வரை அல்லது உயரம் 130 சென்டி மீட்டருக்குள் இருந்தால் அப்படிப்பட்ட சிறுவர்களுக்கு அரைக் கட்டணம் வ[illegible]லிக்கப்படுகிறது.

(ஆ) 1989-ஆம் வருடத்தில், தமிழ்நாடு மோட்டார் வாகன விதி 230-ன்படி சிறுவர்களுக்கான அரைக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**திரு. எம். ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச பஸ் பாஸ் கொடுப்பது போல, நலிந்த, மிகமிக பின்தங்கிய ஏழைக் குழந்தைகளுக்கு பஸ் பாஸ் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்கு பஸ் பாஸ் கொடுக்கின்றபோது நலிந்தவர்களுக்கு மட்டுமல்லாமல் எல்லோருக்கும் சேர்த்துத்தான் கொடுக்கப்படுகிறது. ஆகவே, அதிலே தனியாக வரையறை எதுவும் தேவையில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்து மாணவர்களுக்குமே கொடுக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். எஸ். ராஜ்குமார் மன்றாடியார்.



**திரு. என். எஸ். ராஜ்குமார் மன்றாடியார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்கு, படிக்கச் செல்ல நகரப் பேருந்துகளில் இலவச பஸ் பாஸ் கழக அரசால் கொடுக்கப்படுகிறது. இதனை நகரப் பேருந்து அல்லது புறநகரப் பேருந்து ஏதாவது ஒன்றுக்குக் கொடுக்கச் செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரப் பேருந்துகளில் கொடுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே தெரிவித்தார்கள். நகரப் பேருந்துகள் இல்லாத இடங்களில் புறநகரப் பேருந்துகளில் இந்த பஸ் பாஸ் சலுகை வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். எஸ். பொன்முடி.

**திரு. எஸ். எஸ். பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட கேந்திர வித்தியாலயா மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கப்படுகிறது. கோவை மாவட்டப் பேருந்துகளில் வழங்கப்படுவதில்லை. மற்ற மாவட்டங்களில் உள்ள நிலை தெரியவில்லை. அவர்களுக்கும் பஸ் பாஸ் வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேற்றுமுன்தினம் கூட விண்ணப்பம் கொடுத்திருக்கிறார். அது அரசின் பரிசீலனையில் உள்ளது. மற்ற இடங்களில் வழங்கப்படுமானால், கோவை மாவட்டத்திற்கும் வழங்கப்படும்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குழந்தை. தமிழரசன்.

**திரு. குழந்தை. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பேருந்துகளில் மாணவர்களுக்கு இப்போது செல்வதற்கு பஸ் பாஸ் வழங்கப்படுகிறது. காலை வேளைகளிலும், மாலை வேளைகளிலும் மட்டுமாவது, பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள் செல்லும் வழிகளில் போகும் தனியார் பேருந்துகளில் செல்வதற்கு பஸ் பாஸ் வழங்க ஆணை பிறப்பிக்க ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1997 அக்டோபர் 16

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்கள் நடத்துகிற பேருந்துகளில் கொடுக்கப்படுகிற சலுகைகளுக்கு அரசிடமிருந்து மானியம் கிடைக்கிறது. தனியார்களும் அந்தச் சலுகைகளைக் கொடுக்க வேண்டும் என்று சொன்னால், அவர்களும் அரசு மானியத்தைக் கேட்பார்கள். ஆகவேதான், தனியார்களை நாம் வற்புறுத்த முடியாது. ஆனால் அந்தச் சங்கமே முடிவு செய்து மாணவர்களுக்கு ஹாஃப் - பாதி கன்செஷன் கொடுப்பதாக உறுதி அளித்திருக்கிறது. அந்தப் பாதி கன்செஷனை வேண்டுமானால் பயன்படுத்திக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. நடராஜன்.

**திரு. டி. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் அமைக்கப்பட்டிருப்பதுபோல் பொருள் போக்குவரத்துக் கழகம், பார்சல் சர்வீஸ், அமைக்க அரசு முன்வருமா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஏற்கெனவே இருக்கிற நிகழ்வு. ஆனால், இந்தக் கேள்விகள் எல்லாம், மூலக்கேள்வியிலிருந்து விலகி அரை டிக்கட் பற்றி கேட்டுவிட்டு, மாணவர்களுக்கான பஸ் பாஸ் பற்றி போய், இப்போது கேள்விகள் அனைத்தும் மற்ற சைடுகளுக்கும் சென்று கொண்டிருப்பது பதில் அளிக்க வசதியாக இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் என்று அறிவித்த காரணத்தால் கிராமங்களிலுள்ள பள்ளிக்கூடங்களிலே மாணவர்களுடைய எண்ணிக்கை குறைகின்றது. பள்ளிக்கூடங்களையே பூட்ட வேண்டிய ஒரு நிலை உள்ளது. எனவே, கிராமங்களிலே உள்ள பள்ளிகளிலே, எட்டாவது வகுப்பு வரை இருக்கிறது என்று சொன்னால், ஒன்பதாம் வகுப்பிலிருந்துதான் மாணவர்களுக்கு பாஸ் என்று ஏதாவது ஒரு விதிமுறை வைக்க முடியுமா என்று அறிய ஆசைப்படுகின்றேன்.



1997 அக்டோபர் 16]

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பஸ் பாஸே கூடாது என்று சொல்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. கே. மணி.

**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கக்கூடிய இலவச பஸ் பாஸ் என்பது பள்ளி ஆரம்பக் காலத்திலேயே வழங்கப்படுவதில்லை. கடந்த மாதம்கூட என்னுடைய தொகுதியிலே இன்னும் வழங்கப்படவில்லை என்று சொல்லி பள்ளித் தலைமையாசிரியர் அவர்கள் சென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போல, கீழ்க்கட்டளையிலேயிருந்து குமார் என்ற மாணவன் நேற்றுகூட என்னிடத்திலே சொன்னான். ஆகவே, குறிப்பிட்ட காலத்திலேயே பஸ் பாஸ் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும். அதே நேரத்திலே பத்தாம் வகுப்பு படித்துவிட்டுத்தான் பிளஸ் 2 செல்கிறார்கள். அந்த வகையிலே ஐ.டி.ஐ. படிக்கக்கூடிய மாணவர்களுக்கும், பாலிடெக்னிக் படிக்கக்கூடிய மாணவர்களுக்கும் இலவச பஸ் பாஸ் வழங்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டி, விரும்பி, வற்புறுத்திக் கேட்டு, அவ்வாறு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய காலத்திற்குள் பஸ் பாஸ்களைக் கொடுக்க வேண்டும் என்றுதான் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பள்ளியில் மாணவர்கள் சேர்க்கைபற்றி தலைமையாசிரியர்கள் சரியான விவரங்களைக் கொடுக்க தாமதம் ஏற்படுகிற காரணத்தால் இது போன்ற தாமதங்கள் ஏற்படுகின்றன. நேற்றைக்கு முதல் நாள்கூட செங்கல்பட்டு மாவட்டத்தினுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் அடுத்த ஆண்டிற்கு பஸ் பாஸ் வழங்குவதற்கு இப்போதே ஏற்பாடுகள் செய்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுபோல ஒவ்வொரு மாவட்டத்திலும், முறையாக அந்த மாணவர்களுக்கான, அடுத்த ஆண்டு கொடுக்க வேண்டிய பஸ் பாஸுக்கான சலுகைக்காக விண்ணப்பித்து, அதற்கான ஏற்பாடுகளைச் செய்தால், ஜூன் மாதத்திலேயே மாணவர்களுக்குக் கொடுப்பதற்கு வாய்ப்பாக அமையும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்கான முயற்சியை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலாயுதன் அவர்கள் கூறியதைப்போல ஒரு ஊரிலே எட்டாம் வகுப்பு வரை இருந்தால், அந்த ஊர் மாணவர்களுக்கு பஸ் பாஸ் தேவையில்லை என்ற நிலையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊரில் இருந்துதான் படித்தாக வேண்டும் என்று யாரையும் நாம் கட்டுப்படுத்த முடியாது. ஆனால், அந்த ஊரிலே எட்டாம் வகுப்பு இருந்தாலும், அந்த வர் மாணவன் வெளியூர் சென்று படிக்க அவருக்கு விருப்பம் இருக்கும் என்று சொன்னால், அவருக்கும் பஸ் பாஸ் வழங்க வேண்டிய கடமை இந்த அரசுக்கு இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அது மாணவர்களுடைய விருப்பத்தைப் பொறுத்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பேருந்துகளிலே பள்ளி மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்குவதைப் போல, தனியார் பேருந்துகளிலேயும் வழங்கப்பட வேண்டும் என்ற கருத்து பரவலாக இருக்கிறது. ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஒரு விளக்கம் அளித்திருக்கிறார்கள். இருந்தாலும் அந்த விதியைத் தளர்த்தி, தனியார் பேருந்துகளிலேயும் பள்ளி மாணவர்களுக்கு, முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உடல் ஊனமுற்றவர்களுக்கு அரசுப் பேருந்துகளிலே வழங்குவதுபோல, சலுகைகள் வழங்க வேண்டும் என்றும் அரசு அதற்கான ஆணையிடுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே தெளிவாக இதற்கு பதில் சொல்லியிருக்கிறேன். அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலே, பேருந்துகளில் கொடுக்கப்படுகிற சலுகைகளுக்கு அரசு மானியம் கொடுக்கப்படுகிறது. நாளைக்கு, தனியார்களும் சலுகைகள் கொடுத்துவிட்டு மானியம் கேட்பார்கள். அவர்களுக்கும் மானியம் கொடுக்க வேண்டியிருக்கும். அதை, 10 டிக்கெட்டுக்கு 15 டிக்கெட் என்று எழுதிக் கொடுத்துவிட்டு கேட்பார்கள். இந்த பைனான்ஷியல் இன்வால்வ்மென்ட் நமக்கு இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் கொடுக்கவில்லை. ஆனால் அவர்களாக முன்வந்து நடத்தினால் அதிலே நமக்கு எந்தவிதமான தடங்கலும் இல்லை. அரசு வேண்டுமானால் அந்தச் சங்கத்தைக் கேட்டுக்கொள்ளும்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை.

*முற்பகல் 10-25*

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுந்தூரப் பேருந்துகளில் அரை டிக்கெட்டுகள் ஏறி உட்காரும்போது, டிக்கெட் கொடுக்கும்போது பெற்றோர்களோடு உட்காருகிறார்கள். திடீரென்று கண்டக்டர் வந்து இன்னொரு சீட்டில் கொண்டு போய் உட்கார வைத்துவிடுகிறார். எனவே, இந்த அரை டிக்கெட்டுகளுக்கென்று பேருந்துகளில் தனியாக ஒரு சீட்டு ஒதுக்கித் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரை டிக்கெட்டுகளுக்கென்று பேருந்துகளில் இருக்கை செய்யவேண்டுமென்று சொன்னால், பேருந்துகளில் எத்தனை சீட்டுகளை ஒதுக்குவது என்பதெல்லாம் பிரச்சினையாக இருக்கும். எனவே, அது நடைமுறைக்கு ஒத்துவராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 52, டாக்டர் இ. எஸ். எஸ். இராமன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**52—**

### திருத்தணி கோவிலுக்கு மின் இழுவை உந்து இயக்குதல்

***10089-டாக்டர் இ. எஸ். எஸ். இராமன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி கோவிலுக்கு மின் இழுவை உந்து விடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

[1997 அக்டோபர் 16

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் இருக்கையில் இல்லை, திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி திருக்கோயிலில் இழுவை இயந்திரம் அமைக்கப்பட வேண்டும் என்பது அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாளைய கோரிக்கை. நான் பொதுக் கணக்குக் குழுவின் சார்பாக அங்கே சென்றிருந்தபோது, ஏராளமான பக்தர்கள் வந்து என்னிடம் மனு கொடுத்தார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வளர்ந்து வருகின்ற அமைச்சர். *(சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் இரண்டு பேருக்கும் வேறு ஒரு தொடர்பு இருப்பது எனக்குத் தெரியும். *(பலத்த சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. ச. அழகிரி:** எனக்கு பேரவைத் தலைவர் அவர்களோடு எந்தவிதமான தொடர்பு இருக்கிறதோ, அதே தொடர்புதான் அமைச்சர் அவர்களோடும் இருக்கிறது. *(சிரிப்பு)* எனவே, அமைச்சர் அவர்களுக்கு மற்றவர்களுடைய அருள் இருப்பதைவிட, ஆண்டவன் அருள் இருக்குமேயானால், அந்த வளர்ச்சி இன்னும் அதிகமாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு ஏற்கெனவே ஆண்டவர் அருள் தொடர்ந்து இருக்கிறது. 'ஏற்கெனவே இந்த நாட்டை ஆண்டவர்'. 'இப்பொழுதும் ஆண்டு கொண்டிருக்கின்றவர்' அருள் இருக்கிறது. *(சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வி, திருத்தணி கோயிலுக்கு இழுவை உந்து விடுவது குறித்து. அந்தப் பகுதி பொது மக்கள் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார்கள் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால், பழனி கோயிலைப் போல



1997 அக்டோபர் 16 ]

இந்தத் திருத்தணி கோயிலுக்கு உள்ள அமைப்பு செங்குத்தாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இரண்டாவது, ஏற்கெனவே இடம் அகன்று, அது விரிவாகவும் மலையில் பேருந்து விடக்கூடிய அளவிற்குச் சரிவாகவும் அமைந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 282 அடி உயரத்தில்தான் அக்கோயில் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், ஏற்கெனவே அந்தக் கோயில் நிர்வாகம் இரண்டு பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறது. 1,381 மீட்டர் நீளமுள்ள சாலை போடப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. சிலப்பதிகாரத்தில் சொல்வதைப்போல, அந்தக் கோயிலுக்குச் செல்வதற்கு, மூன்று வழிகளில் செல்வதற்கு மலைப் பாதையும் போடப்பட்டிருக்கிறது. எனவே, இவ்வளவு வசதிகள் அங்கே இருக்கின்ற காரணத்தால், அதற்கு இழுவை உந்து தேவைப்படாது என்றே அரசு கருதுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி.டி. தண்டபாணி.

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி திருக்கோயிலில் ஏற்கெனவே இழுவை வண்டி போடப்பட்டு இருந்தாலும்கூட, பழனி திருக்கோயிலுக்கு வருகின்ற பக்தர்களுடைய எண்ணிக்கையைக் கணக்கில் கொண்டு, அங்கு கூடுதலாக இழுவை வண்டி போடக்கூடிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணர்வார்கள். அத்துடன் 1989-90-ஆம் ஆண்டில் கழக அரசு இருந்த நேரத்தில், பழனி மலைக்கும் அருகில் இருக்கக்கூடிய இடும்பன் மலைக்கும் இடையே ஒரு இழுவை இரயில் போடுவது சம்பந்தமாக ஒரு குறிப்பு தயார் செய்யப்பட்டு அரசிடம் இருந்தது. அது மீண்டும் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டபடி, பழனி மலையைப் பொறுத்தவரையில் அது மிக உயரத்தில் செங்குத்தாக இருக்கிறது. வேறு வழியே இல்லை, படிக்கட்டு மிக நீண்டு தொலைவில் போகிறது என்பதால், படியேறிச் செல்வது சிரமம் என்பது மறுக்க முடியாத உண்மை. ஏற்கெனவே அங்கு மூன்று இழுவைகள் இயங்குகின்றன. மேலும் ஒரு இழுவை வெகு விரைவில் இயங்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதுபோக, பக்தர்களுடைய மிகப் பெரிய நெருக்கடி காரணமாக - தமிழ்நாட்டில் இருக்கின்ற கோயில்களிலேயே அதிக வருமானம் ஈட்டித் தருகின்ற, அதிக பக்தர்களைக் கொண்டிருக்கின்ற கோயில் பழனி கோயில்தான்.

ஏறக்குறைய 10 கோடி முதல் 14 கோடி ரூபாய் வரை வருமானத்தை ஈட்டித் தருகின்றது. அந்த அளவிற்குப் பக்தர்களுடைய நெருக்கம் இருக்கிறது. —மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை கவனத்தில் கொண்டு மேலும் அதற்கு இழுவை உந்து விடுவதற்கு ஏற்பாடு செய்யப்படும். மேலும், பழனிக்கும் இடும்பன் மலைக்கும் இடையே தொடர் இழுவை உந்து விடுவதற்கான குறிப்பு ஆய்வில் இருக்குமேயானால், அதையும் எடுத்து ஆய்வு செய்யப்படும் என்பதை உறுதிபடத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. ஏ. பி. சிவாஜி.

**திரு. இ ஏ. பி. சிவாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மிக அதிகமான வருமானத்தை ஈட்டித் தருகின்ற கோயில்களில் மூன்றாவது இடத்தை திருத்தணி பெற்றிருக்கின்றது. பக்தர்களை மட்டுமல்ல, சுற்றுலாப் பயணிகளையும் ஈர்க்கக்கூடிய வகையிலே அங்கே மின் இழுவை அமைப்பது ஏற்புடையது, மிக வரவேற்கத்தக்கது, சாலச் சிறந்தது ஆகும். ஏற்கெனவே பழனியில் உள்ளதுபோல, தற்போது திருச்சி மலைக்கோட்டையில் அமைக்கிற திட்டம் நிலுவையிலுள்ளது போல, திருத்தணியிலும் அமைத்திட அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல அதிகமான பக்தர்களைக் கொண்டு அதிகமான வருமானத்தைத் தரக்கூடிய கோயில்களில் திருத்தணியும் ஒன்று என்பது மறுக்க முடியாத உண்மை. ஆண்டொன்றுக்கு அதனுடைய மொத்த வருமானம் 4,88,32,610 ரூபாய். அந்த அளவுக்கு மிகப் பெரிய வருமானத்தை இந்தக் கோயில் பெற்றிருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. ஏற்கெனவே நான் குறிப்பிட்டபடி, இதற்கு இருக்கிற மலைப்பாதை வசதிகள், பேருந்து வசதிகள் ஆகியவை இப்போது இருக்கிற நிலையில் போதுமானது என்று கருதுகிறேன். தேவைப்பட்டால் மேலும் அந்த மலைப்பாதையில் சில பேருந்துகள் பயணிகளின் வசதிக்காக விடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றொன்றையும்





குறிப்பிட்டார்கள். மலைக்கோட்டையிலே இதைப்போன்று செய்யப்படவிருக்கிறதே, அதைப்போல இங்கே செய்யக்கூடாதா என்று கேட்டார்கள். மலைக்கோயில் உச்சிப் பிள்ளையார் கோவில் வரை செல்வதற்கு இழுவை இரயில் அமைக்க 6 கோடியே 50 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. இது ஆய்வில் இருக்கிறது. 6½ கோடி செலவிட்டால்கூட, ஒரு ஆண்டுக்கு அதைப் பேணுவதற்கு 25 லட்ச ரூபாய் செலவிட வேண்டியிருக்கிறது. அப்படி 25 லட்ச ரூபாய் செலவிடுவதாக இருந்தாலும் 16 லட்ச ரூபாய்தான் வருமானம் வருகிறது. ஆகவே இதுவும் கணக்கில் கொள்ளப்படும் என்றால் திருத்தணி கோரிக்கையும் கணக்கில் கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முருகனுடைய அருளைப் பெறுவதற்கு பழனியிலே மேலும் இழுவை இரயில் அமைத்துத் தரப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நன்றி. அதைப்போல, மருதமலையிலேயும் இழுவை இரயிலை அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருதமலைக் கோயிலுக்குச் செல்வதற்கு ஏற்கெனவே பாதை வாய்ப்பாக இருந்து, அங்கே சாலைகள் போடப்பட்டு, ஏராளமான பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இப்போது கீழேயிருந்து மேலே செல்வதற்கு வேறு வகையான வசதி செய்து கொடுப்பதற்கான பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அது முடிந்த பிறகு, சரியாக இருக்குமானால் இதைப் பற்றி ஆய்வு செய்து முடிவெடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. தளபதி.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றம், திருமுருகப் பெருமான் அவர்கள் வரலாற்றிலே இடம் பெற்றவர். இந்த முருகப் பெருமானை எந்த ஆட்சி வந்தாலும் கவனிப்பது கிடையாது. எங்களுடைய திருக்கோயிலில் எந்த வசதியும் கிடையாது. ஏதாவது கவர்ச்சி இருந்தால்தான் பக்தர்கள் வருவார்கள் என்கின்ற காரணத்தால், திருப்பரங்குன்றம், திருமுருகப் பெருமான்

[1997 அக்டோபர் 16

கோயிலுக்கு வர இழுவை ரயிலை அமைத்துத் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுபற்றிய விவரங்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம்தான் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். ஏனென்றால் அவர் மிக விரும்பி அங்கே அடிக்கடி போகிறவர். அதுமட்டுமல்லாமல், உறுப்பினர் குறிப்பிட்ட ஆண்டவராகிய திருமுருகன் மலை உச்சியில் இல்லை, கீழேதான் இருக்கிறார். எனவே, திரு. தளபதி அவர்கள் மலைக்குக் கீழே இருப்பவரை விட்டுவிட்டு உச்சிக்குப் போவதற்கு விரும்புவது எதற்கு என்பது எனக்குத் தெரியவில்லை. அதுவும் கவர்ச்சி இருந்தால்தான் வருவார்கள் என்று சொல்கின்ற காரணத்தால் வேறு வகையான ஏற்பாடுகள்தான் செய்ய முடியுமே தவிர, இதற்கு இழுவை இரயிலைப் போட்டு ஏற்பாடு செய்வது என்பது சரியாக வராது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் பேரவைத் தலைவரை வம்புக்கு இழுக்கக் கூடாது. ஆனால் என்னுடைய வயதுக்கும் திரு. தளபதி வயதுக்கும் வேறுபாடு உண்டு. அவர் எந்தக் கவர்ச்சியைச் சொல்கிறார் என்பது எனக்குத் தெரியாது. (சிரிப்பு) திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி கோயில் செங்குத்தாக இருக்கிற காரணத்தாலே அதற்கு இழுவை ரயிலைப் போடுவதாக அமைச்சர் தெரிவித்தார். அதை விட செங்குத்தாக, எங்கள் மாவட்டத்திலே சோளிங்கர், ஸ்ரீநரசிம்ம சுவாமி கோயில் இருக்கிறது. தமிழ்க்குடிமகன்களையெல்லாம் காத்திருக்கக்கூடிய ஸ்ரீநரசிம்ம சுவாமியைக் காண மலைப் பகுதிக்கு பக்தர்கள் ஏறுகிறபோது, சிவகதி அடைந்து விடுகிறார்கள். சிவகதி அடைந்து விடுவோமே என்று பயந்து கீழேயே கும்பிட்டுவிட்டு போய் விடுகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையைப் போக்குவதற்கு, பழனியில் இருக்கக்கூடிய உபரி நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாயை இதற்காக கடனாகத் தந்து—ஆண்டவர் அருள் அமைச்சருக்கு இருக்கிறதோடு, அந்த அருள் எல்லோருக்கும் கிடைப்பதற்காக—சோளிங்கரில் ஸ்ரீநரசிம்ம சுவாமி கோயிலுக்கு இழுவை இரயிலை அமைத்துத் தர ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



1997 அக்டோபர் 16 ]

முற்பகல் 10-35

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் நான் அந்தக் கோவிலைப் போய்ப் பார்க்கவில்லை. ஆனால், அங்கு போகிறவர்கள் சிவகதி அடைந்து விடுகிறார்கள் என்று சொல்வதுதான் சிந்திக்கத் தகுந்தது. நரசிம்மர், வைணவரா, சைவரா என்பதை அவர் தெளிவுபடுத்த வேண்டும். அப்படியிருந்தால் அவர்கள் சிவகதி அடைவார்களா அல்லது வேறு கதி அடைவார்களா என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும். இருந்தாலும் அவர்களுடைய கருத்து ஆய்வு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இறுதியாக, திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இழுவை இரயில் தேவையில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தேவை என்பது அங்கு இருக்கிற மக்களுடைய விருப்பத்தைப் பொறுத்ததுதான். ஏராளமான பக்தர்கள் அதை விரும்புகிறார்கள். மேலும், அதற்கு வேறு ஒரு சிறப்பும் இருக்கிறது. தமிழகத்திலே இருக்கின்ற எல்லாக் கடவுள்களிலும்—உதாரணமாக விநாயகரை எடுத்துக் கொண்டால், அவர் வடஇந்தியாவைச் சேர்ந்தவர் என்ற ஒரு கருத்து இருக்கிறது. வெங்கடேசப் பெருமாளை எடுத்துக் கொண்டால், அவர் ஆந்திராவைச் சேர்ந்தவர் என்ற ஒரு கருத்து இருக்கிறது. தமிழ்க் கடவுள் என்று சொல்லக் கூடியவர் முருகன் ஒருவர்தான். எனவே, தமிழ்க் கடவுளுக்கு தமிழ்க்குடிமகன் மறுப்பு தெரிவிப்பது சரிதானா? எனவே, மறுபரிசீலனை செய்து, உடனடியாக இழுவை இரயில் விடுவதற்கு அவர்கள் அனுமதிப்பார்களா, ஆதரவு தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறைப்படி பார்த்தால் அனைத்துமே தமிழ்க் கடவுள்தான். காரணம், சிவபெருமானைப் பற்றி ஏற்கெனவே சிலப்பதிகாரத்திலே குறிப்பு இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் திருமாலைப் பற்றி குறிப்பு ஏற்கெனவே தொல்காப்பியத்திலே இருக்கிறது. "மாயோன் மேய; சேயோன் மேய" என்றெல்லாம் வருகிறது. முருகனைப் பற்றித் திரு.வி.க. போன்றவர்கள், முருகன் அல்லது அழகு என்று எழுதியிருந்தாலும்கூட, இப்போது வணங்குகின்றவர்கள் அந்தக்

கோணத்திலெல்லாம் அதைப் பார்ப்பதில்லை என்பது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். எனவே, எந்தக் கடவுள் என்ற வேறுபாடு இந்தத் துறைக்கோ, அரசுக்கோ கண்டிப்பாகக் கிடையாது. எனவே, முருகனுக்கு, ஒரு தமிழ்க் கடவுளுக்கு நீங்கள் இப்படிச் செய்யலாமா என்று கேட்பதைவிட, எது தேவையோ அதைக் கேட்டால் அதனைச் செய்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது.

இரண்டாவது, இதனுடைய செலவுகள் அனைத்துமே அறநிலையத் துறையிலிருந்துதான் மேற்கொள்ளப்படுகின்றன. அரசினுடைய வேறு நிதியிலிருந்து பெறப்படுவது இல்லை. அதை நான் கவனத்தில் கொள்கிறேன். அதே நேரத்தில், தமிழகத்தில் 37,000 கோயில்கள் இருக்கின்றன. இதிலே, நல்ல வசதியுடைய, வாய்ப்புடைய கோயில்கள் என்பவை, நீங்கள் சொல்வதைப்போல ரூ. 10 இலட்சத்திற்கும் மேல் வருமானம் உள்ள கோயில்கள் 64. ரூ. 2 இலட்சத்திலிருந்து ரூ. 10 இலட்சம் வரை வருமானம் உள்ள கோயில்கள் 171. இவை போக, மீதியெல்லாம் வருமானம் இல்லாத கோயில்கள். இன்னும் பெரிய வேறுபாடு என்னவென்றால், உள்ளபடியே புகழ்பெற்ற திருவாரூரிலே இருக்கின்ற சுந்தரமூர்த்தி நாயனாருக்குத் தடுத்தாட்கொண்ட புராணத்தை உண்டாக்கியிருக்கின்ற, சுந்தரமூர்த்தி நாயனாருக்குத் தோழராக இருந்த தியாகராஜ சுவாமி கோவிலிலேயே வருமானம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, அதற்கு வலங்கைமான் கோவிலிலிருந்து சம்பளம் கொடுக்கப்படுகின்றது. அதேநேரத்தில், கரூரில் இருக்கின்ற புகழ்ச் சோழனாருடைய வரலாற்றோடு தொடர்பு கொண்ட எறிபத்த நாயனாரோடு தொடர்பு கொண்ட கரூர் பகவதீஸ்வரர் கோயிலுக்கும் வருமானம் மிகவும் குறைவு. ஆனால், பக்கத்திலே இருக்கின்ற, ஒரு இடுக்கில் இருக்கின்ற மாரியம்மன் கோவிலுக்கு ஏராளமான வருமானம் இருக்கிறது. எனவே, மக்களுடைய விருப்பு வெறுப்பிற்கு ஏற்பக் கோயில்களினுடைய வருமானங்கள் வருகின்றன. பக்தர்களுடைய நெருக்கடி ஏற்படுகின்றது. அரசு இவற்றைக் கவனித்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 53, திரு. பெ. சு. திருவேங்கடம், திரு. செங்கை சிவம், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.





**53—**

## நியாய விலைக்கடைகளில் பாதி விலைக்கு அரிசி வழங்குதல்

***5674—திரு. பெ.சு. திருவேங்கடம் :**
**திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசு குடியரசு தினத்தில் இருந்து ஏழைகளுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் பாதி விலையில் அரிசி வழங்கும் திட்டத்தை மாநில அரசு மூலம் செயல்படுத்த உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஒரு விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

**விவர அறிக்கை**

நாட்டில் வறுமையைப் போக்க, இலக்குடைய செம்மையாக நடைபெறுகின்ற பொது விநியோக முறை ஒரு முக்கிய வழியாகும். குழந்தைகள் உயிரிழப்பு, தாய்மார்கள் உயிரிழப்பு, பிறக்கும் சிசுக்களின் குறைவான எடை மற்றும் ஏனைய அனைத்து வகை இழப்புகள் போன்ற கொடுமைகளை எதிர்ப்பதற்கு உணவு மற்றும் சத்துணவுப் பாதுகாப்பு மிகவும் அவசியம். எனவே, ஏழைகள் தங்களால் வாங்கக்கூடிய விலைகளில் உணவுப் பொருட்களைப் பெற உறுதி செய்வது சிறந்த பொது விநியோக முறைக்கு மிகவும் அவசியம் என்பதை வலியுறுத்திக்கூற வேண்டியதில்லை. எனினும், தற்போதுள்ள பொதுவிநியோக முறை வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களுக்குப் பயன் தருவதில்லை என்றும், நகரத்தில் வாழுகின்றவர்களுக்கே அனுகூலம் அளிப்பதாக உள்ளது என்றும், ஏழை மக்கள் அதிகமுள்ள கிராமங்களைக் கொண்ட மாநிலங்களில் மிகக் குறைவான அளவிலேயே ஏழை மக்கள் பயன் அடைகின்றனர் என்றும், வழங்கல் முறை வெளிப்படையானதாக இல்லை என்றும், விநியோக முறை கேட்பாரற்று உள்ளது என்றும், பெருமளவில் விமர்சிக்கப்படுகிறது. இதன் காரணமாகவே, மத்திய அரசு தற்போது வறியோர் நலன் காக்கும்

பொது விநியோக முறையை நடைமுறைப்படுத்தவுள்ளது. அதன்படி வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்குத் தனியாகக் குடும்ப அட்டைகள் வழங்குவதன் மூலமும், இன்றியமையாப் பொருட்களை அவர்களுக்குச் சிறப்பு மானிய விலையில் வழங்குவதன் மூலமும் விநியோக முறையைச் சிறப்பாக கண்காணிப்பதன் மூலமும், பொது விநியோக முறையைச் சீரமைக்க வேண்டுமெனக் கருதப்பட்டுள்ளது.

**மத்திய அரசால் தற்போது நடைபெறுப்படுத்தப்படவுள்ள வறியோர் நலன் காக்கும் பொது விநியோக முறை கீழ்க்காணும் சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளது:—**

(1) வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 10 கிலோ அரிசி அல்லது கோதுமை பாதி விலையில் வழங்கப்படும்.

(2) அரிசியாக இருந்தால் இந்த 10 கிலோ சாதாரண ரக அல்லது சன்ன ரகமாக வழங்கப்படும். மிகச் சன்னரகம் குறைந்தவிலையில் வழங்கப்படமாட்டாது.

(3) வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கு அளிக்கப்பட இருக்கின்ற அரிசி மற்றும் கோதுமை ஆகியவற்றின் விலை விவரம் வருமாறு:—

| | அரிசி | | | கோதுமை |
|---|---|---|---|---|
| | சாதாரண ரகம் | சன்ன ரகம் | மிகச்சன்ன ரகம் | |
| | (கிலோவுக்கு ரூபாய்) | | | |
| தற்போதைய விலை | 5.37 | 6.17 | 6.48 | 4.02 |
| புதிய விலை (வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளவர்களுக்கு) | - | 6.50 | 7.50 | 4.50 |
| புதிய விலை (வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு) | 3.50 | 3.50 | - | 2.50 |





(4) மாநிலங்கள், ஒரு கிலோவிற்கு 50 காசு வரை விநியோகம் சம்பந்தமாக நிருவாகச் செலவுகளுக்காக வசூலிப்பதை அனுமதிக்கலாம். ஆகவே மாநிலங்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு சாதாரண ரக/சன்னரக அரிசியைக் கிலோவிற்கு ரூ. 4 என்ற விலையிலும், கோதுமையைக் கிலோவிற்கு ரூ. 3 என்ற விலையிலும் விற்கலாம்.

(5) வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ள குடும்பங்களுக்குச் சன்னரக அரிசியும், மிகச் சன்னரக அரிசியும் மட்டுமே வழங்கப்படும். இவற்றின் விலை விவரம் வருமாறு:—

| | சன்ன ரகம் | மிகச் சன்ன ரகம் |
|---|---|---|
| | (கிலோவுக்கு ரூபாய்) | |
| தற்போதைய விலை | 6.17 | 6.48 |
| புதிய விலை | 6.50 | 7.50 |

வறுமைக்கோட்டிற்கு மேலே உள்ள குடும்பங்களுக்கு கோதுமை அளிக்கப்பட்டால் அது கிலோ ஒன்றுக்கு ரூ. 4.50 என்ற விலையில் வழங்கப்படும். தற்போது கோதுமை கிலோ ஒன்றுக்கு ரூ. 4.02-க்கு வழங்கப்படுகிறது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள விலையில் விநியோகம் தொடர்பான செலவுகள் அடங்காது. அந்தச் செலவுத் தொகையை மாநில அரசே நிர்ணயிக்கலாம்.

(6) தமிழ்நாட்டிலுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை 1991-ன் கணக்கெடுப்புப்படி 125.43 இலட்சம் ஆகும். 1995-ல் இது 130.72 இலட்சமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

(7) தமிழகத்தில் வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ள குடும்பங்கள் 35.03% என்று கணக்கிடப்பட்டுள்ளது (45,79,000 குடும்பங்கள்).

(8) மேற்படி குடும்பங்களுக்கு மாதாந்திரத் தேவை ஒரு குடும்பத்திற்கு 10 கிலோ வீதம் 45,790 டன்கள் ஆகும். ஓர் ஆண்டுக்கான தேவை 5,49,490 அதாவது சுமார் 5.5 இலட்சம் டன்கள் ஆகும்.

(9) ஒரு மாநிலத்திற்கான ஆண்டு ஒதுக்கீடு, அம்மாநிலம் கடந்த 10 ஆண்டுகளில் மத்தியத் தொகுப்பிலிருந்து எடுத்த உணவுப் பொருட்கள் அளவின் சராசரி என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன்படி, தமிழ்நாட்டிற்கு ஆண்டு ஒதுக்கீடு 10.11 இலட்சம் டன்னாக இருக்கும் (மாதம் 84,250 டன்கள்).

[1997 அக்டோபர் 16

(10) வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள குடும்பங்களுக்கு ஆண்டொன்றுக்கு 5.5 இலட்சம் டன்னும், வறுமைக்கோட்டிற்கு மேலேயுள்ள குடும்பங்களுக்கு ஆண்டொன்றுக்கு 4.61 இலட்சம் டன்னும் ஒதுக்கீடு செய்யப்படும்.

(11) மேலும், வேலை உத்தரவாதத் திட்டம் (EAS) மற்றும் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் (JVVT) ஆகியவற்றில் பயன்பெறும் நபர்களுக்கு அவர்கள் வேலை செய்யும் அனைத்து நாட்களுக்கும் நாள் ஒன்றுக்குக் கூடுதலாக 1 கிலோ கொடுக்கப்படும்.

**திரு. வெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வபார அறிக்கையை நாங்கள் பார்த்தோம். இன்றையதினம், கிராமங்களிலே வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள ஏழைகள், நடுத்தரக் குடும்பங்களிலே உள்ளவர்கள் பொது விநியோக முறையினால்தான் ஒரு நல்ல பலனை அடையக்கூடிய சூழ்நிலை உள்ளது. நம்முடைய அரசு நல்லமுறையிலே செயல்பட்டாலும், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் 35% என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்னும் கிராமங்களில் அநேகம் பேர்களுக்கு குடும்ப அட்டை கிடைக்காத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இவற்றையெல்லாம் நம்முடைய அரசு சரியான முறையிலே கணக்கிட்டு எல்லோருக்கும் கார்டு கிடைக்கின்ற வகையிலே நடவடிக்கை எடுக்கப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கார்டுகள் வழங்கப்பட வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்ட பிறகு, முதற்கட்டமாக, மாநகரப் பகுதிகளிலேயும், அடுத்த கட்டமாக மாவட்டத் தலைநகர் பகுதிகளிலேயும் பாரங்கள் கொடுக்கப்பட்டு, சரிபார்க்கப்பட்டு திரும்பப் பெறப்பட்டிருக்கின்றன. மூன்றாவது கட்டமாக, கிராமப்புறங்களிலே, 12 மாவட்டங்களிலே, இன்றைக்கு 'பாரங்கள்' வழங்கப்பட்டிருக்கின்றன. அச்சடிக்க, அச்சடிக்க, அத்தனை மாவட்டங்களுக்கும் விரைவாக வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. கிராமப் பகுதிகளிலே, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற 35.03 சதவிகிதம் என்பது, மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட அளவு. 'லக்டோவாலா கமிட்டி' என்ற அந்தக் கமிட்டியின் அறிக்கையின்படி, 35.03 என்ற



1997 அக்டோபர் 16]

சதவிகிதம்தான் வறுமைக் கோட்டின் கீழே என்று தந்திருக்கிறார்கள். ஆனால், மாநகராட்சிப் பகுதியிலும், நகராட்சிப் பகுதியிலும் சென்று ஆய்வு செய்த வகையிலே, வறுமைக் கோட்டிற்குக் கீழே என்று நாம் எடுத்திருக்கிற கணக்குப் பிரகாரம் 45 சதவிகிதம் வருகிறது. அவ்வாறு ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. விரைவிலே, அதற்கான பணிகள் எல்லாம் முடிக்கப்படவிருக்கின்றன. மத்திய அரசினுடைய திட்டத்தை நாம் ஜூன் மாதம் 1ஆம் தேதியிலிருந்து அமல்படுத்தியிருக்கிறோம். இது அனைத்து மக்களுக்கும் சென்றடைகிற வகையிலே விரைவிலே அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன் கடைகளிலே வழங்கப்படுகிற அத்தியாவசியப் பொருட்களுக்கு, நஷ்டத்தை ஈடுசெய்ய, மாநில அரசு எவ்வளவு மானியம் வழங்குகிறது? வறுமைக் கோட்டிற்குக் கீழே மத்திய அரசு உத்தரவிட்டிருப்பதற்கு, அந்தத் தொகையில் மத்திய அரசினுடைய மானியம் எவ்வளவு? சென்னை உள்ளிட்ட அனைத்து மாநகராட்சிகளிலும் புதிய ரேஷன் கார்டுகள் எப்போது வழங்கப்படும்? அதுமட்டுமல்லாமல், நகராட்சி, கிராமப் பகுதிகளில் 'பாரங்கள்' வழங்கப்பட்டு 'கார்டுகள்' வழங்கப்படும் என்று சொன்னார்கள். எந்தக் கால அளவுக்குள் அவை வழங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது துணை வினாவா? ஒரு பட்டியலே போட்டு கேட்டுக் கொண்டிருக்கிறீர்களே! மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவுத் துறைக்கென்று தமிழக அரசு ஆயிரம் கோடி ரூபாய் மானியம் வழங்குகிறது ஒவ்வோராண்டும். அதிலே, கடந்த காலத்திலே, ஆட்சிப் பொறுப்பேற்றபோது, நம்முடைய உணவு வினியோகத் திட்டத்திலே ஒவ்வொரு மாதமும் 2 இலட்சம் டன் அரிசி வழங்கிக் கொண்டிருந்தோம். அதிலே, மத்தியிலிருந்து நமக்கு வழங்கப்பட்டதினுடைய அளவு, 1 இலட்சத்து 40 ஆயிரம் டன்கள். மேலும், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நேரடியாக, பிரதமர் அவர்களோடு தொடர்பு கொண்டு, இது பற்றாக்குறை மாநிலமாக இருக்கிறது; எங்களுக்கு நீங்கள் மேலும் அரிசி தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க, மேலும் 25 ஆயிரம் டன், ஆக

[1997 அக்டோபர் 16

மொத்தம் 1 இலட்சத்து 65 ஆயிரம் டன் ஒவ்வொரு மாதமும் மத்திய அரசு வழங்கி வந்தது. ஆனால், இன்றைக்குப் பொது விநியோகத் திட்டத்தை, வறுமைக்கோட்டிற்குக் கீழே 35.03 சதவிகிதம் என நிர்ணயித்து, பாதி விலையிலே அரிசி தருகிறோம் என்று சொல்லி அத்திட்டத்தை அறிமுகப்படுத்திய பிறகு, ஒவ்வொரு மாதமும் அரிசி வழங்குகிற அளவு, 84 ஆயிரம் டன்னாகக் குறைக்கப்பட்டு விட்டது. மீதம் தேவையான 1 இலட்சத்து 20 ஆயிரம் டன்களை, நம்முடைய தமிழ்நாடு தொகுப்பிலே இருந்துதான் தந்து கொண்டிருக்கிறோம். இதுதான் இன்றைக்கு அரிசியினுடைய அளவு. அவர்கள் பாதி விலையிலே 3½ ரூபாய்க்கு நமக்குத் தந்தாலும்கூட, அதை 4 ரூபாய்க்கு விற்கச் சொல்லி மத்திய அரசு உத்தரவிட்டிருந்தாலுங்கூட, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 3¾ ரூபாய்க்கே அதை விற்க வேண்டுமென்று உத்தரவிட்டு, வறுமைக் கோட்டிற்குக் கீழே மட்டுமல்லாது, அனைத்து மக்களுக்குமே தமிழ்நாடு அரசு ஆயிரம் கோடி ரூபாய் மானியம் தந்து, மூன்றே முக்கால் ரூபாய் அளவுக்கே அரிசியைப் போட்டுக் கொண்டிருக்கிறோம். புதிய கார்டுகள் வழங்குவது பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார். கடந்த காலத்திலே, அது நிர்ணயிக்கப்பட்ட கால அளவு, இந்த ஆண்டு 31-12-1997-க்குள்ளாக தமிழகம் முழுவதும் இருக்கின்ற அத்தனைப் பகுதிகளுக்கும் புதிய கார்டுகளை வழங்கி விடுவது என்றுதான் ஒரு நிர்ணயம் செய்யப்பட்டது. டெண்டர் கோரப்பட்டபோது, டெண்டரில் சில கண்டிஷன்கள் போட்டிருந்தோம். ஏனென்று சொன்னால், தமிழகம் முழுவதும் 1½ கோடி கார்டுகள் கொடுத்தாக வேண்டும். 1 கோடியே 50 இலட்சம் கார்டுகள் வழங்க வேண்டியிருக்கின்ற காரணத்தினால் அதைக் கம்ப்யூட்டரிலே எடுத்துப் பதிவு செய்யக்கூடிய அனுபவம் பெற்றவர்கள், அதிலே பணியாற்ற வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு, ஏற்கெனவே அரசிலே 20 இலட்சம் ரூபாய்க்கு ஆங்கிலத்திலே பணியும், அதற்குப் பிறகு 5 இலட்சம் ரூபாய்க்குத் தமிழிலே பணியும் எடுத்திருந்தால், அவர்கள்தான் இந்த டெண்டரிலே கலந்து கொள்ளலாம் என்று அந்தக் கண்டிஷன் போடப்பட்டிருந்தது. அப்படிப் போடப்பட்டபோது, அதிலே கலந்து கொண்ட நூற்றுக்கும் மேற்பட்டவர்களுள் ஒருவர் மட்டும்தான் தகுதி பெற்றார். இதிலே ஒருவர் மட்டும்தான் தகுதி பெற்றார் என்று நினைத்த பிறகு அதிலே சிறு மாற்றம் செய்யப்பட்டது. அதாவது, 20 இலட்சம் ரூபாய்க்கு ஆங்கிலத்திலே எடுத்திருந்தாலும் அல்லது 5 இலட்சம் ரூபாய்க்குத் தமிழிலே எடுத்திருந்தாலும் என்று மாற்றப்பட்டபோது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே விடப்பட்ட அந்த டெண்டரில்



1997 அக்டோபர் 16 ]

அந்தக் கண்டிஷன் எல்லாம் போடப்பட்ட பிறகு, கண்டிஷனை மாற்றுவது சரியாக இருக்காது; மீண்டும் புதிய டெண்டரை நீங்கள் விட வேண்டுமென்று சொன்ன பிறகு, புதிய டெண்டர் விடப்பட்டு 'டெக்னிகல் பிட்' திறக்கப்பட்டு அன்றே முடிவு செய்யப்பட்டு, 'பைல்', சர்குலேஷனில் இருக்கிறது. நாளையோ, நாளை மறுதினமோ அதற்கான உத்தரவுகளை முதலமைச்சர் அவர்கள் இட இருக்கிறார்கள் முதல் கடமையாக எங்களுடைய பணிகள், மாநகராட்சிப் பகுதிகளிலும் நகராட்சிப் பகுதிகளிலும் முழுமையாக நிறைவு பெற்றிருக்கின்றன. 'பாரங்கள் ' தரப்பட்டு, அவற்றை அவர்கள் 'போட்டோ'-வுடன் திருப்பித் தந்து, மீண்டும் அவற்றை நாங்கள் சரிபார்த்து, யாருக்கு எவ்வளவு சதவிகிதம் என்பது முதற்கொண்டு சரிபார்த்திருக்கிறோம். வெகு விரைவிலே நகராட்சிப் பகுதியிலும், மாநகராட்சிப் பகுதியிலும் கார்டுகள் வழங்கப்பட்டுவிடலாம் என்ற நம்பிக்கையை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கிராமங்களில் ஓரிரு மாதங்கள் கூடுதலாக அதாவது டிசம்பர் என்பது ஜனவரி, பிப்ரவரிக்குள்ளாக அனைத்து மக்களுக்கும் இந்தப் புதிய கார்டுகள் வழங்கக்கூடிய முழு முயற்சியையும் இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். அழகராஜா.

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன் கார்டுகள் வழங்குகிறபோது ஐடெண்டிஃபிகேஷனுக்காக அவர்கள் போட்டோ கேட்கிறார்கள். கலர் போட்டோவை அவர்கள் அனுமதிப்பதில்லை, அது ஏன் என்று தெரியவில்லை. இப்போது சாதாரணமாக எந்தக் கிராமங்களை எடுத்துக்கொண்டாலும் மக்கள் கலர் போட்டோதான் எடுக்கிறார்கள். ஆகவே கலர் போட்டோவை நீங்கள் அனுமதிக்கலாம். அடுத்தபடியாக ரேஷன் கார்டுகள் புதிதாகக் கொடுக்கின்றபோது வோட்டர்ஸ் ஜாபிதாவுக்காக போட்டோ எடுத்து ஐடென்ட்டிஃபிகேஷன் நம்பர் கொடுக்கிறார்கள். அதே நம்பரை இதில் சேர்த்துவிட்டீர்கள் என்று சொன்னால் டிரைவிங் லைசன்ஸ், இன்கம்டாக்ஸ் போன்ற அனைத்துக்கும் ஒரே சீரியலாக இருக்கிற மாதிரி செய்துவிடலாம். ஏனென்றால் கம்ப்யூட்டரைஸ் பண்ணுகிறபோது இதையும் செய்வதற்கு ஏதுவாக இருக்கும். எனவே இதை அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலர் போட்டோ எடுத்தால் அதை லேமினேட் செய்கிறபோது அது சரியாக விழாத காரணத்தினால் தான் கருப்பு வெள்ளைப் படமே எங்களுக்கு வேண்டும் என்று கேட்டு அந்த முறை பின்பற்றப்படுகிறது. அந்தக் கார்டிலே இது அத்தியாவசியப் பொருட்கள் வாங்குவதற்கு மட்டுமே உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்று அச்சடித்து இருக்கிறோம். மற்ற எந்தச் செயலுக்கும் ரேஷன் கார்டை உபயோகப்படுத்தக்கூடாது என்று அச்சடிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே வோட்டர்ஸ் ஜாபிதாவுக்குக் கொடுக்கிற அந்த நம்பரை இதிலே இணைக்கலாமா என்று கேட்டிருக்கிறார்கள். கார்டுகள் சரிபார்ப்பது என்பது, அவர்கள் எழுதிக் கொடுத்தவுடன் அப்படியே. அதை நாங்கள் ஏற்றுக்கொள்வதில்லை. துறையின் மூலமாக அதிகாரிகள் சென்று அவர்கள் சொல்லியிருக்கிற விவரங்கள் சரியாக இருக்கிறதா என்று கேட்டு அறிந்து மேலும் வோட்டர்ஸ் லிஸ்ட்டோடு அதை ஒப்பிட்டுப் பார்த்துத்தான் அதைச் சரி செய்து கொண்டிருக்கிறோம். இந்த ரேஷன் கார்டைப் பொறுத்தவரையில் மற்ற எந்தச் செயலுக்கும் அதைக் கொண்டு செல்லக்கூடாது என்பதுதான் அரசினுடைய விதி. அதனால்தான் மற்ற எதையும் இதில் இணைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன் கார்டுகள் புதுப்பிப்பதற்கு பாரங்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய சேலம் மாவட்டத்திலே கடுமையான வறட்சியின் காரணமாக மக்கள் வெளியூர்களுக்குப் பிழைப்பு தேடி சென்றிருக்கிறார்கள். இப்போது புதுப்பிக்கும் முறைக்கு கால அவகாசம் கொடுக்கப்பட்டிருப்பதை சற்று நீட்டித்துக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்கள்தோறும் எற்கெனவே தரப்பட்டிருக்கிற பாரங்கள் திரும்பப் பெறப்பட்டு அது முடிவு பெறுகிற தேதியிலே முற்றிலுமாக முடிவு பெறவில்லை என்றால் ஓரிரு வாரங்கள் கால அவகாசம் நீட்டித்துத் தருவது வழக்கமாக இருக்கிறது. அதுபோல இதற்கும் நீட்டிப்புத் தரலாம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. மணிமாறன்.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாயவிலைக் கடைகளில் வழங்கக்கூடிய 20 கிலோ அரிசியில் பச்சரிசியும் போடப்படுகிறது. உடல் உழைப்பாளிகள், தொழிலாளர்கள் நிறைந்த பகுதியில் பச்சரிசி வாங்குவதற்கு யாரும் விருப்பம் தெரிவிப்பதில்லை. எனவே அவர்கள் விரும்பினால் பச்சரிசிக்குப் பதிலாக புழுங்கல் அரிசியை வாங்கலாம் என்ற நிலையை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 கிலோ என்பது 3 கிலோ சாதாரண அரிசி 2.00 ரூபாய் விலையிலும், பாக்கி 17 கிலோவில் 8 கிலோ பச்சரிசியும், மீதம் இருப்பதற்கு புழுங்கல் அரிசியும் தருவதுதான் இன்றைக்கு வழக்கமாக இருக்கிறது. சென்னையிலும், தருமபுரியிலும் மட்டும்தான் பச்சரிசியை அதிகமாக விரும்புகிறார்கள். ஆனால் மற்ற பகுதிகளில் புழுங்கல் அரிசி தான் தர வேண்டும் என்று இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் சொன்ன பிறகு ஆந்திராவிலிருந்து கொள்முதல் செய்யப்பட்ட அத்தனை அரிசியும் புழுங்கல் அரிசியாக இன்றைக்கு வாங்கியிருக்கிறோம். அதேபோல நம்முடைய அதிநவீன அரிசி ஆலைகளிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிற அத்தனை அரிசியும் புழுங்கல் அரிசியாக உற்பத்தி செய்து கொண்டிருக்கிறோம். கடந்த காலத்தைவிட அதிகமான அளவுக்கு பச்சரிசியை விடுத்து புழுங்கல் அரிசிதான் இன்றைக்கு வழங்கிக் கொண்டு வருகிறோம். அதனால்தான் ஒவ்வொரு மாதமும் 1,70,000 டன் எடுத்துக் கொண்டிருப்பதை இப்போது 2,00,000 டன்னாக மக்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். புழுங்கல் அரிசி அதிகமாகத் தருகிற காரணத்தினால் மக்கள் அதை விரும்பிப் பெற்றுக் கொள்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடும்ப அட்டைகள் மாநகராட்சிப் பகுதியிலும், நகராட்சிப் பகுதியிலும் வழங்குவதற்கான ஏற்பாடுகள் இருக்கின்றன. ஊரகப் பகுதியில் இது இல்லை. அதாவது சிற்றூராட்சிப் பகுதிகளில். அங்கே புதிய ரேஷன் அட்டைகளை மக்கள் அதிகமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வழங்குவதில் இருக்கிற தடையை நீக்கி புதிய அட்டையைக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1997 அக்டோபர் 16

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு கடந்த கேள்வியிலேயே நான் பதில் சொல்லியிருக்கிறேன். நகராட்சிப் பகுதியிலும், மாநகராட்சிப் பகுதியிலும் 50 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு கார்டுகள் வழங்கப்பட இருக்கின்றன. கிராமப் பகுதிக்குத் தேவையான குடும்ப அட்டைகள் எண்ணிக்கை ஒரு கோடி அந்த ஒரு கோடியிலே கிட்டத்தட்ட 35 லட்சம் பாரங்கள் அச்சடிக்கப்பட்டு 12 மாவட்டங்களில் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன. புதிதாக பாரங்கள் அச்சிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த பாரங்கள் வரவர விநியோகிக்கப்படும். விரைவில் இந்தப் பணியை முடித்துத் தருவோம் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். சந்தானம்.

**திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசு 20 கிலோ அரிசியை ஒவ்வொரு கார்டுக்கும் வழங்கலாம் என்ற விதிமுறையை வைத்து இருந்தாலும் கிராமங்களிலே விநியோகிக்கப்படும் அரிசியினுடைய அளவு மொத்த கார்டுகளிலே 80 சதவீதம்தான் வழங்கப்படுகிறது. 20 சதவீதம் வழங்கப்படவில்லை என்று கூட்டுறவுச் சங்கங்களிலே கூறுகிறார்களே. அது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஏதாவது குறிப்பிட்ட இடங்களைப் பற்றி சொல்லுவார்களானால் ஆய்வு செய்யப்பட்டு அது சரி செய்யப்படும். இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கின்ற 1 கோடியே 50 லட்சம் கார்டுகளுக்கான மொத்த அரிசியின் அளவு இரண்டு கோடியே 81 லட்சம் டன் இருந்தால்தான முழுமையாக அனைவருக்கும் அரிசி கிடைக்கும். ஆனால் கடந்த 10 ஆண்டுகளில் ஆவரேஜின்படி ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு எடுத்திருக்கிறோம், ஒவ்வொரு மாதமும் எந்தெந்தப் பகுதியிலே எவ்வளவு வாங்கியிருக்கிறார்கள் என்பதை எல்லாம் கணக்கிட்டுத்தான் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அந்த ஒதுக்கீட்டின் அளவு 2 லட்சம் டன்களாகும். மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் அந்தக் கிராமங்களிலே இருக்கின்ற அத்தனை பேருக்கும் அரிசி தேவை என்று சொன்னால்கூட நாங்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். அரிசியை மக்களுக்குத் தரத் தயாராக இருக்கின்ற



1997 அக்டோபர் 16 ]

அதே நேரத்தில், மற்றபடி திருட்டுத் தனமாக அரிசி எடுத்துச் செல்லப்படுகின்ற அந்த வழிமுறையைக் கட்டுப்படுத்துகின்ற காரணத்தால்தான் தேவையான அளவுக்கு மட்டும் அரிசியை வழங்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே இருக்கின்ற மக்களுக்கு அரிசி கிடைக்கவில்லை என்று சொன்னால், அதைப்பற்றி உரிய முறையில் குறிப்பிட்டுச் சொன்னால் நிச்சயமாக அரிசி வழங்கப்படும் என்றும், தவறு நடந்தால் அதுவும் நிச்சயமாகக் களையப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 54, திரு. ஆர். சிவானந்தம், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**54—**

**பாலுக்கான தொகை காலதாமதமின்றி வழங்குதல்**

*** 4684—திரு. ஆர். சிவானந்தம்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி தொகுதி, கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் காலதாமதமின்றி பாலுக்கான தொகை வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி தொகுதி, கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு பால் பணப் பட்டுவாடா 4 வாரங்கள் நிலுவையில் இருந்தது. அது தற்போது இரண்டு வாரமாகக் குறைக்கப்பட்டுள்ளது. மேலும் தாமதம் இன்றி பால் பணப் பட்டுவாடா செய்ய அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 55, திரு. இரா. மதிவாணன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

[1997 அக்டோபர் 16

55—

### மீனவர் பகுதியில் தொழிற்கல்வி நிலையங்கள் தொடங்குதல்

*** 7717—திரு. இரா. மதிவாணன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வட சென்னை, இராயபுரம் மீனவர் பகுதியில் புதிய தொழிற்கல்வி நிலையங்கள் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. இரா. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடசென்னைப் பகுதியில் தனியார் தொழிற்கல்வி நிலையங்கள் துவங்க முன்வந்தால் அரசு அவர்களுக்கு உதவி செய்ய ஆவன செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஐடிஐ-யை பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் உள்ள எல்லா ஒன்றியங்களிலும் அதை நிறுவ வேண்டுமென்பது அரசின் கொள்கை. அதற்கான உத்தரவு இடப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற இடத்திற்குப் பக்கத்திலே தொழிற் பயிற்சி நிலையம், கிண்டியிலே பொதுவாக எல்லோரும் படிக்கின்ற தொழில் பயிற்சி நிலையம் இருக்கிறது. மகளிர் படிக்கின்ற தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றும் கிண்டியிலே இருக்கிறது. வடசென்னையிலே தொழிற்பயிற்சி நிலையம் இருக்கிறது. திருவான்மியூரிலே தொழிற்பயிற்சி நிலையம் இருக்கிறது. எனவே, இராயபுரத்திற்கு என தொழிற்கல்வி நிலையம் துவங்குவதற்கான அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 56, திரு. சீ.வெ. கிருஷ்ணன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.



1997 அக்டோபர் 16]

56—

### வேடசந்தூர் தொகுதியில் பஞ்சாலை துவங்குதல்

*** 10131—திரு. சீ. வெ. கிருஷ்ணன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, எரியோட்டில் கூட்டுறவுத் துறையின் மூலம் பஞ்சாலை துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வேடசந்தூர் தொகுதி, எரியோட்டில் கூட்டுறவுத் துறையின் மூலம் பஞ்சாலை துவங்க திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. சீ. வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் தொகுதி, எரியோட்டுப் பகுதியிலே பருத்தி உற்பத்தியாளர்கள் விவசாயம் செய்து வருகிறார்கள். அந்தப் பகுதியிலே தனியார் பஞ்சாலை தொழிற்சாலையிலே பணிபுரியும் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் இருக்கிறார்கள். எனவே அங்கே அரசு பஞ்சாலை அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**திரு. என். கே. கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மதுரை மாவட்டம் மேலூரில் ஒரு ஆலையும், திண்டுக்கல் மாவட்டம் ஆண்டிப்பட்டியில் ஒரு ஆலையும் செயல்பட்டு வருகின்றன. தமிழகத்திலே மட்டும் கூட்டுறவுத் துறையில் 27 லட்சம் கிலோ கிராம் நூல் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. ஆனால் தமிழகத்திலே பஞ்சு உற்பத்தி மிகவும் குறைவு. நூல் உற்பத்தி மிகவும் அதிகம். இப்போதே வெளி மார்க்கெட்டிலே நூலை விற்க வேண்டிய கட்டாயம் கூட்டுறவுத் துறைக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே நிச்சயமாக

எதிர்காலத்திலே இப்படிப்பட்ட பஞ்சாலைகளைத் துவங்குவது அரசுக்கு சாத்தியமானதாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 57, திரு. சி.டி. தண்டபாணி, மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**57—**

**வனத் துறை நிலத்தை விவசாயம் செய்பவருக்கே சொந்தமாக்குதல்**

*** 4477—திரு. சி.டி. தண்டபாணி:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வனத் துறைக்குச் சொந்தமான நிலத்தில் பல்லாண்டுக் காலமாக விவசாயம் செய்து வரும் மக்களுக்கே அந்த நிலத்தைச் சொந்தமாக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நில உரிமம் வழங்கப்படும்?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழகத்தில் வனத் துறைக்குச் சொந்தமான நிலத்தில் பல்லாண்டு காலமாக விவசாயம் செய்துவரும் மக்களுக்கு அந்த நிலத்தை சொந்தமாக்கித் தர அரசிடம் திட்டம் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**திரு. சி. டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறைக்குச் சொந்தமான நிலங்களில் விவசாயம் செய்து கொண்டிருக்கக்கூடிய ஏழைகளுக்கு அந்த நிலத்தை சொந்தமாக்குவது சம்பந்தமாக பல்வேறு கோரிக்கைகள் வந்திருந்தாலும் கூட ஏற்கெனவே அவர்கள் விவசாயம் செய்து கொண்டிருக்கக்கூடிய இடத்தை அரசு தருவதிலே என்ன சிரமம் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மொத்த வனப் பரப்பு 22,14,000.12 சதுர கிலோ மீட்டர்கள் ஆகும். இதில் காப்பு காடுகள் 19,486 சதுர கிலோ மீட்டர்கள். இதில் பலதரப்பட்ட ஆக்கிரமிப்புகளின் மொத்த பரப்பு 152.15 சதுர கிலோ மீட்டர்கள். ஆக்கிரமிப்பு பகுதி, மொத்த வனப் பரப்பில் 0.7 சதவிகிதமாகும். இந்த ஆக்கிரமிப்புகள் கடந்த பல ஆண்டுகளாக உள்ளன. மத்திய அரசின் 1980-ஆம் வருட வனப் பாதுகாப்பு சட்டப்படி வனப் பகுதிகளை வனவியல் அல்லாத இதர பணிகளுக்குப் பயன்படுத்துவதற்கு மத்திய அரசின் முன் அனுமதி பெற வேண்டும். மேற்கண்ட வனப் பாதுகாப்புச் சட்டத்தில் ஆக்கிரமிப்பு குறித்த நெறிமுறைகளில் 25-10-1980-க்கு முன் ஏற்பட்ட ஆக்கிரமிப்புகளாக இருந்தால் அவற்றை முறைப்படுத்த அத்தேதிக்கு முன்னதாக அரசு முடிவு செய்திருந்தால் மட்டுமே அவைகளை வரன்முறைப்படுத்த இயலும். எந்தக் காரணத்தை கொண்டும் 24-10-1980-க்கு பின் ஏற்பட்ட ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்த வழி வகுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. மு. முபாரக்.

**திரு. பா. மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறைக்குச் சொந்தமான இடங்களில் ஆக்கிரமிப்பு செய்துள்ள விவசாயிகளுக்கு பட்டா செய்து தரப்பட வேண்டுமென்ற கோரிக்கை பல்லாண்டு காலமாக இருக்கின்றது. குறிப்பாக நீலகிரி மாவட்டம், கூடலூர் பகுதியில் நிலாம்பூர் கோயிலுக்கு சுமார் ஒரு லட்சம் ஏக்கர் நிலம் உள்ளது. உச்ச நீதிமன்றத்திலே ஒரு வழக்கு கூட இருக்கிறது. இந்த இடத்தை 10,000 20,000 ஏக்கரா என்று பெரிய முதலாளிகள் ஆக்கிரமித்து இருக்கிறார்கள். அது தமிழ்நாடு அரசுக்குச் சேரவேண்டுமென்று வழக்கு உச்ச நீதிமன்றத்தில் இருக்கும் இந்த நேரத்தில், சாதாரணமாக 2 ஏக்கர், 3 ஏக்கர், 5 ஏக்கர் என்று நிலம் வைத்து விவசாயம் செய்கிறவர்களுக்கும் இந்த வழக்கு காரணமாக பட்டா வழங்கப்படாமல் இருக்கிறது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியாக கேளுங்கள், நீங்கள், துணை வினாவில் எழுதி வைத்துப் படிக்கக்கூடாது.

**திரு. பா. மு. முபாரக்:** ஆகவே சாதாரணமாக 2 ஏக்கர், 5 ஏக்கர் நிலப்பரப்பு உள்ளவர்களுக்குப் பட்டா வழங்க ஏற்பாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு எஸ்டேட் ஒழிப்பு சட்டம், 1948 மற்றும் கூடலூர் ஜென்மம் நில ஒழிப்பு சட்டம், 1969 ஆகிய சட்டங்கள் இயற்றப்பட்டு மேற்படி சட்டங்களின் மூலம் வனத் துறைக்கு கூடுதலாக வனப்பரப்பு சேர்க்கப்பட்டது. மேற்கண்ட சட்டங்களின் மூலம் வனத்துறைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பரப்பில் ஏற்கெனவே ஜமீன்தாரிகளும், எஸ்டேட் உரிமையாளர்களும் ஆக்கிரமித்த பகுதிகள் தவிர்த்து துறைக்கு ஒதுக்கப்பட்ட பரப்பினை வனச் சட்டத்தின்கீழ் காப்புக் காடாக அறிவிக்க நடவடிக்கை எடுத்த காலகட்டத்தில் ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டன. தமிழ்நாடு வனச் சட்டத்தின்படி காப்புக் காடாக அறிவிக்க விரிவான நடைமுறை கடைப்பிடிக்கப்படுவதால் இந்தப் பணியினை முடிக்க பல வருடங்கள் ஆகின்றன. கூடலூர் பகுதியில் ஜென்மம் நிலங்களில் ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டுள்ளன. அவற்றை வரன்முறைப்படுத்த வேண்டுமென்று கோரிக்கை அவ்வப்போது எழுந்தவண்ணம் உள்ளன. இந்த ஆக்கிரமிப்பாளர்களில் பலர் சமவெளிப் பகுதிகளிலிருந்து வந்தவர்களும், அண்டை மாநிலங்களிலிருந்து வந்தவர்களும் மற்றும் தாயகம் திரும்பியவர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுமாக இருக்கின்றனர். ஜென்மம் நிலத்தை பற்றி வழக்கு கோவர்மன் திருமல் பட் என்பவரால் தொடுக்கப்பட்டு அது உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. ஆட்சேபணையற்ற ஜென்மம் நிலம் அல்லாத நிலங்களிலே ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதோ அல்லது வரன்முறைப்படுத்துவதோ ஒரு சிக்கலான செயலாகும். கூடலூர் மற்றும் இதைப்போன்ற மலைப்பாங்கான பகுதிகள் மற்றும் வனம் நிறைந்த பகுதிகள் மிகவும் பேணப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டுமென்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஆகவே இந்தச் சிக்கலான சூழ்நிலையில், இந்த அரசு ஒரு நியாயமான முடிவை எடுக்கும்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு வெ. சின்னையா.

**திரு. வெ. சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993-94-ஆம் ஆண்டுகளில் சமூகக் காடுகளுடைய பங்குத்தொகை, புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஊராட்சிகளுக்கு இன்னும் வழங்கப்படவில்லை. அதனால் ஊராட்சிகளில் வளர்ச்சிப் பணிகள்





பாதிக்கப்படுகிறது. எனவே, விரைவில் ஊராட்சிகளுக்கு இந்தப் பணம் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையென்றாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை விரைவில் நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயம் செய்கின்ற மக்கள், ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்திற்குச் செல்வதற்கு உபயோகிக்கும் வனத் துறைப் பகுதியிலே இருக்கிற சாலைகளை, மாநில அரசுக்குச் சொந்தமான உள்ளாட்சித் துறைகளிலே பராமரிப்பு செய்து, போக்குவரத்து ஏற்பாடு செய்வதற்கு மத்திய அரசினுடைய அனுமதி பெற வேண்டுமென்றும், அப்படி மத்திய அரசின் அனுமதி பெற்றாலும்கூட, வரி செலுத்திவிட்டுத்தான் அந்தச் சாலைகளில் பேருந்துகள் செல்ல வேண்டுமென்றும் இருக்கிற சட்டத்தை மாற்றியமைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரிசர்வ் பாரஸ்ட் என்று சொல்லக்கூடிய காப்புக் காடுகள் வழியாக, வனங்களின் ஊடே செல்லும் சாலைகளை, வனத் துறை மூலமே செப்பனிட விதிகள் உள்ளன. வனத் துறை மூலம் ஒதுக்கப்படும் நிதி அளவு ஓரளவுக்குத்தான் உள்ளது. நிதி அதிகம் உள்ள ஊராட்சிகள் வனத் துறைக்கு நிதியைச் செலுத்தினால், வனச் சாலைகள், வனத் துறை மூலம் போடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறைக்குச் சொந்தமாக இருக்கின்ற நிலங்களில் நீண்டகாலமாக, சுமார் 30 ஆண்டுகளுக்கும் மேலாகக் குடியிருக்கக்கூடிய மக்கள் இருக்கிறார்கள். அப்படி குடியிருக்கக்கூடிய அந்த நிலங்களின் மூலமாக வனத் துறை எந்தவிதமான பலனையும் அடைவதில்லை; வனத் துறை

அந்த நிலங்களைப் பயன்படுத்துவதும் இல்லை. அதன்மூலம் பயன்பெறுவது அந்தப் பகுதியில் வாழ்கின்ற மக்கள்தான். ஆகவே, அங்கே வாழ்கின்ற மக்களுக்குப் பயன்தருகின்ற விதமாக, அதை அவர்களுக்கே உரிமையாக்குகின்ற வகையில் மனைப் பட்டா வழங்குவதற்கான நிலையினை அரசு உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4-வது முறையாகப் பொறுப்பேற்றுள்ள முதல்வர் கலைஞர் அவர்கள், ஜப்பான் அரசிடம் 500 கோடி ரூபாய் நிதியைக் கடனாகப் பெற்று, இன்றைக்கு இருக்கிற தரம் தாழ்ந்த வனங்களை மேம்படுத்த முயற்சிகள் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, வனங்களைத் தனியாருக்குக் கொடுக்கும் உத்தேசம் இந்த அரசுக்கு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தா. உதயசூரியன்.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காலம் காலமாகப் பயிர் செய்யக்கூடிய வன இலாக்காவிற்குச் சொந்தமான நிலங்களைப் பட்டா போட்டுக் கொடுக்க முடியாது என்று இங்கே தெரிவித்தார்கள். நான் கேட்பதெல்லாம் 2 ஏக்கர், 3 ஏக்கர் என்று நிலங்களில் தினை, வரகு, சாமை போன்ற மேட்டுப் பயிர்களைப் பயிர் செய்து பிழைக்கின்ற அந்த மலை வாழ் மக்களுக்கு, பட்டா வழங்கினால் பிரச்சினை இல்லாமல் இருக்கும்—ஏனென்று சொன்னால், டி.என்.ஏ.டி.பி. டெரிடோரியல் ஆர்.எஃப்., வன இலாக்கா அதிகாரிகள் அங்கே பிளேன்டேஷன் செய்கிறார்கள். ஆகவே மூன்று ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலங்களில் பயிர் செய்துவிட்டால் அவர்கள் மீண்டும் பயிர் செய்வதற்கு வசதி வாய்ப்புகள் கிடையாது. ஆகவே, மலைப் பகுதியில் இருக்கின்ற மலைவாழ் மக்களுக்கு, கருணைகூர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அவர்கள் பயிர் செய்கின்ற நிலங்களை, காலம்காலமாகப் பயிர் செய்கின்ற அந்த நிலங்களை அவர்களுக்கே பட்டா வழங்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயசூரியன் அவர்கள் சொல்வது பெரியகல்ராயன் மலைப்பகுதியிலுள்ள இனாம் எஸ்டேட் நிலங்கள் பற்றியது என்று நினைக்கிறேன். மேற்படி நிலங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர், நில ஆணையர் ஆகியோரின் அறிவுரைப்படி கல்ராயன் மலைப்பகுதியிலுள்ள பழங்குடியினருக்கு குடும்பம் ஒன்றுக்கு ஒரு ஏக்கர் வீதம் வழங்கியபின், மீதம் உள்ள பகுதியை வனச் சட்டத்தின்கீழ் அறிவிக்கப்போவதாகக் கூறப்பட்டது. மேலும் அப்பகுதியிலுள்ள ஆக்கரமிப்புகள் அகற்றப்பட்டு, உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின்படி பழங்குடியினரை கல்ராயன் மலையில் அமர்த்துவது என்று ஒப்புக்கொண்டபோதிலும், வனப் பாதுகாப்புச் சட்டம் 1980 விதிமுறைகளைப் பின்பற்றித்தான் மேற்கண்ட பணிகளைச் செய்ய இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, முன்வரிசைத் தலைவர்களின் சார்பாக திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறைக்குச் சொந்தமான பகுதிகளிலே, இந்த வனச் சட்டம் வருவதற்கு முன்னாலே, 1947-க்கு முன்னாலே, நம்முடைய நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்னாலே இருந்து விவசாயம் செய்து வருகின்ற, வனத்தினுடைய மரங்களுக்குப் பாதகம் இல்லாமல் பயிர் செய்கின்ற விவசாயிகள் இருக்கிறார்கள். குறிப்பாக பண்ருட்டி வட்டத்திலுள்ள பகுதியில் 110 ஏக்கர் நிலத்தில் கொய்யாத் தோட்டம் வைத்திருக்கிறார்கள். சமீபத்தில் வெளியேற்ற ஆய்வு செய்கிறீர்கள். இன்னொரு பகுதியிலே வலியரலா என்று சொல்கின்ற ஒரு பகுதி, களியல் கிராமத்தில் உள்ளது. வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்திலே உணவுப் பஞ்சம் இருந்த காலத்தில், அந்த உணவுப் பஞ்சத்தை தீர்ப்பதற்காக அப்போது விவசாயிகளைப் பயிரிடச் சொன்னார்கள். இந்த விவசாயிகளுக்கு பட்டா வழங்குவதிலே என்ன சங்கடம்? இதே பிரச்சினை கேரள மாநிலத்திலே பல்வேறு பகுதிகளில் இந்த பாரஸ்ட் ஆக்ட் வருவதற்கு முன்னாலே விவசாயிகளிடம் இருந்த காரணத்தினால், அங்கு வனத்திற்கு குந்தகம் இல்லாமல், மரத்திற்கும் சேதாரம் இல்லாமல், அவர்களுக்கு பட்டா வழங்குகின்ற ஒரு தன்மையை மத்திய அரசிடம் கேட்டு அங்கு பெற்று இருக்கிறார்கள். அந்த வகையிலே இங்கு நமது தமிழக அரசு உதவி செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1997 அக்டோபர் 16

முற்பகல் 11-05

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் பகுதியினுடைய குறிப்பு என்னிடம் இல்லை. இருந்தாலும்கூட மத்திய அரசின் 1980-ஆம் வருடத்திய வனப் பாதுகாப்புச் சட்டப்படி, அந்தப் பகுதிகள் இருந்தால், கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. ஆவுடையப்பன்.

**திரு. இரா. ஆவுடையப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் கடந்த காலத்தில் வனத்தில் மாடுகள் மேய்வதற்காக பாஸ்கள் வழங்கப்பட்டு இருந்தன. ஆனால், தற்போது அந்த மாடுகள் மேய்வதற்கு கொடுக்கப்பட்டு இருந்த பாஸ்கள் நிறுத்தப்பட்டு, அந்த மாடுகள் இப்போது வனத்தில் சென்று மேய்வதை வன இலாகா அதிகாரிகள் தடுத்து அப்படி மேய்கிற மாடுகளுக்கு அபராதம் விதிக்கின்ற நிலை இருந்து வருகின்றது. பலமுறை அமைச்சர் அவர்களிடம் நான் நேரில் இது குறித்து கூறி இருக்கிறேன். அதிகாரிகளையும் நான் அணுகி சொல்லி இருக்கிறேன். தருகிறோம் தருகிறோம் என்று சொல்லி, ஆனால், இதுவரை அந்த பாஸ் வழங்கப்படாத நிலை இருந்து வந்து இருக்கிறது. எனவே, உடனடியாக, வனத்தில் மாடுகள் மேய்வதற்கு, இதற்கு முன்பு பாஸ்கள் கொடுத்தது போல் பாஸ் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது முண்டந்துறை புலிகள் சரணாலயம் இடத்தில் இருக்கின்ற பகுதி என்று நினைக்கின்றேன். மேற்படி சரணாலயம் பகுதியில் பொதுவாக மத்திய அரசின் விதிமுறைகளின்படி மாடுகள் மேய்வதற்கு அனுமதிகள் கொடுக்கப்படுவது இல்லை; படிப்படியாக அவற்றைக் குறைத்துக்கொண்டு வருகிறார்கள். இருந்தாலும்கூட, பல்வேறு காலங்களில் மக்களுடைய கோரிக்கையாக உள்ள உறுப்பினருடைய கோரிக்கை ஏற்று கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 58, திரு. அ. அசோகன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.



1997 அக்டோபர் 16 ]

**58—**

### திருவாரூரில் அம்பேத்கர் உருவச் சிலை நிறுவுதல்

***8684—திரு. அ. அசோகன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் நகரின் மையத்தில் டாக்டர் அம்பேத்கர் உருவச் சிலை நிறுவ ஆவன செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவாரூர் நகரின் மையப் பகுதியில் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் சிலை நிறுவுவதற்கான வாய்ப்புகள் இப்போது எதுவும் இல்லை.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணல் அம்பேத்கருக்கு பல்வேறு சிறப்புகளைச் செய்து வருகிறது இந்த அரசு. இன்றைக்கு தாழ்த்தப்பட்ட இனத்தினுடைய உண்மையான பாதுகாப்பு அரணாக விளங்கக்கூடிய நம்முடைய கலைஞர் அவர்களுடைய அரசில், திருவாரூர் மாவட்டம் புதிதாகத் துவங்கப்பட்ட மாவட்டங்களிலே மிகவும் தாழ்த்தப்பட்ட ரிசர்வ் தொகுதி அடங்கிய மாவட்டம். அதுவும் குறிப்பாக இன்றைக்கு யார் யாரோ தாழ்த்தப்பட்ட இனத்தின் ஒட்டுமொத்தப் பிரதிநிதி என்று வாயளவிலே பேசி வருகின்ற நேரத்தில், உண்மையான பாதுகாப்பு அரணாக இருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்கள் வலம் வந்த திருவாரூர் நகரின் மையப் பகுதியில் அண்ணல் அம்பேத்கர் சிலை வைப்பது குறித்து மறுபரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்குப்

பல்வேறு வகையில் சிறப்புச் சேர்க்கிற வகையில் சட்டக் கல்லூரியை அவர்தான் அமைத்தார். அதேபோல் அரசின் சார்பாக சிலையும் அமைக்கப்பட்டு இருக்கிறது. இப்போது இந்தியாவிலே முதன்முறையாக இந்தியத் துணைக் கண்டத்தில் யாரும் செய்யாத அளவுக்கு அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு பெருமை சேர்க்கிற வகையில் அண்ணல் அம்பேத்கர் அவர்கள் பெயரால் சட்டக் கல்லூரி அமைத்து பெருமை சேர்த்து இருக்கிறார். இதைவிட வேறு ஒரு பெருமை எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டப் பல்கலைக்கழகம்; சட்டக் கல்லூரி இல்லை. (குறுக்கீடு) பல்கலைக்கழகம்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** தலைவர் அவர்களே, முதலில் சட்டக் கல்லூரி; பிறகு சட்டப் பல்கலைக்கழகம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 59, திரு. ஜி. சொக்கலிங்கம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**59—**

### தொழுநோய் இல்லத்தை விரிவுபடுத்துதல்

***8566—திரு. ஜி. சொக்கலிங்கம்:**

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், பரனூர் தொழுநோய் இல்லம் விரிவுபடுத்தபடுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி எஸ். பி. சற்குணபாண்டியன், சமூகநலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





(அ) இல்லை.

(ஆ) வினா எழ இடம் இல்லை.

முற்பகல் 11-10

**திரு. ஜி. சொக்கலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் காலத்தில்தான் முதல் முதலாகப் பரனூர் இல்லம் துவக்கப்பட்டது. ஏற்கெனவே அங்கே 320 குடும்பங்கள் இருந்தன. இப்போது 550-க்கும் மேற்பட்ட தொழு நோயாளிகள் குடும்பத்தினர் அங்கே வசிக்கிறார்கள். அவர்களுக்குக் குடியிருப்புகள் இல்லாததால், மரத்தடிகளிலும் வெளியிலும் தங்கி கஷ்டப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் நேரடியாகவும் அங்கே போய்ப் பார்த்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் கருணை வைத்து, அந்தத் தொழு நோயாளிகளுக்குக் குடியிருப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரனூர் தொழு நோயாளிகள் இல்லத்தை நான் மூன்று முறை சென்று பார்த்திருக்கிறேன். நம்முடைய முதல்வர் அவர்களுடைய அறிவிப்புக்கிணங்க, அந்த இல்லத்தில், கடந்த ஆண்டு புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படாதவர்கள் எல்லாம் இந்த ஆண்டு சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றார்கள். அங்கே இருக்கிற தொழு நோயாளிகள் மிகவும் மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள். அங்கே பழுதுபார்க்கப்பட வேண்டிய சில குறைபாடுகள் இருப்பதாக என்னிடத்தில் தெரிவித்திருக்கிறார்கள். புதிய இல்லக் கட்டிடங்கள், சமையல் அறை, பம்ப் அறை, அலுவலகக் கட்டிடங்கள், அரசுக் குடியிருப்புகள் பழுது பார்க்கும் பணி, கிணற்றை ஆழப்படுத்தும் பணி, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைப் பழுது பார்க்கும் பணி, தண்ணீர்க் குழாய் லைன்களைச் சரி செய்யும் பணி, மின் கம்பிகளைச் சீர் செய்யும் பணி ஆகியவைகளுக்கான மதிப்பீடுகளைப் பெற்று அனுப்பவேண்டுமென்று, செங்கல்பட்டு உதவி செயற்பொறியாளர் அவர்களிடத்தில் கேட்கப்பட்டுள்ளது. அவரிடமிருந்து விவரங்கள் வந்த பிறகு, அதற்கான முயற்சியில் அரசு ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 60. திரு. ப. கோவிந்தன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

**60—**

**பட்டு நெசவு மையம் துவக்குதல்**

***7987—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

. சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, அமரகுந்தியில் கதர்த் துறையின்கீழ் ஒரு பட்டு நெசவு மையம் திறக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, அமரகுந்தியில் கதர்த் துறையின்கீழ் பட்டு நெசவு மையம் திறக்க, சாத்தியக் கூறுகள் இல்லை.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமரகுந்தி கிராமத்திலே பட்டு நெசவாளர்கள் அதிகமான அளவில் வசிக்கிறார்கள். அந்தப் பகுதியில் கதர்த் துறையின் மூலமாக ஒரு பட்டு நெசவு மையம் ஏற்படுத்திக் கொடுத்தால், அந்த மக்கள் வாழ்க்கையிலே முன்னேற்றம் ஏற்படும், வளம் பெற ஏதுவாக இருக்கும். ஆகவே அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்து, அங்கே பட்டு நெசவு மையம் ஏற்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமரகுந்திக்கு மிக அருகில் குஞ்சாண்டிப்பூர், சேலம், ராசிபுரம், போன்ற இடங்களில் பிரதான பட்டு நெசவு மையங்கள் இப்போதே இயங்குகின்றன. அமரகுந்தியில் இருக்கிற நெசவாளர்கள் விரும்பினால், அவர்களுக்கு குஞ்சாண்டிப்பூரில் வாய்ப்பு அளிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]





## 2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பதிலாக, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

*முற்பகல் 11-15*

### (இ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகின்றது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 3. அறிவிப்பு

### இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1997-ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவினைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கின்றார்கள்.

## 2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— தொடர்ச்சி

### (ஈ) இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 1997-ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு பேரவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகின்றது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பேரவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

### (உ) பதிவு செய்தல் (தமிழ்நாடு இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு பதிவு செய்தல் (தமிழ்நாடு இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு பேரவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு பதிவு செய்தல் (தமிழ்நாடு இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேவை முன்னவருடைய தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகின்றது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.





ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பேரவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. அரசினர் தீர்மானங்கள்

### (அ) விதி 33-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் அலுவல்களை இன்று எடுத்துக் கொள்வது குறித்த அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 33-ஐத் தளர்த்தி இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகின்றது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 59/1997). மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[1997 அக்டோபர் 16

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 59/1997) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. பசும்பொன் தா. கிருட்டிணன் தலைமை)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்):** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியச் சட்டத்தைத் திருத்துவதற்காக ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தின்படி யாராவது குற்றம் இழைத்தால் அதற்கு 1,000 ரூபாய் வரை அபராதம் விதிக்க வேண்டுமென்று ஒரு நிலைமை இருப்பதை மாற்றியமைத்து இப்போது அந்த வாரியத்தினுடைய அலுவலர் அல்லது ஊழியர் ஏதாவது மதிப்பீட்டைச் செய்து, அந்த மதிப்பீடு எந்த அளவிற்கெல்லாம் வரம்பின்றி அபராதம் விதிக்க வேண்டிய ஒரு நிலை இந்தச் சட்டத்தின் மூலமாகக் கொண்டு வருகிறார்கள்.

முற்பகல் 11-20

இப்படிப்பட்ட சட்டம் ஒருவேளை வரம்புமீறிச் சென்றுவிடும் என்று சொன்னால், அதிகாரிகள் நினைத்ததுபோல், அவர்கள் அபராதத் தொகையை நிறுத்துவது, நீதிமன்றத்தினுடைய வரம்பினுடைய எல்லைக்கு நீங்கள் உட்சென்று நீதிமன்றத்தினுடைய கைகளை கட்டுவதற்கு இணையாக மாறிவிடும். ஆகவே இந்த அளவிற்குத்தான் நட்டம், இந்த நஷ்டயீட்டை அவர்கள் கொடுக்க வேண்டும் என்று

@15-10-1997 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1997 அக்டோபர் 16] [திரு. சி. ஞானசேகரன்]

சொல்வது நியாயமாக இருக்காது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் — உங்களுடைய கருத்தை வேண்டுமானால் நீங்கள் நீதிமன்றத்திற்குத் தெரிவிக்கலாம். அந்தக் கருத்தை அவர்கள் ஆய்வு செய்து நடுவர் எந்தத் தீர்ப்பை வழங்குகிறாரோ அந்த அளவிற்கு அபராதத் தொகை அமைய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, இதுபோன்ற ஒரு சிறு குற்றம் செய்கிறபோது நீங்கள் அபராதத் தொகை வசூலிக்கிறீர்கள். ஆனால் குடிநீர் வழங்குகிறபோது, அது கிராமங்களுக்குச் சரியாகப் போய்ச் சேருவதில்லை என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். கிராமங்களிலே உள்ள வீடுகளின் குழாய் இணைப்பிற்கு தடையாணை இருக்கிறது. எங்கெங்கெல்லாம், எந்த கிராமங்களிலே எல்லாம் தண்ணீர் வசதி இருக்கிறதோ, அந்த வசதி இருக்கக்கூடிய இடங்களில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த ஆணையைத் தளர்வு செய்து, அந்தக் கிராமங்களிலுள்ள வீடுகளுக்கு குழாய் இணைப்பு வழங்கப்படும் என்கிற ஒரு மாற்றத்தை கொண்டு வந்தால் கிராமங்களிலே இருக்கக்கூடிய ஆயிரக்கணக்கான மக்கள் பயனடையக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். சில இடங்களில் இப்படிப்பட்ட தடையாணை இருக்கிறபோது, அதைச் செயல்படுத்தக்கூடிய ஒரு அமைப்பில் இருக்கிறவர்களாவது ஒழுங்காக நடந்துகொள்கிறார்களா என்றால் இல்லை.

என்னுடைய வேலூர் ஒன்றியத்தை எடுத்துக்கொண்டாலும்கூட, அந்தத் தடையாணை இருக்கிறபோது, அந்த வேலூர் ஒன்றியக் குழுவினுடைய தலைவர் அவருடைய வீட்டிற்கு தடையாணையை மீறி இப்போது குழாயைப் போட்டுக் கொண்டிருக்கிறார். இதுபற்றி கலெக்டர் அவர்களிடம்கூட நாங்கள் ஏற்கெனவே சொல்லிப் பார்த்தோம். ஆணை இருக்கிறது, ஆனால் அந்தத் தவறு இழைத்த சேர்மேன் மேல் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை. அதேபோல கிராமங்களிலே தலைவரை எடுத்துக்கொண்டால், அவர் 1,000 ரூபாய், 1,500 ரூபாய் வசூல் செய்து கொண்டு, 72 ரூபாய்க்கு ரசீதுகளை முன்தேதி போட்டு, வீட்டுக் குழாய்களுக்கு இணைப்பு கொடுத்து விடுகிறார்கள். ஆகவே சட்ட மீறல்கள் எல்லா

கிராமங்களிலும் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்கு நாம் எப்படி வழிவகை காணவேண்டும் என்று சொன்னால், நீர் ஆதாரம் இருக்கக்கூடிய கிராமங்களில் அந்தத் தடையாணையை நீங்கள் தளர்த்தி அந்தத் தலைவரோ, அதற்கு ஸ்பெஷல் ஆபீசராக இருக்கக்கூடிய பி.டி.ஓ. போன்றவர்கள் அல்லது மாவட்ட ஆட்சித் தலைவருடைய அனுமதியோடு வீடுகளுக்கு குழாய் இணைப்பைக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டும். அந்தத் தடையாணையைத் தளர்த்த வேண்டும், தண்ணீர் கிராமத்து மக்களின் வீடுகளுக்கு போய் சேரக்கூடிய அளவுக்கு நீங்கள் வழிவகை காண வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டமுன்வடிவில் அமைச்சர் அவர்கள் அபராதத் தொகையை எல்லையின்றி போட்டு விட வேண்டாம், நீதிமன்றத்தினுடைய முடிவிற்கு நீங்கள் விட்டு விடுங்கள், வேண்டுமானால் எவ்வளவு நட்டம் என்பதை மட்டும் நீங்கள் ஒரு அறிக்கையாக உங்களுடைய குற்றச்சாட்டிலே நீதிமன்றத்திற்குத் தெரிவித்தால், நீதிமன்றம் அதன்மூலம் அந்த அபராதத் தொகையை வசூலிப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்):** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார். ஒரே ஒரு கருத்துதான் இந்தச் சட்டத்தின் நோக்கம். இதுவரை தவறுதலாக அந்தக் குடிநீர் வடிகால் வாரியம் அமைத்து இருக்கிற குழாய்களிலோ மற்ற இனங்களிலோ தவறு செய்தால் நஷ்டயீட்டிற்கு ஆயிரம் ரூபாய் அபராதம் போடலாம் என்றிருக்கிறது. இந்தச் சட்டத்தை இயற்றுகிறபோது இருந்த பொருள் விலைக்கும், தற்போது இருக்கக்கூடிய பொருள் விலைக்கும் ஏராளமான வித்தியாசம் இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் உச்சவரம்பு வேண்டாம். வழக்கை நடத்துகிறவரிடம் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போன்று, இந்த வழக்கில் சம்பந்தப்பட்டு இருக்கிற பொருளுக்கு இவ்வளவு நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது என்று அறிவித்து விட்டால் உச்சவரம்பு இல்லாமல் இருந்தால் அவர்கள் தீர்ப்பளிப்பதற்கு வாய்ப்பு அமைந்து இருக்கும். உச்சவரம்பு 1,000 ரூபாய் என்று இருந்தால் 5,000 ரூபாய்க்கு





குற்றம் செய்து விட்டு, ஆயிரம் ரூபாய்க்கு அபராதம் போட்டால் அந்த நஷ்டயீட்டை சரி கட்டியதாக ஆகாது. எனவே இது அபராதம் இல்லை, நஷ்டயீட்டைப் பெறுவதற்காகத்தான், உச்சவரம்பு தேவையில்லை என்பதை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். அதைத் தவிர வேறு ஒன்றுமில்லை. இன்னொன்றைச் சொன்னார், வீடுகளுக்கு குழாய் இணைப்பைத் தரவேண்டும் என்று. நகரப் பேரூராட்சியில் இப்போதே இந்த விதி இருக்கிறது. நீர் ஆதாரத்தைக் கண்டுபிடித்துக் கொடுக்கிற குடிநீர் வடிகால் வாரியத்தால் இந்த ஊருக்கு இந்தத் திட்டத்தால் இவ்வளவு நீர் இத்தனை ஆண்டுகளுக்குக் கிடைக்கும் என்று அறிவித்து, எவ்வளவு மக்களுக்குத் தேவை, ஒரு ஆளுக்கு எத்தனை லிட்டர் என்ற வீதம் பார்த்து, அதற்கு மேல் மிஞ்சி இருந்தால் கொடுக்கலாம் என்ற விதி இருக்கிறது. ஆனால் கிராமப் பஞ்சாயத்திலே இல்லை, அதற்குக் காரணம் என்னவென்றால், இன்னும் தேவையான அளவு குடிநீர் கொடுக்க முடியவில்லை. நீர் ஆதாரம் ஒரு முறை இருக்கிறது, பிறகு கீழே போய் விடுகிறது. நிரந்தரமாக இல்லை. நிரந்தரமாக, நிச்சயமாக நீர் ஆதாரம் பலன் அளிக்கும் என்று தெரிந்தால், அதிலே அதிகப்படியான நீர் இருந்தால் அதுபற்றிப் பரிசிலிக்கலாமே தவிர, இப்போது இருக்கிற நிலைமையில் இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இந்த உச்சவரம்பற்ற இந்த நஷ்டயீட்டுத் தொகையை ஏற்றுக்கொண்டு நீங்கள் இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

முற்பகல் 11-25

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்):** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உச்சவரம்பை மட்டும் தளர்த்தலாம் என்று சொன்னதை வேண்டுமானால் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், நோக்கம் என்று சொல்லக்கூடிய இந்த விளக்க உரையைப் படிக்கிறபோது, எந்த அளவிற்கு நஷ்டம் ஏற்படுகிறதோ, அந்த அளவிற்கு வசூலிக்கப்படும் என்று இதில் இருக்கிறது. அந்த அளவீட்டையே அதிகாரிகள்தான் சொல்லவேண்டும் என்று இருப்பதை மாற்றி அமைத்து, உச்ச வரம்பை வேண்டுமானால் எடுக்கலாம் என்ற வகையில், விளக்க உரை அமைவது சாலப் பொருத்தமாக இருக்கும்.

அடுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல கிராமங்களுக்கு ஒட்டுமொத்தமாக இப்போது குடிநீர் குழாய் இணைப்பு பெறுவதில் தடை இருக்கிறது. ஒட்டுமொத்தமாக இருக்கக்கூடிய இந்தத் தடையாணையைத் தளர்த்தி, நீர் ஆதாரம் இருக்கக்கூடிய கிராமங்களிலே, மாவட்ட ஆட்சித் தலைவருடைய ஆலோசனையோடு வீடுகளுக்கு குழாய் இணைப்பு கொடுப்பதற்கு, ஆதாரம் இருக்கிற இடத்திலே மட்டும் கொடுப்பதற்கு, அமைச்சர் அவர்கள் போர்க்கால அடிப்படையிலே நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இதுவரையிலும் தண்ணீர் இல்லாத இடங்களில் தண்ணீரை எப்படிச் சேகரித்துக் கொடுப்பது என்கிற ஆய்வு நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. போதுமான அளவிற்குக் கொடுக்கப்படாத கிராமங்களுக்கு அதிகப்படியான சோர்சை எப்படிக் கண்டுபிடிப்பது என்பது வேறு இருக்கிறது. இப்படி இருக்கிற நேரத்தில், அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வந்து, குழாய் இணைப்புகளைக் கொடுத்துவிட்டு, பிறகு பொது இடத்திற்குக் கேட்கிறபோது, இல்லாமல் போகிற சூழ்நிலை வரும். ஆகவேதான், இதை மூன்றாவது கட்டமாகத்தான் பரிசீலனை செய்யலாம் என்று என்னைப் பொறுத்தவரையிலும் நான் கருதுகிறேன். முதல் கட்டம், குடிநீரே இல்லாத கிராமங்களுக்குக் குடிநீர் கொடுப்பது. இரண்டாவது கட்டம், கொடுக்கவேண்டிய அளவுக்குக் கொடுக்க முடியாத நிலையை மாற்றி அமைப்பது. மூன்றாவதாக வேண்டுமானால், அதிகப்படியாகக் கிடைக்கின்ற இடங்களில் வேண்டுமானால், கிராமப்புறங்களுக்குக் கொடுக்கலாம். பல்வேறு வகைகளிலே, குடிநீர் வடிகால் வாரியத்தில் பல ஜீ.ஓ.க்களை மாற்றி இருக்கிறோம்; பல விதிகளைத் தளர்த்தி இருக்கிறோம். எனவே, அதேபோன்று விதியைத் தளர்த்தக் கூடாது என்பதல்ல, தளர்த்தலாம், பரிசீலித்துச் செய்வோம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்):** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.





*சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.*

*பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.*

*பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.*

*பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

*" 1997—ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 59/1997) நிறைவேற்றப்பெற வேண்டும்."*
எனக் கோருகிறேன்.

[1997 அக்டோபர் 16

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்):** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தம் மற்றும் செல்லத்தக்க தாக்குதல்) சட்டமுன்வடிவு, 1997**

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்):** 1997–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 60/1997), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

"1997–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 60/1997) @ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்):** அடுத்து வருகிற 3 சட்டமுன்வடிவுகளும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தொடர்புடையவை. எனவே, இந்த 4 சட்டமுன்வடிவுகளையும்

@15-10-1997ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1997 அக்டோபர் 16 ] [மாற்றுத் தலைவர்]

ஒன்றாக விவாதத்திற்கு எடுத்துக் கொண்டு, உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைக் கூறலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அழகிரி.

முற்பகல் 11-30

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவில் தமிழ் மாநிலக் காங்கிரஸ் சார்பாக என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

மூன்று கணக்குகளையும் உள்ளாட்சி மன்றத் தலைவரும், துணைத் தலைவரும் சேர்ந்து நிர்வகிக்க வேண்டுமென்று இந்தச் சட்ட முன்வடிவு கூறுகிறது. இதை மேலோட்டமாகப் பார்க்கிற போது ஏதோ நிர்வாகச் சீர்திருத்தத்திற்காகச் செய்வது போன்று தோன்றினாலும்கூட, உண்மையிலேயே ஊராட்சி அமைப்புகளைச் சிறுமைப்படுத்தும் நோக்கத்தோடு இந்த சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதுதான் என்னுடைய கருத்து. நீண்டகாலமாகவே உள்ளாட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டிய முறையான உரிமைகள், வழங்கப்படவில்லை என்கின்ற என்னுடைய குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்துகின்ற வகையிலே இந்தச் சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஜனநாயக அமைப்பு என்பதற்கு வேண்டுமானால், தமிழகத்தைப் பொறுத்தவரையில், இந்தியாவைப் பொறுத்தவரையில் 50 ஆண்டுகால அனுபவம்தான் நமக்கு இருக்கிறது. ஆனால் உள்ளாட்சிகளைப் பொறுத்தவரையில் குடவோலை மூலமாகவே நாம் கிராமத் தலைவர்களைத் தேர்ந்தெடுத்து, வெற்றிகரமாக அந்தத் தலைவர்கள் கிராமங்களை நிர்வகித்து வந்திருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது இப்போது மட்டுமே அந்தக் கணக்குகளை நிர்வகிக்க தலைவர்கள், துணைத் தலைவர்கள் தேவை என்று சொல்வது தேவைதானா என்பதனை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களே ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராக இருந்தவர்கள். அவர்களுடைய காலத்திலே இந்தக் கணக்குகள் உள்ளாட்சி மன்றத் தலைவர் ஒருவரால் மட்டுமே நிர்வகிக்கப்பட்டு வந்தது. அது சிறப்பாகவும் இருந்தது. தேவையான

உரிமைகளும், அதிகாரங்களும் அப்போது அந்தத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டன. எனவே அவர்கள் சுயமாக அந்த வேலைகளைச் செய்ய முடிந்தது. எனவே இந்த அதிகாரத்திலே வேறு ஒரு தலைவரைக் கொண்டுபோய் விடுவது அவசியம்தானா என்பதனை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் பலகாலமாகச் சொல்லி வருகிறோம். தேவையான அதிகாரங்கள் உள்ளாட்சிகளுக்கு வழங்கப்படவில்லை என்பதைச் சொல்லி வருகிறோம். அதிலே முதன்மையானது ஒன்று. வேலை உறுதியளிப்புத் திட்டம். இந்தத் திட்டத்திற்கான செலவு மத்திய அரசாங்கத்தினுடைய தொகையிலிருந்து வழங்கப்படுகிறது. கிராமப்புறங்களிலே விவசாயம் இல்லாத நேரங்களில், வேலை இல்லாதவர்களுக்கு வேலை வழங்க வேண்டும் என்பதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிற திட்டம் இது. ஆனால் இந்தத் திட்டத்திலே 40 சதவீதம் மட்டுமே ஊராட்சி ஒன்றியங்கள், உள்ளாட்சி மன்றங்கள் செய்கின்றன. மீதி 60 சதவீத வேலைகள் வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாகச் செய்யப்படுகின்றன. இப்படி செய்யப்படுவதிலே என்ன நியாயம் இருக்கிறது என்பதனை நான் இந்த மன்றத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் தன்னுடைய அதிகாரத்தை ஏன் விட்டுக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்க விரும்புகிறேன்.

இந்தத் திட்டத்தினுடைய நோக்கம் என்னவென்றால் - உதாரணமாக சென்ற மாதம் நாங்கள் உறுதிமொழிக் குழுவின் சார்பாக திருநெல்வேலி, இராமநாதபுரம், சிவகங்கை ஆகிய மாவட்டங்களுக்குச் சென்றிருந்தோம். அப்போது அங்கே அதிகமாகச் சொல்லப்பட்ட விஷயம், வறட்சி கடுமையாக இருக்கிறது, எனவே அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற மக்கள் கேரளத்திற்குப் பிழைக்கச் சென்றிருக்கிறார்கள், கிராமங்களிலே மக்கள் இல்லை என்கின்ற ஒரு கருத்து பரவலாகச் சொல்லப்பட்டது. எனவே, இதுபோன்ற வறட்சிக் காலங்களிலே கிராமப் புறங்களில் வேலையில்லாமல் இருக்கிறவர்கள், பசியால் வாடுகின்றவர்கள் ஆகியோருக்கு வேலை தர வேண்டுமென்பதற்காகத்தான் வேலை உறுதியளிப்புத் திட்டம் என்ற திட்டத்தை மத்திய அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது. ஆனால் நம்முடைய அரசாங்கம் அந்தத் திட்டத்தினுடைய நோக்கத்தையே மாற்றி, அவர்களுக்கு வேலை தருவதற்குப் பதிலாக இயந்திரங்களுக்கு வேலை தருவதற்காக வேளாண்மைப் பொறியியல் துறைக்கு அந்த வேலைகளை வழங்குவது எப்படி முறையாகும் என்று நான் கேட்கிறேன். ஆகவே இது 'ட்ரஸ்பாஸ்' பண்ணுவதாகும். இது ஒரு அத்துமீறல். மத்திய அரசாங்கத்தினுடைய





கொள்கைகளை, திட்டங்களை, செயல் முறைகளை அத்துமீறல் செய்து வேறு ஒரு துறைக்கு அந்தப் பணத்தை மாற்றுவது, மனித உழைப்பிற்காக வழங்கப்பட்ட பணத்தை இயந்திரங்களுக்காகத் தருவது என்பது முற்றிலும் ஏற்புடையது அல்ல. இந்தப் பிரச்சினை பாராளுமன்றத்திலே கிளப்பப்பட்டால் அல்லது நம்முடைய 'ஆடிட் அப்ஜெக்ஷனிலே' வருமேயானால், அடுத்த ஆண்டுக்கான நிதி நமக்குக் கிடைக்காது. எனவே இதற்காக அதிகாரிகள் என்ன செய்கிறார்கள் என்றால், இயந்திரங்களின் மூலமாகக் குளங்களை வெட்டிவிட்டு, கிராமப்புறங்களுக்குச் சென்று மக்கள் மூலமாக வெட்டப்பட்டதாகக் கையெழுத்துப் பெறுகிறார்கள். இது எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் நடைபெறுகிறது. எனவே ஆரம்பிக்கிறபோதே தவறான ஒரு நோக்கத்தோடு அதிகாரிகள் செல்கிறார்கள் என்பதற்காக - வேலைகளை எப்படியாவது விரைந்து முடிக்க வேண்டும், பணம் செலவாக வேண்டும் என்பதற்காக - எந்த நோக்கத்திற்காக நாம் ஆரம்பித்தோமோ, அந்த நோக்கத்திற்கு எதிர்த் திசையாக, எதிர்மறையாக இந்தப் பணிகளை நாம் செய்வோமேயானால் அது சட்டத்திற்குப் புறம்பானது, தண்டனைக்குரிய குற்றம் என்பதனை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்ல ......

**மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்):** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

முற்பகல் 11-35

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் வேளாண்மைத் துறை செய்கின்ற அந்தப் பணி ஏதோ சட்டத்திற்குப் புறம்பாக நடைபெற்றுக் கொண்டிருப்பதாக ஒரு உண்மைக்கு மாறான தகவலை இந்த அவைக்குத் தந்து கொண்டு இருக்கிறார்கள். கசிவுநீர்க் குட்டைகள் போன்றவைகளை அமைக்கின்ற அந்தப் பணிகளுக்குத்தான் அவை செலவழிக்கப்படுகின்றன. கசிவுநீர்க் குட்டையை நாம் அமைக்கின்றபோது, சில நேரங்களிலே அவற்றை ஆழப்படுத்துவதற்காக 'புல்டோசர்'களை நாம் பயன்படுத்துகின்றோம். பிறகு மண்ணை அள்ளி கரைமேல் போடுவது போன்ற பணிகளுக்கு எல்லாம் தனி கூலி ஆட்களை வைத்துத்தான் செய்கிறோம். அவர்களுக்கு 60 சதவிகிதம் தமிழ்நாட்டிலே வழங்கப்படுகின்றது. 10 சதவிகித அளவுக்குத்தான் புல்டோசர் போன்றவைகளை, வைத்து ஆழப்படுத்தி, மண்ணை

எடுப்பதற்காகப் பயன்படுத்துகிறோமே தவிர, முழுமையாக புல்டோசர் இயந்திரத்தைப் பயன்படுத்துவதில்லை. அதுவும், கசிவு நீர்க் குட்டை போன்றவைகளை இந்தத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றுவதற்குக் காரணம், அப்படி அந்தக் குட்டைகளை அமைத்தால் நிலத்தடி நீர் கிடைக்கும் என்ற நோக்கத்தோடுதான், விவசாய மக்களுடைய வேண்டுகோளை, அந்த கிராம மக்களுடைய வேண்டுகோளை ஏற்றுதான் இதுபோன்ற நலத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றதே தவிர, இதிலே தவறு ஒன்றும் நடைபெறவில்லை. எனவே, ஒரு நல்ல திட்டத்தைக் உள்நோக்கோடு இங்கே பேசக் கூடாது.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, எனக்கு எந்தவிதமான உள்நோக்கமும் கிடையாது. அமைச்சர்களைப் பொறுத்தவரையில், இந்த இரண்டு அமைச்சர்களைப் பொறுத்தவரையில் எங்களுக்கு எந்தவிதமான உள்நோக்கமும் கிடையாது. உங்களுடைய சீரிய பணிகளுக்கு எங்களுடைய எல்லாவிதமான உடன்பாடும் உண்டு. ஆனால், திட்டம் தவறான முறையில் அமல்படுத்தப்படுகிறது என்பதுதான் என் கருத்து. குளம் வெட்டுவது நல்ல நோக்கம்தான். குளம் வெட்டுவது என்பது அசோகர் காலத்திலேயிருந்து வெட்டப்படுகிறது. அது அசோகர் வெட்டினாலும் வரவேற்க வேண்டியதுதான், வீரபாண்டியார் வெட்டினாலும் வரவேற்க வேண்டியதுதான். அதிலே மாற்றுக் கருத்து கிடையாது. ஆனால், குளம் வெட்டுவது மனித உழைப்பை வைத்துத்தான் வெட்டப்பட வேண்டுமேயொழிய, இயந்திரங்களை வைத்து வெட்டப்படக்கூடாது என்பது மத்திய அரசாங்கத்தினுடைய 'கைட்லைன்ஸ்'லே தெளிவாகக் குறிக்கப்பட்டு இருக்கிறது. அப்படி இருக்கிறபோது, நீங்கள் வறட்சிக் காலத்திலே, மனிதர்களின் வறட்சியைப் போக்க வேண்டும் என்பதற்காக அளிக்கப்படுகிற நிதியிலிருந்து நீங்கள் இயந்திரங்களை வாங்கி வந்து — இப்போது புதிய இயந்திர முதலாளிகளை தமிழ்நாடு முழுவதும் நாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். நாங்கள் முன்பு சிதம்பரத்திற்குச் செல்ல வேண்டுமென்றால், பாண்டிச்சேரிக்குப் போகிற வழியிலே டாடா கம்பெனிக்காரர்கள் நிறைய கார்களை கொண்டு வந்து நிறுத்தியிருப்பார்கள். ஆனால், அவர்கள் எல்லாம் இப்போது 'பக்கெட் வீலரை'க் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார்கள். ஏன் என்று கேட்டால், வேளாண்மைப் பொறியியல் துறையிலே அதிகமான வேலை கொடுக்கிறார்கள். அதனால் நிறைய இயந்திரங்கள் வந்திருக்கிறது என்று அவர்கள் சொல்கிறார்கள் எனவே, ஏழைகளுடைய பசிப் பிணியைப் போக்குவதற்காகக் கொண்டு வந்திருக்கிற திட்டத்தை,





இயந்திர முதலாளிகளை உருவாக்குவதற்காக நாம் மாற்றுவோமேயானால், அது தவறு என்றுதான் நான் சொல்கிறேன். அந்தவகையிலே, குளம் வெட்டுவது தவறல்ல, ஆனால் அது மனிதர்களை வைத்துத்தான் வெட்டப்பட வேண்டும். அது, உள்ளாட்சி அமைப்புகளின் மூலமாகத்தான் வெட்டப்பட வேண்டும். உதாரணமாக, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மத்திய நிதியமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்களுடைய கருத்துக்கு ஒரு பதில் சொல்லியிருந்தார்கள். திரு. சிதம்பரம் அவர்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரம் வழங்கப்படவில்லை என்று சொன்னபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 23-7-1997 அன்று ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தார்கள். அதிலே, வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தின் பணிகளைத் தேர்ந்தெடுத்து செயலாற்றும் அதிகாரம், ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் சார்பாக, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 70 லட்சம் ரூபாய் பணம் வழங்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியத்திற்கு இந்தத் திட்டம் ஒதுக்கப்பட்ட பிறகு, வேளாண்மைப் பொறியியல் துறைக்கு இது மாற்றப்பட்டதற்கான காரணம் என்ன? ஏன் மாற்றப்பட வேண்டும்? அதைத்தான் நான் சொல்கிறேன். உள்ளாட்சிகளுக்கான அதிகாரங்களை நீங்கள் பிரித்துக் கொடுக்கிறீர்கள். உள்ளாட்சிகளை அதிகாரமற்ற ஒரு அமைப்பாக ஆக்க வேண்டுமென்பதற்காக எல்லா இடங்களிலும் அதிகாரம் பரவலாக்கப்படுகிறது. ஆனால், இந்த இடத்திலே இருக்கிற அதிகாரத்தையும் பிரித்து வேறு துறைக்கு வழங்கப்படுகிறது. எனவேதான் நாங்கள் சொல்கிறோம், உள்ளாட்சி அமைப்புகளை, இந்த அரசாங்கம் திட்டமிட்டு, அதிகாரமற்ற ஒரு அமைப்பாக மாற்றி வருகிறார்கள் என்பதனை நான் மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் மூலமாக அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மணியடிக்கப் பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் மாற்றுத் தலைவர் (திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்):** *10 நிமிடங்கள் ஆகிவிட்டன.*

**திரு. ச. அழகிரி:** நான் ஏற்கெனவே மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் சொல்லியிருக்கிறேன். அடுத்ததாக, மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின் பேரில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மொத்த வருவாயில் 8 சதவிகிதம் வழங்கப்படுவதாக நாம் கூறியிருக்கிறோம். 26-3-1997-ல் அரசாணை அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அப்படி நாம்

சொல்லியிருக்கிறபோது மொத்த வருவாயிலே 8 சதவிகிதம் மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின் பேரில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கிவிட்டு அதே ஆணையிலே நாம் சொல்கிறோம். அதற்கு முன்பு வழங்கப்பட்ட உள்ளூர் சாலை மானியம் மற்றும் வீட்டுவரி இணை மானியம் போன்றவைகள் இனிமேல் கொடுக்கப்பட மாட்டாது என்று நாம் சொல்லியிருக்கிறோம்.

முற்பகல் 11-40

நான் இந்த இடத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே இந்தத் திட்டங்கள் எல்லாம் உள்ளாட்சி மன்றங்களுக்கு மேற்கூறிய உள்ளூர் சாலை மானியம் மற்றும் வீட்டுவரி இணை மானியம் போன்றவை தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் 94, பகுதி 180, 182, 183-ல் வழிவகை செய்யப்பட்டுள்ள நிலையில் அரசு இந்த சட்ட விதிகளைத் திருத்தாமல் மேற்கூறிய அரசு ஆணை மூலம் இதை ரத்து செய்திருக்கிறது. நான் கேட்கிறேன், உள்ளாட்சி அமைப்புகள் என்றால் என்ன கிள்ளுக்கீரையா? எந்த ஒரு சட்டத்தை நீங்கள் மாற்றுவதாக இருந்தாலும் பேரவையிலே அதைக் கொண்டு வந்து பேரவையினுடைய அனுமதியைப் பெற்று அதன் பிறகுதான் மாற்ற வேண்டும். வருவாய்த் துறையிலே அமைச்சர் விட்டுவிடுவாரா? தொழில் துறையிலே முதலமைச்சர் விட்டுவிடுவாரா? காவல் துறையிலே விட்டுவிடுவார்களா? உள்ளாட்சித் துறை அமைச்சர் மட்டும் இதை அனுமதிக்கலாமா? அதிகாரிகள் வெறும் ஒரு அரசு ஆணையின் மூலமாக, ஒரு ஜி.ஓ.வின் மூலமாக இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்றால் இது உரிமை மீறல் பிரச்சினை. நான் உரிமை மீறல் பிரச்சினையைப் பேரவைத் தலைவரிடம் கொடுத்திருக்கிறேன். அவர் சொன்னார், நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன், இல்லையென்றால் நீங்கள் பேசுகிறபோது இதைப் பேசிவிடுங்கள் என்று சொன்னார். எனவே ஒரு உரிமை மீறல் பிரச்சினைக்கு இலக்காகக்கூடிய ஒரு சட்டத் திருத்தத்தை அரசாங்க அதிகாரிகள் ஒரு அரசு ஆணையின் மூலமாகப் போடுகிறார்கள் என்றால் அதை நாம் எப்படி ஏற்றுக்கொள்வது? எனவே அதனை நாம் திருத்த வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக மேலும் ஒன்று. உள்ளாட்சிகளுக்கு அதிக அதிகாரம் வழங்கிவிட்டதாக உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அடிக்கடி





சொல்கிறார்கள். (குறுக்கீடு) இருக்கிறதே அவ்வளவுதான். மூன்றும் ஒன்றாக எடுத்திருக்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்):** நான்கு பில்களுமே ஸ்பெசிபிக் பர்பசுக்காகத்தான் வந்திருக்கிறது. அதனால் அதைக் குறிப்பிட்டுப் பேசுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாற்றுத் தலைவர் அவர்களே, உள்ளாட்சிகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. உதாரணமாக என்ன அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது? 26-3-1997-ல் ரூரல் டெவலப்மெண்ட் (சி-3) டிப்பார்ட்மெண்ட் என்று சொல்லி ஒரு ஜி.ஓ. வழங்கியிருக்கிறார்கள். அந்த ஜி.ஓவிலே சொல்லியிருக்கிறார்கள்.

``Maintenance of drinking water facilities including open wells, hand pumps and power pumps ... " அதாவது ஒரு உள்ளாட்சி மன்றத் தலைவர் தன்னுடைய கிராமத்தில் இருக்கிற பொதுக் கிணற்றை பராமரிக்கலாம்; ஆழ்குழாய்க் கிணற்றை அவர் பராமரிக்கலாம்; விசைப் பம்பை அவர் பராமரிக்கலாம். அதற்கான அதிகாரம் அவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்) :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ. சி.மணி :** மாற்றுத் தலைவர் அவர்களே, இது ஒரே ஒரு திருத்தம். அதாவது பஞ்சாயத்துத் தலைவர், துணைத் தலைவர் இருவரும் சேர்ந்து கையொப்பமிட்டு கணக்கில் பணம் எடுக்க வேண்டும். இது திருத்தம். இதையொட்டி பஞ்சாயத்தில் கொடுக்க வேண்டிய அதிகாரங்கள் முழுமையும் இன்றைக்கு விவாதிப்பதென்றால் 6 பில் நிறைவேற்ற வேண்டும். அதைப்பற்றி கொடுத்து இருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். வரும்போது அதற்குரிய பதிலை அளிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் இப்போது இதில் குறிப்பிட்டதை மட்டும் பேசினால் நலம் பயக்கும் என்று கருதுகிறேன். ஒரு பொது விவாதத்திற்குக்கூட நான் தயாராக இருக்கிறேன். கைவிட்டுவிட்டதையோ, அதிகாரத்தைப் பறிகொடுத்ததையோ அல்லது அதிகாரத்தைக் கட்டுப்படுத்தியதையோ எது இருந்தாலும்கூட விவாதிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடு) அப்படியிருந்தால் மந்திரி வேலை எப்படிப் பார்க்க முடியும்? அதனால் நான் என்ன சொல்கிறேன் என்றால் இதற்குரியதை இப்போது

[திரு. கோ. சி. மணி] [1997 அக்டோபர் 16

சொல்லுங்கள். நாளைக்கு என்று கொடுத்திருக்கிறதை நாளைக்குப் பேசுங்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. ச. அழகிரி:** தலைவர் அவர்களே, பொதுவாகவே சட்டமுன்வடிவு என்றாலே பரவலாகப் பேசுவது வழக்கம். பேரவையில் இருக்கிற ஒரே ஒரு உரிமை அதுதான். நான் நாளைக்குப் பேச வேண்டியதை இன்றைக்குப் பேசிவிட்டேன். இன்றைக்குப் பேசுவதை இனிமேல்தான் பேசப் போகிறேன். எனவே மாண்புமிகு தலைவர் அவர்கள் தயவு செய்து அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எவ்வளவு நேரம் பேசப் போகிறீர்கள்? நான் உங்கள் பேச்சைக் கேட்டுவிட்டுத்தான் விவகாரம் பெரிதாகிவிடக்கூடாது என்று வந்தேன். பேசுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Maintenance of drinking water facilities including open wells, hand pumps and power pumps ... என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் கேட்கிறேன். அதிகாரம் வழங்குகிறபோது நிதியையும் வழங்கி அதிகாரத்தை வழங்கினால் அந்த ஊராட்சி மன்றத் தலைவரால் அதனைச் செயல்படுத்த முடியும். நிதி ஆதாரம் இல்லாமல் நான் உங்களுக்கு அதிகாரத்தை வழங்கியிருக்கிறேன் என்று சொன்னால் அது போகாத ஊருக்கு வழி காட்டுவதாக இருக்குமே ஒழிய வேறல்ல. ஒரு கிராமத் தலைவருடைய ஆண்டு வருமானமே எவ்வளவு இருக்கிறது? 4,000 ரூபாய் வருமானம் உள்ள கிராமங்கள் இருக்கின்றன. அதிலே அவர் அந்தப் பஞ்சாயத்தில் இருக்கிற கிளார்க்குக்கு சம்பளம் தரவேண்டும். மக்கள் நலப் பணியாளர்களுக்கு அவர் சம்பளம் தரவேண்டும். இந்த இரண்டு சம்பளத்தையும் அவர் கொடுத்த பிறகுதான் (குறுக்கீடு) சரி, அரசாங்கம் தரவேண்டிய நிலை இருக்கிறது.

முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ரொம்ப விவரமான உறுப்பினர். நீங்கள் ஒரு கண்ணோட்டத்தில் பேசிக் கொண்டே இருக்கிறீர்கள். இப்போது லோக்கல் பாடீஸ்க்கு என்று ஒரு ஸ்பெஷல் பைனான்ஸ் கமிஷன் போட்டு எல்லாப் பஞ்சாயத்துகளுக்கும் அரசாங்கம் பணம் கொடுக்கிறது. அதையெல்லாம் நீங்கள் கணக்கிலே சேர்க்க மாட்டீர்களா?



1997 அக்டோபர் 16]

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதையெல்லாம் கணக்கிலே வைத்திருக்கிறேன், எல்லா விஷயங்களையும் கணக்கிலே கொண்டு வந்திருக்கிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 4 ஆயிரம் ரூபாய் என்று சொல்கிறீர்கள், எப்படி ஒரு பஞ்சாயத்தை வெறும் 4 ஆயிரம் ரூபாயில் நடத்த முடியும்?

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 ஆயிரம் ரூபாய், 6 ஆயிரம் ரூபாய் மட்டும் வருமானம் வருகின்ற ஊராட்சி மன்றங்கள் என்னுடைய தொகுதியில் இருக்கின்றன என்பதைத் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கால் ஆண்டுக்குக் கொடுப்பதை ஒரு ஆண்டுக்கு என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. ஒரு திட்டத்தின்கீழ் கொடுப்பதை பல திட்டங்களில் இணைத்துச் சொல்லக்கூடாது. இதைப்பற்றி எல்லாம் நாளைக்கு நன்றாகப் பேசிக்கொள்ளலாம். எனக்கு அதில் ஒன்றும் ஆட்சேபணை இல்லை. இப்போது இந்தச் சட்டமுன்வடிவுகளை நிறைவேற்றுவதற்கு இந்தச் சட்டமுன்வடிவுகளில் என்ன கொண்டு வரப்பட்டிருக்கிறதோ அதை மட்டும் பேசினால் நன்றாக இருக்கும். அவ்வளவுதான்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே, ஊராட்சி மன்றத் தலைவருக்கு நிதி ஆதாரம் இல்லாமல் நாம் அதிகாரத்தை வழங்குவதன் மூலமாக கிராமங்களில் எந்தப் பணியும் நடைபெறவில்லை என்பதை மட்டும் நான் இப்போது சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

உதாரணமாக முன்பு என்ன செய்வார்கள் என்றால் ஒரு பவர் பம்ப் பெயிலியர் ஆகிவிட்டால் பொது நிதியிலிருந்து அதிகாரிகள் பணத்தை எடுத்து செலவு செய்வார்கள். ஆனால் ஊராட்சி மன்றத் தலைவருக்கு அந்த அதிகாரத்தைப் பகிர்ந்து அளித்த பிறகு பொது நிதியிலிருந்து ஊராட்சி ஒன்றியத் தலைவரோ அல்லது ஊராட்சி ஒன்றிய ஆணையாளரோ நிதி தர மறுக்கிறார். எந்த நிதி ஆதாரமும் உள்ளாட்சி மன்றத் தலைவருக்கு இல்லாத காரணத்தால் பவர் பம்ப் கடைசி வரை செயல்படாமல் இருக்கிறது. அதிகாரம் இருக்கிறது,

ஆனால் நிதி இல்லை. எனவே என்னால் செயல்படுத்த முடியவில்லை என்று அவர் சொல்லுகிறார். எனவே அவைகளை எல்லாம் கணக்கிலே வைத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தத் தலைவர், துணைத் தலைவர் பிரச்சினையைப் பொறுத்தவரையில் தலைவருக்கு மட்டுமே அதிகாரம் வழங்க வேண்டும். நாம் துணைத் தலைவரைச் சேர்ப்பது எதற்கு? தலைவர்மீது நம்பிக்கை இல்லாமல் நாம் சேர்க்கிறோமா; அல்லது தலைவரால் செயல்படுத்த முடியாது என்று நாம் நினைக்கிறோமா? எல்லா அமைப்புகளிலுமே முதன்மையான மனிதர்தான் எல்லா காரியங்களையும் செய்கிறார். உதாரணமாகச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 25 லட்சம் ரூபாய் நாம் கொடுக்கிறோம். 25 லட்ச ரூபாயை அவர்கள் செலவு செய்கிறபோது அந்தக் கணக்கிலே இன்னும் ஒருவர் கையெழுத்துப் போட வேண்டுமென்று விதி இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதில் நீங்கள் செக்கில் கையெழுத்துப் போடுகிறீர்களா?

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் செக்கில் கையெழுத்துப் போடவில்லை. அதேபோல் இதற்கு முன்பு 5 ஆண்டு காலம் நாம் செக் போட்டோம். ஊராட்சி மன்றத் தலைவர் செக் போட்டிருக்கிறார். இதற்கு முன்பு இருந்த அமைப்புகளிலே அவர்கள் செக் போட்டிருக்கிறார்கள். ஆனால் அப்படி அவர்கள் காசோலை எழுதுகிறபோது எந்தப் பிரச்சினையும் வந்து விடுவது கிடையாது. குறைகள் இருக்கலாம். எல்லா அமைப்புகளிலும் குறைகள் இருக்கலாம். 100 சதவீதம் குறைகள் இல்லாத அமைப்புகள் என்பது உலகத்திலே எங்கும் கிடையாது. குறைகள் ஒரு 5 சதவீதம், 10 சதவீதம் இருக்கலாம். இன்றைக்கு மாநில அரசாங்கங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மாநில அரசாங்கத்திலும் ஏராளமான குறைகள் இருக்கின்றன. எனவே, மத்திய அரசு அந்த ஒவ்வொரு கணக்கையும் பார்க்கிறபோது, செக்கைப் போடுகிறபோது அவர்களும் சேர்ந்து ஒரு கையெழுத்துப் போட வேண்டுமென்று ஒரு விதி எங்கும் கிடையாது. அதிகாரத்தை நாம் கீழ் நிலையில் இருக்கிற அமைப்புகளுக்கு எவ்வளவு வழங்குகிறோமோ அப்படி வழங்குகிறபோது சில சோதனைகளை வைக்கலாம். ஆடிட் இருக்கிறது. ஆடிட் மூலமாகத்தான் அவர்களுடைய தவறுகளை நாம் கண்டுபிடிக்க வேண்டுமே தவிர ...





**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆடிட் என்றால் அதிகாரிகள் வசம் போகிறது. அப்படிக் கொடுத்தால் எப்படி? இப்போதும் ஆடிட் இருக்கிறது. இதற்கு என்று ஒரு ஆடிட் தினசரி கையெழுத்துப் போடுவதற்கு என்று வைக்க முடியுமா? செக் தேவைக்கு என்று தினசரி ஒரு ஆடிட் வைத்துக்கொண்டு செய்து கொண்டு இருக்க முடியுமா? அது நல்ல மரபா? எப்படிச் செய்ய முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுவாக நான் ஒரு வழக்கறிஞர் என்ற முறையிலே பேசுகிறேன். ஒருவர் என்பதற்குப் பதிலாக இரண்டு பேர் கையெழுத்துப் போடுவது இரண்டு பேருக்கும் பாதுகாப்புதான். இது சாதாரண விதி. ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திலும் தலைவரும், பொருளாளரும் கையெழுத்துப் போட வேண்டுமென்று நாம் விதியை வைக்கிறோம். திரு. அழகிரி நீங்கள் பேசுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு வேறுபட்ட இயக்கங்களைச் சேர்ந்தவர்கள், இரண்டு வேறுபட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்கள், ஒரு கிராமத்திலே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அப்படித் தேர்ந்தெடுக்கப்படுகிறபோது தலைவர் செய்கின்ற பணிகளை எல்லாம் எதிர்க்க வேண்டுமென்பதற்காகவே துணைத் தலைவர் இருக்கிறார். இது நம்முடைய ஜனநாயகத்திலே இருக்கிற சிஸ்டம்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பிரச்சினைகள் வருகிறபோது, ஒரு ஊராட்சியினுடைய உறுப்பினர்கள் அடங்கியதுதான் ஒரு ஊராட்சி மன்றம், அந்த ஊராட்சி மன்றத்தை நடத்திச் செல்வது தலைவர். அந்த ஊராட்சி மன்றத்தின் தீர்மானங்களைச் செயல்படுத்தும் அதிகாரம்தான் அவருக்கு இருக்கிறதே தவிர தனிப்பட்ட முறையிலே எந்த அதிகாரமும் இல்லை. அதிலே இருக்கிற துணைத் தலைவர் தான் இணைந்து கையெழுத்துப் போட வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறோம். இப்படி சிக்கல்கள் வந்தால் அந்த ஊராட்சி மன்றம் கூடி இன்னும் ஒரு உறுப்பினரைத் தேர்வு செய்து அவரையும் கையொப்பம் இடச் செய்யலாம் என்பது இந்தச் சட்டத்தின் நோக்கம்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும் இவைகளை எல்லாம் கேட்பதற்கு அழகாக இருக்கிறது. ஆனால் நடைமுறையில் அதில் எவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன ; உள்ளாட்சி அமைப்புகளில் எவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். துணைத் தலைவரிடம் போய் அவர் கையெழுத்துப் போடாமல் போன பிறகு அதன் பிறகு நாம் திரும்பவும் கூட்டத்தைக் கூட்டி மூன்றாவதாக அந்த உறுப்பினர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து . . .

*முற்பகல் 11-50*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** தலைவரவர்களே, அதாவது இது நீண்ட காலத்திற்கு உரியதுதான். அதாவது அவ்வப்போது செக்குக்குப் போய் ஆள் தேடுவது இல்லை. முதலிலேயே முடிவெடுத்து விடுகிறோம். துணைத் தலைவர் கையொப்பம் இடுவதா அல்லது துணைத் தலைவரால் முடியவில்லை என்றால் ஒரு உறுப்பினர் கையெழுத்து இடுவதா என்று முடிவெடுத்துத் தீர்மானம் வைத்து, இன்னின்னார் கையெழுத்திடுவது என்று இரண்டு பேரைச் சேர்த்து விட்டால் இறுதிவரையில் அவர்களே கையெழுத்துப் போட்டுக் காசோலையை அனுப்பலாம். இதுதான் முறை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அழகிரி அவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்று நீங்கள் சொல்லித் தருகிறீர்களா?

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதிலே என்ன பிரச்சினை இருக்கிறது என்றால், இன்னொருவர் கையெழுத்து இடுவதனால் மட்டும் அந்தப் பணி திறமையாக நடந்து விடுகிறது என்று ஒப்புதல் கிடைக்கிறதா அல்லது அவர் தவறுகளைச் சரி பார்த்து கையெழுத்திடுகிறாரா அல்லது ஊராட்சி மன்றத் தலைவர் இந்தந்தத் தவறைச் செய்துவிட்டால், அந்த பில்லைப் போடுகிறபொழுது இந்தந்தத் தவறு நடந்திருக்கிறது அல்லது அதிகமாகப் போட்டிருக்கிறார்; அல்லது குறைவாகப் போட்டிருக்கிறார்; வேலை செய்யாமலேயே பில்லைப் போட்டு விட்டார் என்று அந்தத் துணைத் தலைவர் அந்தக் காசோலையைச் செல்லாமல் ஆக்கி விடுகிறாரா? அது அல்ல.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** தலைவரவர்களே, ஒருவரைக் குற்றவாளியாக்குவது என்பது வேறு; குற்றம் நடக்காமல் தடுப்பது



என்பது வேறு. அதாவது ஒரு செக். அவரே சொன்னார், முதலிலே ஒரு ஆடிட்கூட வைக்கலாம் என்றார். அதுகூடக் கிடையாது. அந்த மன்றத்திற்குள்ளேயே ஒருவருக்கு இருவர் அறிந்து செய்யட்டுமே என்ற ஒரு பிரச்சினை எப்படி அதிகாரக் குறைவு ஆகும்? அந்த மன்றத்திற்கு வெளியே இருக்கிறவரை அழைக்க, மன்றத்தில் உள்ளவர்களுக்கு அதிகாரம் இல்லை, அவர்தான் போட வேண்டும் என்றால்.... (குறுக்கீடு) இங்கேகூடப் பலபேர் சொன்னார்கள், ஊராட்சி மன்றத் தலைவர்களே எனக்கு எழுதிக் கொடுத்திருக்கிறார்கள், அதிகாரிகள்கூடப் போடலாம், துணைத் தலைவரெல்லாம் போடவேண்டுமென்று வைப்பது சங்கடமாக இருக்கிறது என்று சொன்னார்கள்; அதற்காகத்தான் பிறகு இந்த முறையைக் கையாண்டு, சங்கடம் இருந்தால் வேறு ஒரு உறுப்பினரைத் தேர்வு செய்து செய்யலாம் என்று உத்தரவிட்டிருக்கிறோம். எப்படி அதிகாரப் பறிப்பாக இருக்கும் இது? அவர்கள் அதிகாரத்தில் போடக் கூடாது, வெளியிலே இருக்கிற ஒருவரைக் கொண்டுவந்து கையெழுத்துப் போடு என்றால்தானே! பேசும்போது, "மன்றத்திற்கு" என்று பேசுங்கள். உறுப்பினருக்கோ, தலைவருக்கோ என்று தயவு செய்து பேச வேண்டாம். பஞ்சாயத்துக்கு அதிகாரம் உண்டா, இல்லையா? அதுதான் முக்கியம். இதைப் பொறுத்தவரையில் பஞ்சாயத்திற்கு அதிகாரம் உண்டு.(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாயின்ட் ஆப் ஆர்டரா?

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** ஆமாம். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பழைய முறைகளின்படி ஒரு ஊராட்சித் தலைவர் காசோலை எழுதுகிறபோது அதை ஒன்றியத்திலே இருக்கிற அதிகாரிகள் ஒருவருக்கு மூன்று பேர் பரிசோதித்து, ஒன்றியக் கருவூலத்தின் மூலமாகப் பணம் பெற்றுக் கொண்டிருந்தார்கள். ஆனால், இப்பொழுது தந்திருக்கிற அதிகாரத்தின்படி, நேரடியாக அவர் வங்கிக்குச் செல்கிற காரணத்தால் இன்னொருவர் கையெழுத்து இருப்பதுதான் சரியாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அழகிரி, பேசுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு பணி முடிவதற்கு முன்பு அதனைச் சரி செய்து செய்ய வேண்டுமென்பது வேறு. ஆனால் அவருடைய அதிகாரத்தைப் பறிப்பது என்பது வேறு.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி :** தலைவரவர்களே, பஞ்சாயத்துத் தலைவர்களே பணம் எடுக்கக் கூடாது என்ற அதிகாரத்தை நாங்கள் எடுக்கவில்லையே. இன்னொன்று, இதற்கு முன்னாலேயே, குடியரசுத் தலைவருக்கே இல்லாத அதிகாரமும் ஊராட்சி மன்றத் தலைவருக்குக் கொடுத்திருக்கிறோமே? குடியரசுத் தலைவருக்கு ஏதாவது செக்கிலே கையெழுத்துப் போடுகின்ற அதிகாரம் உண்டா? இல்லையே. ஊராட்சி மன்றத் தலைவருக்கு இருக்கிறதே, வரம்பு இல்லாமல் எதையும் செய்யக்கூடாதே, ஒரு வரம்பு இருக்கக்கூடாதா? நீங்கள்கூட முதலிலே ஒரு ஆடிட்கூட வைக்கலாம் என்று சொன்னீர்கள். இதை ஒரு ஆடிட் மாதிரி கருதக் கூடாதா? அந்த அமைப்பிலே இருக்கிற ஒருவர், அவருக்குக் கீழே இருக்கிறவரும், அவரோடு பணியாற்றுகிறவரும் சேர்ந்து கையெழுத்து இடுவதிலே என்ன குறை வந்து விடப் போகிறது? அதிலே என்ன தவறு வரப் போகிறது? அதையாவது சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது தனி விவாதமாக மாறிக் கொண்டே அல்லவா இருக்கிறது?

**திரு. சோ. பாலகிருஷ்ணன் :** தலைவரவர்களே, ஒரேயொரு விளக்கம். இதிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்களும், நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்களும் இங்கே விரிவாக இந்தப் பிரச்சினை பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இதிலே என்னவென்றால், இந்தப் பஞ்சாயத்து போர்டு பிரசிடென்ட் எல்லாம் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்; வைஸ்-பிரசிடென்ட் என்று சொல்லக்கூடிய அந்தத் துணைத் தலைவர் மெம்பர்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள். இவருக்கும் அவருக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது. இந்த இரண்டு பேரையும் சேர்த்து வைப்பதினாலே பல பஞ்சாயத்துக்கள் இன்று செயல்படாமல் இருக்கின்றன என்பதை மட்டும் அமைச்சரவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** மாண்புமிகு தலைவரவர்களே, அந்தப் பஞ்சாயத்து என்பது இவர்களை உள்ளடக்கியதே தவிர, இதில் பிரிவினை கிடையாது. ஒரு பஞ்சாயத்துத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்றால் எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து, ஒரு உறுப்பினராவது அதிகம் இருந்தால்தான் தீர்மானம் நிறைவேறும். இதுவே முடியாதபோது பஞ்சாயத்தை எப்படி நடத்த முடியும் ?





***திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் சொல்வது முற்றிலும் நியாயமானதே. ஒரேயொரு விஷயத்திலே நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், ஒரு ஊராட்சி மன்றத்தில் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தலைவருக்கு எதிரானவர்களாகவே ஜெயித்து வந்துவிட முடியும். ஆனால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற அந்த ஊராட்சித் தலைவர் செயல்பட முடியாத சிக்கல் தனக்கு எதிராக வந்திருக்கிற துணைத் தலைவரால் ஏற்பட்டு விடக்கூடும் என்கிற முறையிலேயும், பஞ்சாயத்தினுடைய நடவடிக்கைகள் தடையில்லாமல் நடைபெறுவதற்கு, சுளுவாக்குவதற்காக, எளிதாக்குவதற்காக அவருக்கு மட்டுமே கையெழுத்திடுகிற அதிகாரம் வேண்டும் என்று கேட்பதில் நியாயம் இருப்பதாகத்தான் பஞ்சாயத்துத் தலைவர்கள் எல்லோரும் பிரதிபலிக்கிறார்கள்.

*முற்பகல் 11-55*

எனவே, இன்னொரு விஷயத்தை நான் சொல்லி விடுகிறேன் இந்த இடத்தில். வெறுமனே கையெழுத்து இடுகின்ற உரிமையை வழங்குவதன் மூலம் மட்டும் எல்லாம் நடந்துவிடாது. கீழேயிருந்து அந்தப் பஞ்சாயத்தினுடைய தேவை என்ன என்பதை மதிப்பீடு செய்து அந்தத் தேவைகளுக்கொத்த நிதியைத் திரட்டுகிற அதிகாரத்தையும் அவர்களுக்கு வழங்கி, அதற்குப் பின்னர் அவற்றை நிறைவேற்றிக்கொள்கிற அதிகாரத்தையும் வழங்குகிறபோதுதான் சிறப்படைய முடியும் என்று மத்திய திட்டக் குழுத் துணைத் தலைவர் திரு. மதுதண்டவதே அவர்களே வெளியிட்டிருக்கிறார்கள் என்பதை நான் மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் வேறு ஏதோ திசைக்குப் போய் கொண்டிருக்கிறீர்கள். அவர் சொல்வது வேறு, நீங்கள் சொல்வது வேறு. பேங்கில் பணம் இல்லாமல் பஞ்சாயத்துத் தலைவர் கையெழுத்து போட முடியாது. அது அவர் மட்டும்தான் போட வேண்டுமா அல்லது பஞ்சாயத்தில் இருக்கிற இன்னொருவர் சேர்ந்து போடவேண்டுமா என்பதுதான் பிரச்சினை. அதுதான் அவர் பேசுகிறார். அழகிரி, உங்கள் பேச்சை சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ச. அழகிரி:** நல்ல விவாதத்திற்கெல்லாம் மாண்புமிகு பேரவைத் தலைவர் நேரம் பார்க்காமல் அனுமதிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நானும்தான் உங்கள் விவாதத்தில் கலந்துகொண்டிருக்கிறேன். நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியரசுத் தலைவருக்கே இல்லாத அதிகாரம் உள்ளாட்சி மன்றத் தலைவருக்கு இப்போதல்ல, அது ஆரம்ப காலத்திலிருந்தே வழங்கப்பட்டிருக்கிறது. அப்படி வழங்கப்பட்ட அதிகாரத்தை நீங்கள் கொஞ்சம் பிடுங்குகிறீர்கள். ஒரு துணைத் தலைவரை அனுப்பி இன்னொரு கையெழுத்தையும் போட்டு, இவ்வளவு காலம் அவர்களுக்கு வழங்கப்பட்டு அனுபவித்து வந்த அந்த அதிகாரத்தை . . .

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் மறுபடியும் சொல்கிறேன், அந்தப் பஞ்சாயத்தில் இருக்கிறவர்கள்தான் கையெழுத்துப் போட வேண்டுமே தவிர வேறொருவர் அல்ல. ஒரு தனி மனிதருக்கு அதிகாரம் அளவுக்கு மீறி வேண்டும் என்று விரும்புவது நல்லதல்ல.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் என்பவர் தனி, அந்தப் பஞ்சாயத்திலே இருக்கக்கூடிய துணைத் தலைவர் மற்ற உறுப்பினர்கள் தனி. நீங்கள் வேண்டுமானால் எல்லோரும் சமமானவர்கள் என்றுகூடச் சொல்லலாம். ஆனால் சமமானவர்களிலே தலைவர் என்பவர் முதன்மையானவர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக அமைச்சரவை இருக்கிறதென்றால், அதற்கு கூட்டுப்பொறுப்பு இருக்கிறது. முதலமைச்சரும் மற்ற அமைச்சர்களும் சமமானவர்களாக இருக்கலாம்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** தலைவர் அவர்களே, ஒரு யோசனை சொல்கிறேன். இப்போது அதிகாரங்கள் எது எது வழங்கியிருக்கிறார்கள், எது எது வழங்கப்போகிறோம் என்பதற்குத் தேவையானவற்றைப் பேசி முடிவெடுப்பதற்கு குழு போட்டிருக்கிறோம். அதிலே இந்தச் சட்டமன்ற உறுப்பினரே இருக்கிறார். அங்கே விவாதித்துப் பேசி ஒரு முடிவு எடுக்கலாம், அதில் ஒன்றும் தப்பில்லை. நான் சொல்வது பேசித் தீர்த்துக் கொள்ளலாம். அதில் தப்பு ஒன்றுமில்லை. ஆனால், ஒரு பிரச்சினைக்கு, ஆறு சட்டத்திருத்தங்கள் வருகின்றபோது, ஒன்றிலேயே





அனைத்தையும் பேசி எல்லாவற்றையும் முடித்துவிடுவது என்பது சாலச்சிறந்ததல்ல. அவ்வப்போது அவைகளைப்பற்றிப் பேசுவது நலம்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நான் இந்தக் கருத்தை மட்டும் சொல்கிறேன். பஞ்சாயத்துத் தலைவரும், பஞ்சாயத்து உறுப்பினர்களும் சமமானவர்களாக இருந்தாலும்கூட, சமமானவர்களில் முதன்மையானவர் பஞ்சாயத்துத் தலைவர்தான்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. அழகிரி அவர்கள் அறிவார்கள். துணைத் தலைவரும், தலைவரும் நீங்கள் சொல்கிற பதவி, பொறுப்புகளில் வேறுபட்டிருக்கலாம். இது ஒரு செக் அண்டு பேலன்ஸ். ஆகையினால், அதை வேறுபடுத்திப் பார்க்க வேண்டிய அவசியமில்லை.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. வைதியலிங்கம் சொன்னதை யோசித்துப் பார்க்க வேண்டும். ஏற்கெனவே இருந்த அதிகாரம், தலைவர் ஒரு செக்கை கொண்டுபோய் பஞ்சாயத்து யூனியனில் கொடுப்பார். அங்கே செக் பண்ணுவார்கள். சரியில்லையென்றால் திருப்பிக் கொடுப்பார். அந்த செக் போட்டதனாலேயே அது செல்லுபடியாகுமென்று சொல்வதில்லை. அந்த முறை இப்போது கிடையாது. இப்போது அவர் தனியாக ஒரு அக்கவுண்ட் வைத்திருக்கிறார். அவர் என்றைக்கு வேண்டுமானாலும் எடுக்கலாம், எவ்வளவு வேண்டுமானாலும் எடுக்கலாம். அப்படி என்கிற நிலைமை கொடுத்தால், அதற்கு ஒரு செக்கப்பே இல்லாமல் போகிறது. சிலபேர் விவரம் தெரியாமல் அந்த விதிமுறைகள் தெரியாமல் ஊராட்சி மன்றத் தலைவர் சிலர் தவறு செய்துவிடக்கூடும். ஆகவே, ஒருவருக்கு இருவராக இருந்தால் தவறு அதிகமாக இல்லாமல் குறைக்கலாம். அதற்காகத்தான் இது, வேறு ஒன்றுமில்லை.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் அதைத்தான் சொல்கிறேன். ஒருவருக்கு அதிகமான அதிகாரம் தேவையில்லை. ஆனால், தேவையான அதிகாரத்தை வழங்கலாம். ஏற்கெனவே இருந்தது, உள்ளாட்சி மன்றத் தலைவர் காசோலை எழுதுவார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது முடிவே அடையாத விவாதம். நீங்கள் அடுத்த பாயிண்டுக்கு வாருங்கள். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ச. அழகிரி:** இதற்கு முன்பு இருந்தது, தலைவர் காசோலை எழுதுவார், அது ஊராட்சி ஒன்றியத்திற்குப் போகும். எதற்காக அந்தக் காசோலை எழுதியிருக்கிறாரோ அதற்கான எஸ்டிமேட் அதில் இருக்கும். அந்த எஸ்டிமேட்டும் இதுவும் சரியாக இருக்குமானால் பணத்தை வழங்குவார்கள். ஆனால், இப்போது நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் என்றால், தலைவரும் துணைத் தலைவரும் கையெழுத்துப் போட்டுவிட்டால் எஸ்டிமேட் இல்லாமல் எவ்வளவு பணத்தை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியல்ல. ஏற்கெனவே பணம் இருந்த இடம் வேறு, இப்போது இருக்கின்ற இடம் வேறு. ஏற்கெனவே இருந்தது ஊராட்சி ஒன்றியத்திலே. அங்கே சில செக்கப் உண்டு. ஆனால், இப்போது இவர் பெயரில், இவர் ஊரில், இவர் சொசைட்டியில் பணம் இருக்கிறது. ஆகையினால்தான் அதை ஒருவருக்கு இருவராகத் தெரிந்து செய்யலாம். அதில் ஒன்றும் தப்பில்லை.

*நண்பகல் 12-00*

**திரு. ச. அழகிரி:** எனவே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நாங்கள் சொல்கிறோம். என்ன சொல்கிறோம் என்றால், எவ்வளவு பணத்தை வேண்டுமானாலும் ஒரு உள்ளாட்சி மன்றத் தலைவர் எடுத்துவிடலாம் என்கின்ற ஒரு உரிமையை நீங்கள் எடுத்துவிட வேண்டும் என்று நாங்கள் கூறுகிறோம். இரண்டும் இருக்க வேண்டும். அவர்களுக்குத் தேவையான அதிகாரங்கள் இருக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 300 ரூபாய் எடுத்துக்கொள்ளலாம் என்று இருந்தது. அது வரையறுக்கப்பட்டு 500 ரூபாய் என்று ஆக்கியிருக்கிறோம். ஆனால் ஒரு செக் போடும்போது, 500 ரூபாய்க்குப் போடலாம். அவரே இன்னொரு செக்கைப் போடும்போது இன்னொரு 500 ரூபாய்க்குப் போடலாம். வேறு என்ன செய்ய முடியும்?

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், ஒரு ஊராட்சித் தலைவர் பணத்தை எடுக்கிறார் என்றால், அவர் எந்தச் செலவிற்காக எடுக்கிறாரோ, அந்தச் செலவைச் செய்துவிட்டு, எந்தக் காரணத்திற்காக



எடுக்கிறாரோ அதற்கான எஸ்டிமேட்டை வைத்து, அவர் அந்தப் பணத்தை எடுக்கலாம். அதற்கு முன்பு அப்படித்தான் இருந்தது. ஆனால் இப்போது எப்படியிருக்கிறது என்றால், அவர் எந்த எஸ்டிமேட்டையும் வைக்க வேண்டாம். அவரும் இன்னொரு துணைத் தலைவரும் கையெழுத்து போட்டால், அவர்களுடைய கணக்கிலே உள்ள பணத்தை அவர் போய் எடுத்துக்கொண்டு வந்து விடலாம், தன் சொந்தப் பணத்தை எடுத்துக்கொண்டு வருவதைப் போல.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர் ஒரு அச்சம் ஊட்டுகிறார். என்ன அச்சம் என்றால், இ.எ.எஸ். பணத்தை வேறு எதற்கும் கொடுத்து, பார்லிமெண்டிலே இது ஒரு பிரச்சினையாக எழும்பி, அப்படிப்பட்ட நிலை தவறு என்று கருதி, அந்தத் திட்டத்தையே நிறுத்திவிட்டால் என்ன செய்வீர்கள் என்று ஒன்றைச் சொன்னார். நான் இப்போது ஒன்று சொல்கிறேன். மத்திய அரசு திட்டங்கள் அத்தனையும், நிதி பெறுகிறபோது, ஒருவராகக் கையொப்பம் இட்டு செய்ய முடியாது. இன்னொருவரும் கையெழுத்துப் போட வேண்டும். அந்தத் திட்டங்களின் பெயரால் எடுக்கப் போகிற பணங்களுக்கு மத்திய அரசினுடைய வழிகாட்டி நெறி முறை அப்படியிருக்கும்போது, இந்த மாநில சர்க்காருடைய வழிகாட்டி நெறிமுறை மட்டும் தவறு என்று சொல்வதற்கு என்ன காரணம்? அதைச் சொல்லுங்கள்? அதற்கு என்ன காரணம்? மத்திய ஆட்சியிலேயிருந்து வருகிற அவர்களுடைய திட்டம், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம், ஆகிய இவைகள் என்று தனித் தனியாக வருகிறபோது, ஒருவராகக் கையொப்பமிட்டு எடுக்க முடியாது. இருவர் சேர்ந்துதான் எடுக்க வேண்டும். அது, மத்திய ஆட்சியிலே அப்படி இருக்கும்போது, மாநில ஆட்சியிலே இருப்பதில் என்ன தவறு?

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன். நான் என்ன சொன்னேன் என்றால், மத்தியில் இருக்கிற திட்டத்திலே சில குறைபாடுகள் இருக்கிறது என்று மாண்புமிகு முதலமைச்சரும் சொல்லியிருக்கிறார், நீங்களும் சொல்லியிருக்கிறீர்கள். அந்த மாதிரி ஒரு குறைபாடுடைய அம்சம்தான் அந்த அம்சம். எனவே, அந்தக் குறைபாட்டை ...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொன்னது என்னவென்றால், இப்படி ஒரு நிலை வந்து, பாராளுமன்றத்திலே பிரச்சினை வந்தால், ஒரு கால்

இது தவறு என்று சொல்லி, திட்டத்தையே நிறுத்திவிடுவார்கள் என்று சொன்னேன். அவர்களே வழிமுறையை இப்படி வைத்திருக்கிறபோது, மாநில அரசாங்கம் அதனைப் பின்பற்றுவதிலே என்ன தப்பு?

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய திட்டத்திலே பல குறைபாடுகள் இருக்கின்றன. அதை மாநில அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார். சம்பந்தப்பட்ட அமைச்சரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார். ஆகவே அப்படிப்பட்ட அந்த மத்திய திட்டத்திலே இருக்கிற ஒரு குறைபாட்டை எடுத்து தன்னுடைய விவாதத்திற்காக மாண்புமிகு அமைச்சர் வைக்கிறார். நாங்களும் அதைத் தவறு என்று . . . .

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காக நான் சொல்லவில்லை. ஏற்கெனவே இருந்ததை உதாரணம் காட்டுகிறேன். மத்திய ஆட்சியில் இருக்கிற நெறிமுறைகளும், வழிமுறைகளும் இதில் இருக்கின்றன. ஆகையினாலேதான் இதுவும் தப்பில்லை. வேறு ஒரு சந்தேகத்தையும் சொல்லி, அதாவது மத்திய அரசே ஒருக்கால் நிறுத்தி விடுவார்கள் என்ற ஒரு அச்சத்தை ஊட்டியிருக்கிறார். அதை நீங்கள் கேட்கும்போது இதை நான் சொல்வது எப்படித் தவறாக இருக்க முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவாதம், பிரச்சினைக்குத் தெளிவு தரவேண்டும், முடிவு தரவேண்டும். விவாதம் முடிவற்ற தொடராகத் தொடர்ந்து நீடிப்பது அவ்வளவு நல்லதல்ல. ஆகவே, பிரச்சினையை ஏதாவது ஒரு கட்டத்தில் முடிவிற்குக் கொண்டு வருகிற முறையில் இந்தப் பிரச்சினைக்குத் தாங்கள் தீர்வு காண வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் எல்லோரையும் உட்காருங்கள் என்றால் நீங்கள் கேட்கமாட்டேன் என்கிறீர்கள். அந்த ஒரேயொரு முடிவைத்தான் என்னால் எடுக்க முடியும்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இந்தப் பஞ்சாயத்துக்களுக்கு என்னென்ன அதிகாரங்கள் வழங்க வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு கட்சியின் சார்பாக அங்கத்தினர்களை கேட்டிருக்கிறார்கள். எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரையில்



திரு. அழகிரி, திரு. அழகராஜா ஆகியோரை நியமித்திருக்கிறோம். அவ்வாறு நியமித்து, நம்முடைய அமைச்சர் அவர்களுக்கும் எழுதியிருக்கிறோம். அதேபோல் எல்லா கட்சிகளும் கொடுத்திருக்கும். அதில் வைத்து இதை விரிவாகப் பேசலாம். இத்தோடு இந்தப் பிரச்சினையை முடித்தால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினையை முடியுங்கள் என்று சொன்னால் இவ்வளவு நேரம் ஆகிவிட்டது. இது தேர்தல் நடப்பதற்கு முன்பே போட்ட சட்டம். தேர்தல் காலத்திலே ஒரு குறிப்பிட்ட கட்சியை ஆதரிப்பதற்காக, ஒரு குறிப்பிட்ட கட்சி வருவதற்காகப் போடப்பட்ட சட்டம் அல்ல. நடைமுறையிலே இருக்கிற பிரச்சினையைச் சொல்கிறீர்கள். நான் பொதுவாக, வழக்கறிஞர் என்ற முறையிலே ஒரேயொரு கருத்தைச் சொன்னேன். இந்த செக் போடுகிற அதிகாரத்தை நான்-அபீசியல், பதவியில் இல்லாதவர்களுக்குக் கொடுக்கிறபோது, அவர்களுக்குப் பாதுகாப்பாக இன்னொருவர் கையெழுத்து போடுவது அவர்களுக்கே நல்லது. அந்த ஒரு கருத்தைச் சொன்னேன். திரு. அழகிரி, நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பிட்ட சட்டமுன்வடிவைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே உள்ளாட்சித் தலைவர்களுக்கு இருந்த அதிகாரத்தைக் குறைப்பதற்கான ஒரு முயற்சியாக, உதவித் தலைவரும் கையொப்பம் இடவேண்டும் என்கின்ற இந்தச் சட்டமுன்வடிவு எங்களுக்கு ஏற்புடையது அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-05*

உதாரணமாக திராவிட முன்னேற்றக் கழகமும் சரி, தமிழக அரசும் சரி, மாநில சுயாட்சிக்காகவும், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்பதற்காகவும் பெரிய போராட்டங்களை நடத்தி வரலாற்றுச் சிறப்புமிக்க, வரலாற்று ரீதியான பல காரியங்களைச் செய்து இருக்கின்ற ஒரு அரசியல் இயக்கம். உங்களுக்கு அந்த சித்தாந்தம் இருக்கிறது. எப்படி ஒரு ஆத்திகர் என்று சொல்லிக்கொள்பவர் பிள்ளையார் சிலையை உடைப்பது என்பது ஏற்புடையது அல்லவோ:, அதேபோல, நாத்திகர் என்று சொல்லிக்கொள்பவர், முருகனுக்குக் காவடி எடுப்பது என்பது ஏற்புடையது அல்லவோ, அதுபோல, கம்யூனிஸ்ட் என்று சொல்லிக் கொள்பவர், ரோல்ஸ்ராய் காரில் செல்வது ஏற்புடையது அல்லவோ,

அதேபோல காந்தியவாதி என்று சொல்லிக்கொள்பவர், இரவில் மது அருந்தாமல் நான் உறங்கமாட்டேன் என்று சொல்வது ஏற்புடையது அல்லவோ, அதுபோலத்தான் மாநில சுயாட்சி, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் என்று கேட்ட ஓர் அரசியல் இயக்கம், உள்ளாட்சி மன்றங்களுக்கு இருந்த அதிகாரங்களை எடுத்துக் கொள்வது என்பது ஏற்புடையது அல்ல. எனவே, இந்தச் சட்டமுன்வடிவை நாங்கள் எதிர்க்கிறோம் என்று சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் மொத்தமாகப் பதில் சொன்னால் போதும், இன்னும் இரண்டு, மூன்று பேர் பேச இருக்கிறார்கள் (குறுக்கீடு) திரு. ச. அழகிரி, நான் உங்களைக் கூப்பிடவில்லை. நீங்கள் ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி இவ்வளவுதான் இருக்க வேண்டும், இதற்கு மேல் பணம் எடுக்கக் கூடாது என்று கட்டுப்பாடு போட வேண்டுமென்று அவர் சொல்கிறார். அவர் சொல்வது இவ்வளவு ரூபாய்க்கு மேல் எடுக்கக் கூடாது, கண்டபடி தொகை அவர்கள் எடுக்கக் கூடாது, உச்சவரம்பு வையுங்கள் என்று சொல்கிறார். அப்படியென்றால் சந்தேகத்தோடு சொல்கிறாரா? அந்தத் தலைவர் மீது அவர்களுக்கே சந்தேகம் இருக்கிறதா? ஏன் இதிலே மட்டும் சந்தேகம் இருக்கிறதாக அவர் எங்களைக் கருத வேண்டும். அவர் சொல்வதிலே சந்தேகம் இருக்கிறதாக நாங்கள் ஏன் சொல்லக் கூடாது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பெயரைப் பார்த்தாலே அவர் எந்த இயக்கத்தின் பின்னணி என்று உங்களுக்குத் தெரியும் இல்லையா? மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், உட்காருங்கள், திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஊராட்சிகளில் மூன்று அடுக்கு முறை ஏற்பாடு செய்யப்பட்ட பின்னால் புதியக் கணக்குகளை நிர்வகிக்கின்ற நடைமுறைகளைப் பற்றிய சட்டமுன்வடிவு இங்கே அறிமுகம் செய்யப்பட்டு விவாதம் நடைபெறுகிறது. இந்த விவாதம் ஆரோக்கியமானது என்று நான் கருதுகிறேன். குறிப்பாக, 1994 தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 188-வது பிரிவின்படி அந்த நடைமுறை தக்கவாறு இப்போது திருத்தி அமைக்கப்பட்டு இருப்பதாகக் குறிப்பிட்டுச்



சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே இப்பொழுது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, தலைவர், துணைத் தலைவர் இருவரின் பெயரிலே கணக்கு வைத்துக் கொள்வது என்பதிலே பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ச. அழகிரி அவர்களும், திரு. கே. சுப்பராயன் அவர்களும் குறிப்பிட்டுச் சொன்னதை நானும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, தேர்தல் நடைபெற்று முடிந்ததற்குப் பின்னால், அனுபவ ரீதியாகப் பார்த்தால், பல்வேறு கிராமப் பஞ்சாயத்துக்களிலே இந்த நடைமுறையைப் பின்பற்றுவதிலே பல்வேறு சிக்கல்கள், பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. பல்வேறு ஊராட்சிகளில் பல்வேறு நிர்வாகங்களை செயல்படுத்த முடியாமல் சங்கடத்திற்குள்ளாகிற ஊராட்சித் தலைவர்கள் ஏராளமானவர்கள் இருக்கின்றார்கள். ஆகவே, இதை பழைய நிலையிலேயே பரிசீலித்து, ஊராட்சித் தலைவருக்கு மட்டுமே இந்த அதிகாரங்களை வழங்குவதில் எவ்விதமான பிரச்சினையும் இருக்காது என்பதை அழுத்தமாக சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக இப்போது சொல்லப்படுகின்ற இந்தக் காரணங்களால் ஊராட்சித் தலைவர், துணைத் தலைவர் இருவரும் அந்தக் கணக்கை வைத்துக் கொள்வது பாதுகாப்பு என்று சொல்வதிலே மாற்றுக் கருத்து இல்லை என்று சொன்னாலும், அவர்கள் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் செயல்பட்டால் அவர்கள்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் ஏராளமாக இருக்கின்றன. இப்பொழுது இடைப்பட்ட காலத்திலே ஊராட்சித் தலைவர்கள் தவறாகச் செயல்பட்டார்கள் என்ற காரணத்தினாலேயே தஞ்சை மாவட்டத்திலே சில ஊராட்சித் தலைவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. அப்படி ஊராட்சித் தலைவரின் தவறான செய்கையின் காரணமாக அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தால், அந்தக் கணக்குகளை வைத்துக் கொள்வதில் நடைமுறையில் பல்வேறு சிக்கல்கள் இருப்பதை உணர்ந்து, ஊராட்சித் தலைவர்கள் மட்டுமே அந்தக் கணக்குகளை வைத்துக் கொள்வதற்கான வாய்ப்பு ஏற்பட வேண்டும். துணைத் தலைவர் என்பவருக்கு பொறுப்பு கொடுக்கப்பட்டால் அவருக்குள்ள அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக பல்வேறு இடங்களில் பல்வேறு பிரச்சினைகள் எழக்கூடும். பல இடங்களில் நிர்வாகம் செய்ய முடியாத சூழ்நிலை, அவர்கள் தேர்வு செய்வதற்கான வாய்ப்பு இல்லாத சூழ்நிலை ஏற்படும். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, துணைத் தலைவர் ஒருசில இடங்களில் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்பு இருக்கலாம்.

பெரும்பாலான இடங்களில் ஊராட்சிகளில் இந்த வாய்ப்பு மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தால் அதை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

*பிற்பகல் 12-10*

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரிவான விவாதங்கள் நடைபெற்றிருக்கின்றன. பஞ்சாயத்துத் தலைவர் காசோலையிலே கையெழுத்திடுவதா அல்லது அவரோடு இணைந்து துணைத் தலைவர், அவர் இல்லாவிட்டால் அங்கிகாரம் பெற்ற இன்னொருவர் கூட்டாகக் கையெழுத்திட்டு, வங்கிக் கணக்குகளை நடத்துவதா என்பதற்காக இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஒன்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும். பஞ்சாயத்துத் தலைவர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இதில் சந்தேகமில்லை. முன்னர் இருந்தது, நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துத் தலைவருக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தது. ஜனநாயக அடிப்படையிலே அவர்களுக்கு இருக்கின்ற அதிகாரம் மதிக்கப்பட வேண்டும். காக்கப்பட வேண்டும். அதிலே எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஆனால் அதே நேரத்தில், ஊராட்சி மன்றம் பெரியதா? ஊராட்சித் தலைவர் பெரியவரா என்ற கேள்வி எழும்போது ஊராட்சி மன்றம்தான் பெரியது. That is the paramount body. ஆகவே பஞ்சாயத்துத் தலைவருக்கு எவ்வளவுதான் அதிகாரம் இருந்தாலும் பஞ்சாயத்து மன்றத்தினுடைய அதிகாரத்திற்கு அவர் கட்டுப்பட்டவர் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. துணைத் தலைவர் இணைந்து செயல்படுகிற அதிகாரம், அதுவும் குறிப்பாக வங்கிக் கணக்கை இணைந்து நடத்துகிற அதிகாரம் கொடுக்கப்பட்டால் அரசியல் காழ்ப்புணர்ச்சி வரும் என்றெல்லாம் இங்கே பேசப்பட்டது. துணைத் தலைவருக்குத்தான் அரசியல் காழ்ப்புணர்ச்சி இருக்குமா? தலைவருக்கு இருக்க முடியாதா? எனவே ஒரு பாதுகாப்புக்காகத்தான் செய்து இருக்கிறோம். ஒருவர் கையெழுத்திடுவதை விட, தலைவரோடு சேர்ந்து துணைத் தலைவரும் கையெழுத்திடுவதால் தலைவருக்கே கூட அது பாதுகாப்பு என்பது என்னுடைய கருத்து. பல இடங்களிலே, அதுவும் பெண்கள் தலைவியாக பொறுப்பேற்றிருக்கின்ற இடங்களிலே.....(குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மூத்த உறுப்பினர் அவர்கள் பேசும்போது தலைவர் மீது



{21, 31 N97
N97-38·1



மட்டும் எப்படி நம்பிக்கை வைக்க முடியும் என்று கேட்டார்கள். நான் சொல்லிக்கொள்வது, மக்களுடைய நம்பிக்கையைப் பெற்றுத்தான் அவர்கள் தலைவராகி இருக்கும்போது, துணைத் தலைவரை ஜாயிண்டாகப் போடுவது எப்படி என்பதுதான் என்னுடைய கேள்வி.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாயமான கேள்விதான். ஆனால் மக்கள் ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்கும்போது ஊராட்சி மன்றத்திற்குக் கட்டுப்பட்ட தலைவராக, அதனுடைய தீர்மானங்களை நடைமுறைப்படுத்துகிற தலைவராக என்று அந்த முறையிலேதான் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. தலைவர்களுக்கு எவ்வளவுதான் அதிகாரம் இருந்தாலும் அந்த மன்றத்தினுடைய தீர்மானங்களை நடைமுறைப்படுத்துகிற அளவில்தான் அவை இருக்குமே தவிர, தலைவரே தனியாக ஒரு தீர்மானத்தை மன்றத்திற்கு மாறாகச் செய்ய முடியாது. இது சட்டத்தினுடைய நிலை. எனவே இந்த முறையில் மன்றத்திற்குக் கட்டுப் பட்டவர்களாகத்தான் தலைவர்கள் இருக்கிறார்கள். அதுவும் தற்போது என்னுடைய அனுபவம் என்னவென்றால், பல மன்றங்களிலே குறிப்பாகச் சகோதரிகள் தலைவியராக இருக்கிற மன்றங்களில், மற்றவர்களின் தலையீடு அதிகமாக இருக்கிறது. எனவே தலைவிக்கு உதவியாகத்தான் இது இருக்கும். மன்றத்தில் இந்த அதிகாரத்தை தலைவிகளுக்கே விட்டால், கணவர், அவருடைய சகோதரர், மற்றவர்களுடைய தலையீடு உண்டாகும். இந்தப் பிரச்சினை பல மன்றங்களிலே, நகராட்சிகளிலே தற்போதும் இருந்து எந்தக் காரியமும் நிறைவேறாமல் இருக்கிறது. பல தடைகள் ஏற்படுகின்றன. மன்றத்திலே பல பிரச்சினைகள் வருகின்றன. இன்றைக்குத் திட்டங்கள் எதுவும் நடைபெறாமல் கணவர்கள் தலையிடுகிறார்கள். மற்றவர்கள் தலையிடுகிறார்கள் என்ற ஆதங்கம் மன்ற உறுப்பினர்களிடம் இருந்து கொண்டிருக்கிறது. எனவே, இந்தச் சூழ்நிலையில்...(குறுக்கீடு)

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவருடைய கருத்தைச் சொல்ல விட மாட்டேன் என்கிறீர்களே, என்ன பாயிண்ட் ஆஃப் ஆர்டர்?

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரியான நோக்கத்திலே விவாதம் செல்ல வேண்டும் என்பதற்காகத்தான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மூத்த



28444

உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் பெண்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தில், அவர் முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில் பார்க்கிறபோது, பெண்கள் செய்ய முடியாமல் அவர்களுக்குப் பதிலாக வேறு ஒருவர் செய்து கொண்டிருப்பதைப் போல ஒரு கருத்தை வைத்திருக்கிறார்கள். பெண்கள் செய்வார்கள் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற காரணத்தால்தான், அவர்களை அங்கீகரித்து தேர்ந்தெடுக்கப்பட அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள், தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ச. அழகிரி:** பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர்?

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாதர்தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்" என்று பாரதியார் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஏதோ பெண்கள் தலைவிகளாக பங்கேற்ற அரங்குகளில்தான் தலையீடு இருப்பது போலச் சொல்கிறார். ஆண்கள் தலைமையேற்று நடத்துகிற இடங்களிலே பிரச்சினைகள் இல்லையா? மாமன் வரவில்லையா, மச்சான் வரவில்லையா? அண்ணன் வரவில்லையா, தம்பி வரவில்லையா? எனவே பெண்கள் மட்டுமே செயல்படுத்த முடியாது என்று சொல்கிற கருத்து தவறானது. அதுவும் இஸ்லாமைப் பின்பற்றுகிற நீங்கள் பெண்களால் இந்தக் காரியங்களைச் செய்ய முடியாது என்று சொல்வது—பெண்தான் ஈரானிலே துணைப் பிரதமராக இருப்பதாகச் சொல்கிறார்கள்—ஏற்புடையது அல்ல. இங்கே கூட பெண் அமைச்சர்கள் இருக்கிறார்கள். அவர்கள் திறமையாகச் செயல்படவில்லையா என்ன?

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் விவாதத்தை எங்கேயோ கொண்டு போகின்றீர்கள். திரு லத்தீப் அவர்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். நீங்கள் விவகாரத்தை உண்டாக்கிவிட்டு, அவர் பாட்டுக்கு ஏதாவது செய்யப்போய்...

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக நான் பெண்களைக் குறை சொல்லவில்லை. பெண்கள், செயல்படமுடியாதவர்கள், பிறரால் நடத்தப்படக்கூடியவர்கள் என்ற கருத்தை நான் ஒருபோதும் சொல்ல மாட்டேன். அந்த அளவிற்கு, எல்லாப் பெண்களையும் குறிப்பிடுகின்றாரே என்று திரு.



அழகிரி அவர்கள் ஆதங்கப்பட்டால், அவர் என்னைத் திருத்தினால் நான் அதை ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறேன். நான் அப்படிச் சொல்லவில்லை. என்னுடைய அனுபவங்களைத்தான் சொல்கிறேன். சில இடங்களிலே ஏற்பட்டிருக்கிற சிக்கல், அந்த அனுபவத்திலேதான் சொல்கிறேன். இதிலே என்ன தவறு இருக்கிறது? தலைவர், மன்றத்திற்குக் கட்டுப்பட்டவரா, இல்லையா என்பதற்கு விடை காண வேண்டும். மன்றத்திற்குக் கட்டுப்பட்டவர்தான் என்ற நிலை வரும்போது, தவறுகள் நடக்கும்போது, தலைவர் உள்ளிட்டு, அனைவரையும், கட்டுப்படுத்தி, அவர்களைச் சீர் செய்யக்கூடிய அதிகாரம் மன்றத்திற்கு இருக்கிறது. நம்முடைய அழகிரி அவர்கள், மாநில சுயாட்சி பற்றிப் பேசக்கூடியவர்கள், இதிலே சுயாட்சி கூடாதா என்று கேட்டார்கள். இதிலே சுயாட்சி வேண்டும் என்றுதான் பேசுகிறார்கள். இங்கே இந்தக் கருத்து வெளியிடப்பட்டது. மன்றமா, தலைவரா என்று வரும்போது மன்றத்திற்கு முழு அதிகாரம் வேண்டும். தனிப்பட்டவருக்காக நான் கேட்கவில்லை. ஒரு ஊராட்சி மன்றத்திற்கு முழு அதிகாரம் வேண்டும். அந்த அடிப்படையிலேதான் மூன்று கணக்குகள்-இந்தத் திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலே மூன்று விதமான கணக்குகள் தொடங்கப்பட வேண்டுமென்று வழிவகை காணப்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் ஒருவர் கையெழுத்து இடுவதற்குப் பதிலாக; இன்னும் சொல்லப்போனால், தலைவருக்கும், உதவித் தலைவருக்கும், மன்ற உறுப்பினர்களுக்கும் இதனால் நல்ல அணுக்கம் ஏற்படும்; இணக்கம் ஏற்படும். ஏனென்றால், தலைவர் கையெழுத்து போடும்போது, துணைத் தலைவரையும் கையெழுத்து இட வேண்டும் என்று சொல்லும்போது, துணைத் தலைவருக்கு ஒரு ஆத்ம திருப்தி, எனவே, அதிலே அணுக்கங்கள் ஏற்படுமே தவிர வேறல்ல. இதில் யாருமே இல்லாதபோது இன்னொரு உறுப்பினருக்கு அந்த வாய்ப்பைத் தரலாம். இன்னார் என்று குறிப்பிடப்படவில்லை. மன்றம் யாரைத் தேர்ந்தெடுக்கிறதோ அவர்தான் இதிலே கையெழுத்து போடலாம் என்ற நிலை இருக்கிறது. எனவே, இது நம்முடைய ஊராட்சி மன்றத் தத்துவத்திற்கு, அதிகாரம் பகிர்வு செய்யப்படுவதற்கு, எந்தவிதமான பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. இன்னும் சொல்லப்போனால், அதை உறுதிப்படுத்துகின்ற வகையில், இன்றைய நிலையில் நாம் கிராம இராஜ்யத்தைச் சிறப்பாக நடத்த வேண்டுமென்றால், முன்னேற்றத் திட்டங்கள் சிறப்பாக நடத்த வேண்டுமென்றால், இது மிகவும் வரவேற்கக்கூடியது. இன்னும் சொல்லப்போனால், ஆழ்ந்து சிந்தித்து, அனுபவத்தின் அடிப்படையில்,

தேவைப்படுகின்ற ஒரு சூழ்நிலையில்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைக் கூறி இந்தச் சட்டத் திருத்தத்தை நான் வரவேற்று அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேராசிரியர் தீரன் அவர்கள் பேசுவதற்குப் பெயர் கொடுக்கவில்லையே (குறுக்கீடு) பட்டியலில் உங்கள் பெயரைக் காணவில்லையே? சரி. பேசுங்கள், சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவினை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஒரு விமர்சனத்தோடு நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்றைக்குச் சிற்றூராட்சி நிதியக் கணக்கு, சிற்றூராட்சியின் குறித்தொதுக்கப்பட்ட மானியக் கணக்கு, சிற்றூராட்சியின் செயற்திட்ட நிதிக் கணக்கு ஆகிய மூன்று வகையான கணக்குகள் ஊராட்சித் தலைவராலும், துணைத் தலைவராலும் கூட்டாக மேற்கொண்டு வரப்பட வேண்டுமென்று செய்யப்பட்டிருக்கின்ற இந்தத் திருத்தத்தை நாங்கள் பொதுவாக வரவேற்கிறோம். காரணம் என்னவென்றால், முன்பெல்லாம் ஊராட்சிகளிலே தலைவர்கள் இருந்தபோது நிதிகளைக் கையாண்ட விதம் வேறு. அப்பொழுதெல்லாம் மைய அரசானது பல்வேறு திட்டங்களைத் தீட்டி கிராமப்புறங்களில் அதிகமாகச் செயற்படுத்தவில்லை. ஆனால், இப்போது பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துகின்ற காரணத்தினாலே, இன்றைக்கு அதற்கு ஒரு பாதுகாப்பு இருக்க வேண்டும்; பணத்தைப் பயன்படுத்துகின்றவர்களிடம் ஒரு பாதுகாப்பு இருந்திடல் வேண்டும் என்ற நோக்கத்தில் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டு இருப்பதாக நாங்கள் அறிகிறோம். அந்த வகையிலே, இது 'செக்' விவகாரமாக இருப்பதனால், ஒரு 'செக்-ஆப்' இருந்தால்தான் அது சரியாக இருக்கும்; இல்லையென்றால், 'செக்-டவுன்' ஆகிவிடும்' எல்லாமே தாறுமாறாகப் போய்விடும் என்ற அடிப்படையிலேதான், அரசானது வேண்டிய மாற்றத்தை, திருத்தத்தைக் கொண்டு வந்திருப்பதாக நாங்கள் கருதுகிறோம்.

*பிற்பகல் 12-20*

இன்னொன்றுகூட நாம் இதிலே எண்ணிப் பார்க்க வேண்டும். எந்த ஒரு பொது நிறுவனமானாலும் சரி அல்லது இயக்கமானாலும்





சரி, அது வங்கிக் கணக்குகளை நிர்வகிக்கிறபோது, கூட்டுப் பொறுப்பிலேதான் பொதுச் செயலாளர், பொறுப்பாளர், என்று கூட்டுக் கணக்கு முறையிலே, நிர்வகிக்கிற முறைகளை நாம் பார்த்திருக்கிறோம்.

இங்கேகூட, மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள், மாநில சுயாட்சி கேட்கின்ற நீங்கள், உள்ளாட்சிக்கு அதிகாரத்தை மறுக்கலாமா என்று சொன்னார்கள். மாநில சுயாட்சி என்பது, மேலே இருக்கிற அதிகாரத்தைக் கீழே இருப்பவர்களுக்கும் கொடுங்கள் அதிகாரம் கீழே இருப்பவர்களுக்கும்தான் என்பது மாநில சுயாட்சியே தவிர, தலைவருக்குள்ள அதிகாரம், அவருக்கு கீழே உள்ள துணைத் தலைவருக்கு இருக்கக் கூடாது என்று சொல்வது மாநில சுயாட்சியாக இருக்க முடியாது என்பது என்னுடைய கருத்து. அந்த வகையிலே துணைத் தலைவர் அவர்களும், — உறுப்பினர்களை மக்கள் தேர்ந்தெடுக்கிறார்கள்; அந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் பிரதிநிதிகள்தான் துணைத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அந்த வகையிலே ஊராட்சிகளின் கணக்குகளை நிர்வகிப்பதிலே, துணைத் தலைவர்களும்— பங்கு வகிப்பதிலே, எந்த வகையிலும் தவறு இருக்க முடியாது. ஏனென்று சொன்னால், பொறுப்பாக்குகின்ற தன்மை— 'அக்கவுண்டபிளிடி'—இல்லாமல் போய்க் கொண்டிருக்கின்ற காரணத்தினாலேதான், சிலபல இடங்களிலே தவறுகள் நேருகின்றன. ஊராட்சிகளை நிர்வகிக்கிறபோது, காலதாமதம் வேண்டுமானால், தடங்கல்கள் ஏற்படுமேயானால், அது குறித்து ஏற்படுமேயானால், அந்த ஊராட்சியினுடைய ஆணையரோ என்ன செய்யலாம் என்றால், அல்லது சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோ அதிலே தலையிட்டு அந்த ஊராட்சியினுடைய நிர்வாகம் தடையில்லாமல் நடைபெறுவதற்கு வழிவகை காணுகின்ற வகையிலே, இந்தச் சட்டமானது இருக்குமேயானால், அதை நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருகிறோம் என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காசோலைகள் அனைத்திலுமே, துணைத் தலைவர், தலைவர் ஆகிய இருவருமே கையொப்பம் இடுதல் வேண்டும் என்று கூறி இருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நாங்கள் எதிர்க்கின்றோம். எனக்கு முன்பு பேசிய திரு. அழகிரி அவர்கள் மிக விளக்கமாகப் பேசியிருக்கிறார்கள். அடுத்து, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மிக

ஆழமாக இதைப்பற்றிக் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், இதைப் பற்றி ஆதரித்துப் பேசிய பெரியவர் திரு. லத்தீப் அவர்கள் கூறிய கருத்திலே எங்களுக்கு மாறுபட்ட கருத்து இருக்கிறது. குறிப்பாக, பெண்கள் தலைவராக இருக்கின்ற அந்த ஊராட்சியிலேதான் தவறுகள் நடக்கின்றன; அவர்கள் ஒழுங்காகச் செயல்பட முடியவில்லை என்று கூறினார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லத்தீப், நீங்கள் கொஞ்சம் இருங்கள். திரு. லத்தீப் அப்படிச் சொல்லவில்லை என்று ஏற்கெனவே மறுத்துவிட்டார். திரும்பவும் அதையே சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஏற்கெனவே அவர் தன்னிலை விளக்கம், 'தான் அப்படிச் சொல்லவில்லை' என்று சொல்லியிருக்கிறார்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களைப் பற்றி நான் ஒட்டுமொத்தமாக, பொத்தாம் பொதுவாக அப்படி ஒரு கருத்தைச் சொல்லவில்லை. இன்றைக்கும் சொல்லவில்லை; என்றைக்கும் சொல்லவில்லை; என்றைக்கும் சொல்ல மாட்டேன். அப்படி திசை திருப்பி பேசுவதில் அர்த்தம் இல்லை. பெண்கள் எல்லோரும் திறமையுள்ளவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான்தான் சொலலி விட்டேனே, நீங்கள் ஏன் திரும்பப் பேசுகிறீர்கள்? திரு. சுந்தரம், இல்லை என்று அவர் மறுத்து விட்டார். நீங்கள் பேசுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பொறுத்தவரையில், தலைவரும் துணைத் தலைவரும் ஒன்றாகச் சேர்ந்து கையொப்பமிட வேண்டுமென்று இருக்கும்போது, பெண்கள் இருக்கின்ற ஊராட்சியிலே அல்லது ஆதிதிராவிடர்கள் இருக்கிற ஊராட்சியிலே, அந்தத் துணைத் தலைவர்கள், தலைவர்கள் போலவே ஆட்சி செய்கிறார்கள். அப்படிப்பட்ட ஊராட்சியிலே பணிகள் செய்ய முடியாமல் ஸ்தம்பித்திருக்கிறது.

அடுத்து, நம்முடைய திரு. தீரன் அவர்கள் கூறியபோது, வங்கியில் இருக்கிறது....(குறுக்கீடு)

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அப்படிப் பேசியது சரியில்லை. எனவே, அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் சொல்லாத ஒன்றை, திசை திருப்பிச் சொல்வது நியாயம் இல்லை.





ஆகவே, அதை குறிப்பிலே இருந்து நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நான் சொல்லாத ஒன்றைச் சொன்னதாக உறுப்பினர் சொன்னதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்க வேண்டுமென்று தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பிலேயிருந்து எதை நீக்குவது, நீக்கக் கூடாது என்பது எனக்குத் தெரியும். நீங்கள் அவ்வாறு சொல்லவில்லை என்பதை நீங்கள் சொன்னதற்கு முன்னாலேயே நான் சொல்லிவிட்டேன். அதோடு போதும். திரு. சுந்தரம், நீங்கள் உங்களுடைய பேச்சை சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடு)

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் தீர்ப்பில் நான் குறுக்கிட விரும்பவில்லை பொதுவாக இப்படிச் செய்திகள் வருகிறபோது, சில நேரங்களில் பத்திரிகையிலே, முன்னாலேயும், பின்னாலேயும் கத்திரித்துவிட்டு, லத்தீப் இப்படிப் பேசினார் என்று வந்து, அதற்கு அவர் இப்படிச் சொன்னார் என்று வந்துவிட்டால், இது வேறுமாதிரியான செய்திகளைக் கொண்டு வந்துவிடும் என்ற காரணத்தினால்தான் அங்கத்தினர் அஞ்சுகிறாரோ என்று நான் கருதுகிறேனே தவிர, தங்களுடைய தீர்ப்பே இறுதியானது; தங்கள் முடிவுதான் இறுதியானது.

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் மட்டும் சொன்னால் நீங்கள் சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன். நான் பேரவைத் தலைவர் என்ற முறையிலே அவர் அப்படிப் பேசவில்லை என்று தீர்ப்பு சொல்லி இருக்கிறேன். ஆகவே இதை பத்திரிகைகள் தப்பாகப் போடுவதற்கு நியாயமில்லை. போட்டால் நடவடிக்கை எடுப்பேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அதேபோல பேராசிரியர் தீரன் அவர்கள் கருத்து கூறியபோது பாங்கிலே கேஷியர், தலைவர் அவர்கள் இருவரும் சேர்ந்து ஒன்றாக கையெழுத்து இடுகிறார்கள் என்று கூறினார்கள். பாங்க் என்பது வேறு. ஒரு நிறுவனத்தை எடுத்துக் கொண்டால் செயலாளர், பொருளாளர் என்று இருப்பார்கள்; ஆனால் ஊராட்சி அமைப்புகளைப் பொறுத்தவரையில் தலைவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து துணைத் தலைவரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இன்று நாட்டிலே நடக்கிற நடப்பை

[திரு. பி.ஆர். சுந்தரம்] [1997 அக்டோபர் 16

நான் தெள்ளத் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அனைத்துப் பஞ்சாயத்துக்களிலும் தலைவர் ஒரு கோஷ்டியாகவும், உப தலைவர் ஒரு கோஷ்டியாகவும்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதை நான் தெள்ளத் தெளிவாக ஆதாரத்துடன் காட்டமுடியும்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேச்சுக்கு மூன்று முறை நான் இங்கே பதில் சொல்லியிருக்கிறேன். தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் பிரச்சினை இருந்தால் ஏனைய உறுப்பினர்களில் ஒருவரைத் தேர்வு செய்து கையொப்பம் இடுவதற்கு அனுமதிக்கலாம் என்று இந்தச் சட்ட முன்வடிவு வருகிறது. இதில் பிரச்சினை ஏது? மன்றம் ஒன்றாக இருக்கும்போது பிரச்சினை பிறகு எப்படி வரும்?

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திரும்பத் திரும்ப அந்தக் கருத்தைத்தான் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். அனைவரும் சேர்ந்து துணைத் தலைவரைத் தேர்ந்தெடுத்தாலும் ஒன்றுதான். துணைத் தலைவரைத் தவிர மற்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தாலும் இரண்டும் ஒன்றுதான். அவர்கள் அனைவரும்...

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்துத் தலைவரை மதித்து, பஞ்சாயத்தை மதிக்காமல் நிர்வாகம் நடத்தப்பட வேண்டுமா? உறுப்பினர் என்ன கருதுகிறார் என்று தெரியவில்லையே? ஒரு பஞ்சாயத்து முடிவெடுத்ததை தலைவர் நிறைவேற்ற வேண்டும் என்பதுதான் சட்டமே; அதுதான் முறை, இதற்கு மாறுபட்ட கருத்தை எப்படி ஏற்பது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம் நீங்கள் உங்கள் பேச்சை விரைவில் முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** இப்போதுதானே ஆரம்பித்து இருக்கிறேன்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யார் சொன்னார்கள்? நீங்கள் எப்போது ஆரம்பித்திருக்கிறீர்கள், எப்போது முடிப்பீர்கள் என்பது என்னுடைய அதிகாரம், உங்கள் அதிகாரம் இல்லை, இன்னும் ஒரு நிமிடத்திற்குள்ளே முடிக்கவில்லையென்றால், உட்கார வைப்பேன். சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.



1997 அக்டோபர் 16 ]

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்கள் கோபப்படக் கூடாது. நான்கு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் 10, 15 நிமிடம் பேசியிருக்கிறார்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினை எல்லாம் இங்கே கிளப்பக் கூடாது. நான் சொன்ன நேரத்தில் முடிக்க வேண்டும். அதுதான் என்னுடைய அதிகாரம். நீங்கள் ஒரு நிமிடத்தில் பேச்சை முடியுங்கள். நீங்கள் இதுவரைக்கும் இதற்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் சொல்லாத ஏதாவது புது கருத்தைச் சொன்னால் உங்களை அனுமதிப்பேன். எல்லாக் கருத்துக்களும் ஏற்கெனவே சொன்ன கருத்துக்கள்தான். பேசி முடியுங்கள்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** நான் நடைமுறைச் சிக்கலைச் சொல்கிறேன். அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தவர். உங்களுக்கு அனைத்தும் தெரியும். ஒரு சட்டமுன்வடிவைக் கொண்டு வந்துவிட்டு அனைவரும் எதிர்க்கிறார்கள் என்பதற்காக நாம் வாபஸ் வாங்க வேண்டுமா என்று தயவுசெய்து......

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு வரம்பு மீறிய பேச்சு. எதிர்க்கிறார்கள் என்பதற்காக நான் வாபஸ் வாங்காமல் அழுத்தமாக உட்கார்ந்து இருக்கிறேனா? நியாயத்தை நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். எவ்வளவு வேண்டுமானாலும் பேசலாம், தலைவர் அனுமதித்தால். நான் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** இன்று தமிழகத்தில்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கொஞ்சம் உட்காருங்கள், இந்த மாதிரி பிரச்சினையில் நீங்கள் கட்சிக் கண்ணோட்டத்தோடு பேசக்கூடாது. நான் இப்பொழுதே சொல்கிறேன். திரு. அழகிரி அவர்கள் பேசிய கருத்தை அவர் கட்சியிலே கூட சிலபேர் ஏற்றுக் கொள்ளாமல் இருக்கலாம். திரு. அழகிரி பேசிய கருத்தை ஆளும் கட்சியிலே பல பேர் எதிர்க்கலாம். அது வேறு. இது கட்சிப் பிரச்சினையே கிடையாது. ஒரு காசோலையில் இரண்டு பேர் கையெழுத்துபோட வேண்டுமா, ஒருவர் போட வேண்டுமா என்பதுதான் பிரச்சினை. இதை ஏன் கட்சிப் பிரச்சினையாக்கிப் பேசுகிறீர்கள்? தொடர்ந்து பேசுங்கள்.

[1997 அக்டோபர் 16

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நான் இதைக் கட்சிப் பிரச்சினையாக்கிப் பேசவில்லை. தமிழகத்தில் இருக்கிற கிட்டத்தட்ட 12,000 பஞ்சாயத்துக்களில்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஆரம்பத்திலேயே அனைத்திந்திய அண்ணா தி.மு.க. சார்பிலே எதிர்க்கிறேன் என்று சொன்னீர்கள். அது தேவையில்லை. உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களும் அப்படித்தான் சொல்லியிருக்கிறார்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாராக இருந்தாலும் அவர்களுக்கும் சொல்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரி, அதை விட்டுவிடுகிறேன். நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், கிட்டத்தட்ட 12,000 பஞ்சாயத்துகளில் நிர்வாகம் ஸ்தம்பித்து நிற்கிறது: என்னுடைய தொகுதியில், 2, 3 கொலைகளே விழுந்திருக்கின்றன. துணைத் தலைவர், தலைவர் அவர்களுக்குள்ளே தகராறு ஏற்பட்டு அந்தப் பஞ்சாயத்தையே நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதைப் பொறுத்தவரையில் உயர்நீதிமன்றத்திலே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்குகள் இருக்கின்றன. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியதுபோல இப்போதுகூட இதற்கு ஒன்றும் அவசரம் இல்லை. நீங்கள் ஒரு குழுவை நியமித்து இருக்கிறீர்கள். ஒவ்வொரு கட்சியின் சார்பாகவும் ஒருவர், இருவர் என்று நியமித்து இருக்கிறீர்கள். அந்தக் குழு கூடி நியாயமாகப்பட்டதைத் தீர ஆலோசனை செய்ய வேண்டும். நான் ஒரு சிறிய உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் ஒவ்வொரு தொகுதியிலும் 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' என்ற ஒரு திட்டத்தை எடுத்திருக்கிறீர்கள்.

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொல்வது பொது விவாதத்திற்கு உட்பட்டது. நான் கொண்டு வந்திருக்கின்ற திருத்தத்தை ஒட்டிப் பேசினால் நலமாக இருக்கும்.



1997 அக்டோபர் 16 ]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்களுடைய பேச்சு முடிந்து விட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல விரும்பினால் சொல்லலாம். (குறுக்கீடு) 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' என்று நீங்கள் ஆரம்பித்த உடனே உங்கள் பேச்சு முடிந்துவிட்டதாக அர்த்தம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப் பொறுத்தவரையில் பஞ்சாயத்துக்களில் தொகுப்பு வீடுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** இது தான் திருத்தமா?

**திரு. பி. ஆர். சுந்தரம்:** அதில் பஞ்சாயத்துத் தலைவர்கள் செயல்பட முடியாதபடி பஞ்சாயத்து உப தலைவர்கள் தடுக்கிறார்கள். எங்களுக்கு 10 வீடுகள் வேண்டும் என்று கேட்டு உப தலைவர்கள் குரூப்பாக இருந்துகொண்டு செயல்படுகிறார்கள். அவர்களுக்கு 'செக் பவர்' கொடுக்கப்படுவதால், அவர்கள் ஒரு கோஷ்டியாக இருந்துகொண்டு செயல்படுவதால் நிறைய பஞ்சாயத்துக்கள் செயல்பட முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றபடி ஒன்றும் இல்லை. தயவுசெய்து நீங்கள் தீர ஆய்வு செய்ய வேண்டும். நீங்கள் போட்டுவிட்டீர்கள். அதை வாபஸ் வாங்க வேண்டுமா, இல்லையா என்பது வேண்டாம்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** உறுப்பினர் சொல்வது சரியானதாக இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மூத்த அமைச்சர், நீங்கள் கோபப்படக்கூடாது. உறுப்பினர் பேச்சை முடிக்கவும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இறுதியாக நான் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். அவசரப்படுவதற்கு ஒன்றும் இல்லை. நீங்கள் குழுவைப் போட்டிருக்கிறீர்கள். அதன்படி தீர ஆய்வு செய்து முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் ஏற்கெனவே எல்லோருக்கும் பதில் சொல்லிவிட்டீர்கள். திரும்பவுமா பதில் சொல்லப் போகிறீர்கள்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** இரண்டு நிமிடங்களில் பதில் சொல்லி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இ.எ.எஸ். திட்டம் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். பார்லிமெண்டில் பேசினால் சங்கடம் என்று சொன்னார்கள். மத்திய அரசினுடைய விதியே வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, பொதுப்பணித் துறை, சாலைப் பராமரிப்புத் துறை போன்றவைகளுக்குப் பிரித்து அளிக்க வேண்டுமென்று இருக்கிறது. அதிலே எந்த மாற்றமும் இல்லை. அந்த அடிப்படையிலே இந்தப் பணிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. குற்றங்கள், குறைகள், தவறுகள் நிச்சயம் இருக்கலாம், அதைப்பற்றி விசாரித்து முடிவு எடுக்கவில்லை என்றால் குறை சொல்லலாமே தவிர, இவைகளை இந்த இந்தத் துறைகளுக்குப் பிரித்துக் கொடுத்து உள்ளாட்சித் துறை அமைச்சருக்கு இருக்கிற அதிகாரத்தை பறிகொடுக்கலாமா என்று ஆதங்கப்பட்டு எனக்கு அறிவுரை வழங்கியதற்காக இதை நான் சொல்லுகிறேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை. விதியே இருக்கிறது. கொடுக்காமல் இருக்க முடியாது. அப்படி கொடுத்ததனால் வேலை செய்கிற காலத்தில் ஏற்படுகின்ற குற்றம் குறைகளைப் பற்றிய தகவல்களை இப்போது கொடுத்தாலும் நான் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் நடவடிக்கை எடுத்து பதில் சொல்லக் காத்திருக்கிறேன். அதை நான் விசாரித்துக் கொண்டும் இருக்கிறேன். அதில் எந்தவிதமான மாற்றமும் கிடையாது. அதை மனதில் வைத்துக்கொண்டு வேறு விதமாகச் சொல்ல வேண்டாம். அதைக் கைவிடலாம். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க எனக்கு வாய்ப்பு அளிக்கலாம்.

அடுத்து 'செக்கில்' கையொப்பமிடுவது பற்றி கம்யூனிஸ்ட் கட்சியினரும் சொன்னார்கள். நீங்களும் சொன்னீர்கள். ஏற்கெனவே, பல உதாரணங்களைக் காட்டியிருக்கிறோம். மேற்கு வங்காள சர்க்காரிலே அவர்கள் போட்டிருக்கின்ற சட்டத்தின் பிரிவு 45(5) இரண்டு பேரும் கையெழுத்து போட்டு எடுக்க வேண்டுமென்று அந்தச் சட்டத்திலே இருக்கிறது. நீண்டகாலமாக இருக்கிறது. எந்தப் பிரச்சினையும் அங்கே எழுப்பப்படவே இல்லை. அதிகாரங்கள் பறிபோனதாகச் சொல்லவே இல்லை. மேற்கு வங்காள சட்டம், கேரள சட்டம் ஆகியவற்றில் தலைவர் மற்றும் ஒருவர் அல்லது துணைத் தலைவர் 'செக்கிலே' கையொப்பமிட வேண்டுமென்று விதி இயற்றி ரொம்ப காலம் ஆகிவிட்டது. நாம் இப்போதுதான்



இயற்றுகிறோம். இதைப்பற்றி நான் 'குறிப்பிட்டுச் சொல்வதற்கும் தயாராக இருக்கிறேன். மத்திய அரசாங்கம் ஜெ.வி.வி.டி திட்டத்தை நமக்கு அளித்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தையும் ஒரு கணக்கில் வைத்திருக்கிறோம். சிற்றூராட்சிக் கணக்கை தனியாக வைத்திருக்கிறோம். அந்தக் கணக்கில் நாம் 'செக்'-ஐப் போட்டு, பணம் பெற வேண்டுமானால் இரண்டு பேர் கையொப்பமிட வேண்டுமென்று விதி இருக்கிறது. இவ்வளவு எல்லாம் இருக்கிறபோது தமிழ்நாடு சட்டத்தில் மட்டும் ஒரு திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு என்ன மறுப்பு இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. இவைகளால் எந்த பாதிப்பும் ஏற்படாது. எந்த அதிகாரத்தையும் குறைக்கவில்லை. எந்த ஊராட்சி மன்றத் தலைவருக்கும் பகிர்ந்தளித்த அதிகாரத்திற்கு குந்தகம் வராது.

இன்னொன்றையும் நான் சொல்லுகிறேன். பஞ்சாயத்துக்கு அதிகாரம் இருக்கிறபோது ஏன் மகா சபையைக் கூட்ட வேண்டும்? மகா சபையைக் கூட்டி அங்கீகரிக்க வேண்டுமென்று சட்டத்திலே ஒரு விதி இருக்கிறதே, அது பஞ்சாயத்தைக் கேவலப்படுத்துவதற்கா? பஞ்சாயத்து ராஜ்யத்தை உருவாக்கினவர்களே, பஞ்சாயத்தையும் கூட்ட வேண்டும். அதிலேயே தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். மகா சபையையும் கூட்ட வேண்டும். அதிலே அங்கீகாரம் பெற வேண்டும் என்ற விதியை வைத்தவர்கள் அதைக் கேவலப்படுத்த வேண்டும் என்று வைத்திருக்கிறார்களா? தலைவரையும் உருவாக்கி, துணைத் தலைவரையும் உருவாக்கி, தலைவரோடு, சேர்ந்து துணைத் தலைவரும் கையெழுத்து போடுங்கள் என்றால், ஏன் ஒருவருக்கொருவர் மாற்றத்தை நாம் சொல்ல வேண்டும்.

*பிற்பகல் 12-35*

நான் சுந்தரம் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினையால் வேறுபடவில்லை, இந்தப் பிரச்சினையால் பல ஊராட்சி மன்றங்கள் ஒன்றுபட்டுத்தான் இருக்கின்றன. இந்த மாதிரிப் பிரச்சினை வருகிறபோது ஒருவருக்கு ஒருவர் யோசிக்கிறார்கள். துணைத் தலைவர் இருந்தால்தானே பணம் எடுக்க முடியும் என்று அவர்களாகவே பேசி. ஒருவருக்கொருவர் முடித்துக் கொள்கிறார்கள். உறுப்பினர்கள் கலந்து முடிவு எடுக்கிறபோது எல்லாம் ஒன்றாகிறது. இதனால் நிச்சயம் பிளவு வராது. எனவே, தயவு செய்து மாமன்ற உறுப்பினர்கள் இந்தச் சட்டத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[1997 அக்டோபர் 16

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



1997 அக்டோபர் 16 ] [திரு. கோ.சி. மணி]

"1997ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 60/1997) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 61/1997), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 61/1997) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

@15-10-1997ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. பிரிவுகள் 2 முதல் 5 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 61/1997) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஈ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 62/1997), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 62/1997) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரைவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@15-10-1997ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 62/1997) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.





### (உ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 63/1997), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 63/1997)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@15-10-1997ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 63/1997) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



பிற்பகல் 12-40

## 4. அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி)

### (ஆ) விதி 30 (3)-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதி 30 (3)-ஐத் தளர்த்தி, இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 4 (அ) அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல் என்ற தலைப்பின்கீழ் உள்ள உள் இனம் 1-ஐ இந்த நிகழ்ச்சி நிரலில் இனம் 4 அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல் என்ற தலைப்பின்கீழ் உள்ள உள் இனம் 6-க்கு அடுத்து எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"
என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)-தொடர்ச்சி

### (ஊ) தமிழ்நாடு மின்சார (நுகர்வின் மீதான வரிவிதிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார (நுகர்வின் மீதான வரிவிதிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 58/1997), மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார (நுகர்வின் மீதான வரிவிதிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 58/1997)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய இந்தச் சட்டமுன்வடிவைப் பார்க்கிறபோது, அதனுடைய விளக்க உரையில் இலவசமாகக் கொடுக்கப்படக்கூடிய மின்சாரத்திற்கெல்லாம் வரி விதிப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கெல்லாம் இலவசமாக மின்சாரத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்; குடிசை லைட்டுகளுக்கு—வீட்டுக்கு ஒரு விளக்கு என்ற திட்டப்படி— இலவசமாக மின்சாரம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்படியெல்லாம் வருகிறபோது, இந்தச் சட்டத் திருத்தம் எந்த இடத்திற்கு என்று சரியாக விளக்காத காரணத்தால் தமிழகத்தையே ஒட்டுமொத்தமாக எதிர்காலத்தில் பாதிக்குமோ என்ற அச்சம் வருகிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இலவச மின்சாரம் விவசாயிகளுக்கு நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்; அதைப்போல ஏழை குடிசை மக்களுக்கும் நாம் இலவச மின்சாரம் விளக்குக்காகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்—அப்படிப் பட்டவர்களுக்கு எந்தவிதமான பாதிப்பும், நாளைக்கு நாட்டிலே இல்லாமல் பார்த்துக் கொள்ளும் வகையில் இந்தச் சட்டத் திருத்தம் அமைய இருக்கிறதா என்பதை விளக்க வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் ஒரு பெரிய சந்தேகத்தை இந்த அவையில் எழுப்பியிருக்கிறார்கள். இப்போது இலவசமாக மின்சாரம் பெறுகின்ற

@15-10-1997ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.





விவசாயிகளுக்கோ அல்லது மின்சாரத்தை இலவசமாகப் பெறுகின்ற குடிசைதாரர்களுக்கோ வரி விதிக்கப்படமாட்டாது. மின்சாரத்தை உற்பத்தி செய்து விநியோகிக்கும் இடத்தில் சலுகைகள் அளிக்கப்படுகின்றன. உதாரணத்திற்கு நெய்வேலியில் தொழிலாளர்களிடமிருந்து 50 பைசா என்றும் சிலருக்கு 10 பைசா என்றும் மின்சாரக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. கட்டணம் எப்படி வசூலித்தாலும் நெய்வேலியில் விநியோகிக்கப்படுகின்ற அந்த மின்சாரத்திற்கு அவர்கள் செலுத்த வேண்டிய வரி, மொத்தமாக எவ்வளவு மின்சாரம் பயன்படுத்துகிறார்களோ அதற்கு அதிகபட்சமாக எவ்வளவு மின்சாரக் கட்டணம் செலுத்துகிறார்களோ அதற்கேற்றார்போல வரியைச் செலுத்த வேண்டும் என்பதுதான் இந்தச் சட்டத் திருத்தம். இதில் நுகர்வோர்களுக்கு எந்தவிதத்திலும் பாதிப்பு ஏற்படாது. விநியோகிப்பவர்களுக்குத்தான் இந்தப் பிரச்சினை. எனவே, யாருக்கும் இதிலே அச்சம் தேவையில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி.ஞானசேகரன், ஒரு தடவைதான் சட்டமுன்வடிவின்மீது பேச வேண்டும். எட்டு விளக்கங்கள் கேட்கக் கூடாது.

**THIRU C. GNANASEKARAN:** "Under this Act, consumption of energy supplied free of cost is made liable for tax on the basis of the price of energy worked out on the tariff rates prevailing in that area for similar consumption", என்று பில்லில் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்காகத்தான் என்னுடைய சந்தேகத்தை நான் இங்கே கிளப்பி இருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக இந்தச் சட்டத் திருத்தம் மற்றப் பகுதிகளுக்கு அல்ல; நெய்வேலிக்கு மட்டும் பொருந்தும் என்று சொல்லிவிட்டால் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லாமல் இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலியைப் போல சில இடங்களிலே யாராவது மின்சாரத்தை கன்செஷன் ரேட்டிலே கொடுத்து இருப்பார்களேயானால், அவர்களுக்கும் இது பொருந்தும். நான் சொல்ல வருவது, மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றவர்களுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்தச் சட்டம் பொருந்தாது. யார்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1997 அக்டோபர் 16

மின்சாரத்தை விநியோகம் செய்கிறார்களோ, அவர்கள் டாக்ஸ் கொடுக்க வேண்டும் என்பதுதான் இந்தச் சட்டம், இது 1962-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டம். இதிலே ஒரு திருத்தத்தைத்தான் இப்போது செய்து இருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.



1997 அக்டோபர் 16]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார (நுகர்வின் மீதான வரிவிதிப்பு) திருத்தச் சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 58/1997) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(எ) தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 56/1997), மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 56/1997) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்

@ 14-10-1997-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 திருத்தம் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 56/1997) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஏ) தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் விலங்கின அறிவியல்கள் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு 1997.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் விலங்கின அறிவியல்கள் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 57/1997), மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் விலங்கின அறிவியல்கள் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 57/1997)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி

பிற்பகல் 12-50

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் விலங்கின அறிவியல்கள் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவை வரவேற்று நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். நம்முடைய நாட்டிலே, கால்நடைகளை செல்வமாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். பண்டைக்

@14-10-1997ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

காலந்தொட்டு நம்முடைய முன்னோர்கள் தங்களுடைய சொத்துக்களை கால்நடைகளின் கணக்கை வைத்துத்தான் மதிப்பிட்டார்கள். ஏன், வீரத்திலே கூட, மனிதர்களைக் கொல்லாமல், கால்நடைகளைப் பிடித்துச் சென்று அதன் எண்ணிக்கையை வைத்து, அந்த நாட்டினுடைய பலத்தைக் காண்பித்த காலமெல்லாம் இருந்தது. ஆனால் இன்றைக்குக் கால்நடைகளின் பராமரிப்பிலே நம்முடைய நோக்கங்கள் குறைந்து விட்டதோ என்ற ஐயப்பாடு இருக்கிறது. காரணம், இன்றைக்குக் கால்நடை வளர்ப்பு என்பது இறைச்சிக்காகத்தான் வளர்க்கப்படுகிறதே ஒழிய, அவைகளை முழுமையாகப் பயன்படுத்தும் வகையில் இருப்பதாகத் தெரியவில்லை. இஸ்ரேல் நாட்டிலே இருக்கக்கூடிய கால்நடை வளர்ப்பு முறை உலகத்திலேயே மிகச் சிறந்ததாக இருப்பதாகக் கருதப்படுகிறது. ஏறத்தாழ அதேபோல சீதோஷ்ண நிலை கொண்ட நம்முடைய நாட்டிலே அதே அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்து கால்நடை வளர்ப்புக்கான ஆராய்ச்சிகளை நம்முடைய பல்கலைக்கழகங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குஜராத்தில் இன்றைக்குக் கால்நடை வளர்ப்புக்கான ஆராய்ச்சிகள் மிகச் சிறப்பாக இருக்கின்றன. அங்கே உள்ள மாடுகள் 40 லிட்டர் பால் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் இங்கே இருக்கிற பசுமாடு 20 முதல் 25 லிட்டர்கூட பால் கொடுப்பதில்லை. எனவே இதுகுறித்து விரிவாக ஆராய்ந்து தமிழ்நாட்டிலும் அதுபோல் 40 லிட்டர் பால் கறக்கும் அளவுக்கு தரமான மாடுகளை உற்பத்தி செய்யும் ஆராய்ச்சியைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோழி வளர்ப்பைப் பொறுத்தவரையில், நாமக்கல்லில்தான் மிகச் சிறந்த கோழிப் பண்ணைகள் இருப்பதாக அறிகிறோம். ஆனால் அங்கே கோழியின ஆராய்ச்சி மையம் இல்லை. நாங்கள் ஒரு குழுவின் சார்பாக அங்கே ஆய்வுப் பயணம் மேற்கொண்டபோது, 1987-லேயே கோழியின ஆய்வு மையம் ஒன்று வேண்டும் என்று கேட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இதுவரையில் அங்கே கோழி இனங்கள் பற்றி ஆராய்வதற்காக ஒரு ஆய்வு மையம்கூட கொண்டுவரப்படவில்லை என்று அறிந்தோம்.

அதைப்போல ஆடு வளர்ப்பு. ஆஸ்திரேலியாவில்தான் ஆடு சிறப்பாக, செழிப்பாக வளருவதாக அறிகிறோம். அங்கே நிறைந்த முடி உள்ள ஆட்டு இனம் வளர்க்கப்படுகிறது. அந்த ஆட்டு இனத்தைப் போல இங்கேயும் ஆராய்ச்சி செய்து அபிவிருத்தி செய்ய நமது



பல்கலைக்கழகங்கள் ஏற்பாடு செய்யவேண்டும். சித்த வைத்தியத்திற்கு நமது அரசு சிறந்த முன்னுரிமை கொடுத்து வருகிறது அதைப்போல சித்த வைத்தியத்தில் மிருகங்களுக்கான வைத்திய முறைகள் பற்றி நமது பழைய ஏட்டுச் சுவடிகளில் இருப்பதாகச் சொல்கிறார்கள். அத்தகைய பழஞ்சுவடிகளைப் பயன்படுத்தி, அதற்கு முக்கியத்துவம் கொடுத்து மிருகங்களுக்கான வைத்தியமுறைகளைப் பயன்படுத்த, நம் கால்நடைப் பல்கலைக் கழகம் முன்வரவேண்டும். மாட்டு வாகனம் என்று சொல்கிறோம். மாடுகளுக்கும் குதிரைகளுக்கும் வைத்தியம் செய்யக் கூடிய அளவுக்கு, மிகச் சிறந்த வைத்திய முறைகள் எல்லாம் நம்முடைய ஏடுகளிலே இருக்கின்றன. அந்த ஏடுகளை எல்லாம் எடுத்துவந்து ஆராய்ந்து, நம்முடைய பல்கலைக்கழகத்தின் வாயிலாக மக்களுக்கு அதை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பைப் பொறுத்தவரையில் கிராமப்புறங்களில் உள்ள ஏழை எளிய மக்கள் சிறப்பாகச் செய்ய முடியும். அவர்களுக்கு அதில் ஆர்வம் ஏற்படுத்த, அவர்களுக்குச் சில சலுகைகளைக் கொடுக்க அரசு முன்வர வேண்டும்.

எங்களுடைய குழு சுற்றுப் பயணத்தில், ஆவின் பால் தயாரிக்கும் இடங்களுக்குச் சென்றோம். குஜராத்தில் 'அமுல்' மிகச் சிறந்த நிறுவனமாக வளர்ந்துள்ளது. நல்லமுறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இங்கே ஆவின் அந்த வகையில் வளரவில்லை. அதற்குக் காரணம், இங்கே உற்பத்தி செய்யப்படும் பாலுக்குச் சரியான விலை கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். எனவே இங்கே பால் உற்பத்தி விலையை உயர்த்தித் தரவேண்டும். அதேநேரத்தில், மற்ற துறைகளில் சலுகைகள் கொடுப்பதைப்போல, பால் வாங்குவோருக்கும் சலுகை கொடுத்து, பால் உற்பத்தியாளர்களுக்கும் பால் கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்தச் சட்டத்திருத்தத்தை தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் வரவேற்று அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் கொள்முதல் விலையைப் பற்றிப் பேசவேண்டியது, பால்வளத் துறை அமைச்சர் மாண்புமிகு சுந்தரம் அவர்களிடம். இது கால்நடை பராமரிப்புத் துறை பற்றியது. எனவே அதைப்பற்றி மட்டும் மாண்புமிகு உறுப்பினர் சொன்னால் நல்லது.

[1997 அக்டோபர் 16

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிட்டார். நீங்கள் பிரச்சினையைக் கிளப்பிவிடாதீர்கள். மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

*** மாண்புமிகு திரு. பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மோகன் கந்தசாமி அவர்கள் கால்நடைத் துறை பற்றிச் சொன்ன விளக்கங்கள் சிறந்த முறையில் இருந்தாலும், 1989-ஆம் ஆண்டு, ஆசியாவிலேயே முதன்முதலாக தமிழகத்தில் ஒரு கால்நடைப் பல்கலைக்கழகத்தை நமது மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அமைத்து, அதைக் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகமாக இப்போது செயல்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

சங்க காலத்திலேயெல்லாம் எப்படி ஆநிரைகள் கவரப்பட்டன என்பதைப் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. மோகன் கந்தசாமி அவர்கள் சொன்னார்கள். பசுவைப் பற்றியும், யானைகளைப் பற்றியும், விலங்குகளைப் பற்றியும் நற்றிணை, குறுந்தொகை போன்ற சங்ககால இலக்கியங்களிலே சிறப்பாகச் சொல்லியிருந்தாலும், 1989-ஆம் ஆண்டுக்குப் பின்னால் கால்நடை வளர்ச்சியில் இந்தப் பல்கலைக்கழகங்கள் ஏற்படுத்தப்பட்ட பின்பு எவ்வளவு சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை சில புள்ளி விவரங்கள் மூலமாக இங்கே சொல்ல விரும்புகிறேன்.

1989-ஆம் ஆண்டுக்கு முன்பு சற்றேறக்குறைய 2 கோடிக்கும் குறைவாக இருந்த கால்நடைகள், பல்கலைக்கழகங்கள் துவக்கப்பட்ட பின்பு, பல்கலைக்கழகங்களின் சார்பாக 16 ஆராய்ச்சி மையங்கள் துவங்கப்பட்ட பின்பு இன்றையதினம் 2½ கோடி கால்நடைகளாக—பசு மாடுகள், பொலிகாளைகள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் போன்றவைகள்-வளர்ந்திருக்கின்றன. அதேபோல, இன்றையதினம் கோழி வளர்ச்சிக்கான ஆராய்ச்சி நிலையம் நந்தனத்திலே சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சின்னசேலம், காட்டுப்பாக்கம் ஆகிய பகுதிகளிலே ஆடுவளர்ப்பு ஆராய்ச்சி நிலையங்கள் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டு வருகின்றன. இந்த ஆண்டுகூட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2126 கிளை நிலையங்கள் அமைப்பதற்கும் 60 மருந்தகங்கள் புதிதாகத் துவக்குவதற்கும், 20 மருத்துவமனைகள் புதிதாகத் துவக்குவதற்கும் ஆணையிட்டிருக்கிறார்கள். அதேபோல பல்வேறு நலத் திட்டங்களையெல்லாம் கால்நடைத் துறையின் சார்பாக செயல்படுத்திக்





கொண்டு வருகின்ற இந்த அரசு, இன்றையதினம் இந்தத் திருத்தச் சட்டத்தை பல்கலைக்கழகங்களின் சார்பாகக் கொண்டு வந்திருக்கிறது. உலக வங்கியின் சார்பாக மனிதவள மேம்பாட்டுத் திட்டம் என்ற அடிப்படையில் 1995-லிருந்து 2000-ஆம் ஆண்டு வரை இந்தத் திட்டங்களுக்கு 23.89 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. மேற்கண்ட தொகையில் இதுவரை மட்டும் ரூ.4.29 கோடி பல்கலைக்கழகத்தின் மேம்பாட்டிற்காக வழங்கப்பட்டு இருக்கிறது. பல்கலைக்கழகத்திலே 15 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். பதவி வழி உறுப்பினர்களாக 7 உறுப்பினர்களும், பிற வழி சார்பாக 8 உறுப்பினர்களும் இருக்கிறார்கள். இதில், பண்ணையார்கள் சார்பாக இரண்டு உறுப்பினர்கள் சேர்க்க வேண்டும் என்று உலக வங்கி கருத்து தெரிவித்துள்ளது. அதனடிப்படையில் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. எனவே இந்தச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் விலங்கின அறிவியல்கள் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 57/1997) நிறைவேற்றப் பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 4. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (இ) விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று அறிமுகம் செய்யப்பட்ட சட்டமுன்வடிவுகளை இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது பற்றிய அரசினர் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டப்பேரவை விதி 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, இன்று அறிமுகம் செய்யப்பட்ட —





(1) 1997-ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 67/1997),

(2) 1997-ஆம் ஆண்டு பதிவு செய்தல் (தமிழ்நாடு இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 68 /1997) மற்றும்

(3) 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 65/1997) ஆகியவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்" என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு சட்டமுன்வடிவை இன்றைக்கே அறிமுகம் செய்து, இன்றைக்கே ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிற ஒரு மரபு இல்லை. ஏனென்றால் உறுப்பினர்கள் அதற்குத் தயாராக வந்திருக்கமாட்டார்கள். எனவே ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதை மறுநாள் வைத்தால் நலமாக இருக்கும். இதை அவை முன்னவர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளைக்கு எங்கே நேரம் இருக்கிறது? நீங்கள் யாரும் இருக்க மாட்டீர்கள், கல்வி அமைச்சர் அவர்களே 18-ஆம் தேதி ஊரிலே இல்லை. இதிலே மரபு இல்லை என்று சொல்ல முடியாது. முன்மொழிந்து விட்டார்கள். ஆகவே பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(குறுக்கீடு) திரு.சி. ஞானசேகரன், பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நிதி சம்பந்தமானது - ஸ்டாம்ப் ஆக்ட் - ஓரளவுக்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பு நல்கி, இதில் எந்த அளவிற்கு பணம் வருகிறது, பணம் இழப்பாகிறது என்பதைப் பற்றியெல்லாம் ஆய்வு செய்த பிறகு, படிப்பதற்கு டைம் கொடுத்த பிறகாவது இதை நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும், அதுதான் நல்லதே ஒழிய, இன்றே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து பணம் சம்பந்தப்பட்டிருக்கிற காரணத்தால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் ஒருமுறை பரிசிலனை செய்து நீங்கள் அவகாசம் கொடுத்து எடுப்பதுதான் நல்லது என்ற என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்மானம் நிறைவேற்றியாகி விட்டது. திரு. அழகிரி அவர்கள் சொல்லி கேட்காமல், நீங்கள் சொல்லி கேட்டால் நாளைக்கு அது வேறுவிதமாகப் போகும். பேச அனுமதிக்கிறேன். ஒருவேளை முடிவாகவில்லை என்றால் நாளைக்கு தொடர்ந்து பேசுங்கள்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி.

### (ஐ) தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்களுக்கான (திருத்தச் சட்டமுன்வடிவு) 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்ட முன்வடிவு, (சட்டமன்றப்பேரவை சட்டமுன்வடிவு எண் 65/1997) மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்டமுன்வடிவு எண் 65/1997)*@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் தங்கள் கருத்தைக்கூற விரும்பினால் கூறலாம். திரு. வி.கே. லட்சுமணன்.

---

@16-10-1997-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.





**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றக் குழுவிலும், ஆட்சிக் குழுவிலும் 6 ஆண்டுக்காலம் பதவி வகித்தவர்கள் மீண்டும் என்றைக்குமே அந்த பதவிக்கு வரக்கூடாது என்ற சட்டத்தைத் திருத்தி மூன்று ஆண்டுக்காலம் இடைவெளிக்குப் பின்னர் அவர்கள் மீண்டும் பதவிக்கு வரலாம் என்ற நிலையிலே கொண்டுவரப்பட்டு இருக்கிற இந்தச் சட்டத்திருத்தத்தை வரவேற்கிற அதேநேரத்திலே, இந்தப் பல்கலைக்கழகங்களுக்கு அரசின் மூலமாக பல கோடி ரூபாயை நாம் அளித்து வருகிறோம். ஆனால் அந்தப் பல்கலைக்கழகங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைப் பற்றி ஒரு குழுவை அமைத்து அது பரிசீலிக்க வேண்டும் என்பது கடமையாக இருக்கிறது. இதுவரை நம்முடைய பல்கலைக்கழகங்கள் செய்திருக்கிற ஆராய்ச்சிகள் என்ன என்பதைப் பற்றியும் நாம் பரிசீலிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்றைய நிலையைப் பார்த்தோம் என்று சொன்னால், இராமர் பிள்ளை 'பெட்ரோல' தயாரித்ததைத் தவிர மிகப் பெரிய ஆராய்ச்சியாக, உலகம் வியக்கும் வண்ணம் செய்த காரியம் ஒன்றும் இல்லை என்பதைத்தான் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே பல்கலைக்கழகங்கள் ஏதோ கல்லூரிகளைப் போல இயங்காமல் ஆராய்ச்சி நிலையங்களாக இயங்க வேண்டியது மிக அவசியமாக இருக்கிறது. அதற்கும் உரிய கவனத்தை அரசு செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைத்தவிர இன்றைக்கு மக்களின் தேவைக்கேற்ப நிறைய கல்லூரிகளைத் தோற்றுவிப்பதற்கு, அரசுக்கு வருமானம் இடையூறாக இருக்கிற காரணத்தால் தனியார் கல்வி நிறுவனங்கள் ஏராளமாகப் பெருகி வந்திருக்கின்றன. அதேசமயத்தில் தனியார் கல்வி நிறுவனங்களுக்கு பல்கலைக்கழகத்தினுடைய ஆட்சிக் குழுவிலோ, ஆட்சி மன்றக் குழுவிலோ சரியான இடம் இல்லாதிருப்பது இங்கே நாம் கவனிக்கக்கூடிய ஒன்றாகும். ஆக, அதற்கும் நாம் உரிய திருத்தத்தைக் கொண்டு வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சென்ற அரசு ஒருமுறை எல்லா பல்கலைக்கழகங்களுக்கும் ஒரேமாதிரியான சட்டத்தை—காமன் யூனிவர்சிட்டி ஆக்ட் கொண்டுவர வேண்டுமென்ற ஒரு சட்டமுன்வடிவைக் கொண்டு வந்தார்கள். அது நிறைவேற்றப்படவில்லை என்று சொன்னாலும்கூட, நிறைவேற்றப் படாததற்கு ஒரே காரணம், முதலமைச்சர்தான் பல்கலைக்கழகங்களுக்கு

வேந்தராக இருக்க வேண்டுமென்று அதிலே குறிப்பிடப்பட்டிருந்ததுதான். அதனால்தான் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இருந்தாலும் கூட எல்லாப் பல்கலைக்கழகங்களுக்கும் ஒரே மாதிரியான சட்டம் இருக்கவேண்டும் என்பது தவறு என்று சொல்லிவிட முடியாது. காரணம், தமிழ்நாட்டிலே இருக்கிற பல்கலைக்கழகங்களிலே, ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் ஒவ்வொரு மாதிரியான சட்டம் இருக்கிறது. ஒரு பல்கலைக்கழகத்திலே ஆட்சி மன்றக் குழுவிற்கு அதிக அதிகாரம், இன்னொரு பல்கலைக்கழகத்திலே ஆட்சிக் குழுவிற்கு அதிக அதிகாரம். இப்படியெல்லாம் இருப்பது சரியானது அல்ல. எனவே, இந்த 'காமன் யூனிவர்சிட்டி ஆக்ட்' என்பதை மீண்டும் கொண்டுவருவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

*பிற்பகல் 1-05*

அதேபோல் இன்றைக்கு நமக்கு அனுப்பப்பட்டிருக்கிற புத்தகங்களிலே அண்ணா பல்கலைக் கழகத்தினுடைய தணிக்கை அறிக்கை மட்டும் வந்திருக்கிறது. தமிழ்நாட்டிலே 15 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. பாரதியார் பல்கலைக்கழகம் மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழகம் போன்றவைகள் இருக்கின்றன. ஒவ்வொரு பல்கலைக்கழகமும் எவ்வாறு இயங்குகிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்கு வசதியாக, எல்லாப் பல்கலைக்கழகங்களினுடைய தணிக்கை அறிக்கைகளை அனுப்பினால்தான் நாம் அவர்களுடைய செயல்பாட்டைக் கண்காணிக்க முடியும் என்பதைத் தெரிவித்து, இந்தச் சட்டத்திருத்தத்தை நான் வரவேற்று அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பல்கலைக்கழகத் திருத்தச் சட்டத்தை நான் ஆதரிக்கின்ற அதேநேரத்தில், ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன். ஒன்று, இரண்டு முறை தொடர்ந்து சிண்டிகேட் அல்லது செனட்டிலே இருப்பவர்கள் மீண்டும் போட்டியிடக்கூடாது என்று, பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் பலமுறை மதுரைப் பல்கலைக்கழகத்திலே இருக்கின்றபோது, உங்களைச் செயல்படச் செய்யக்கூடாது என்பதற்காகவே இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது என்பது நமக்கெல்லாம் நன்கு தெரியும். இப்போது 3 ஆண்டுக்காலம் இடைவெளிவிட்டு, மீண்டும் வரலாம் என்கிற அளவில் சட்டத்தைத் திருத்தி இருக்கிறார்கள். இதிலே ஒரு கருத்தை நான் இங்கே கூற விரும்புகிறேன்.



சிண்டிகேட்டைப் பொறுத்தவரையில் இங்கே மாண்புமிகு உறுப்பினர் லட்சுமணன் அவர்கள் இருக்கிறார்கள், மாண்புமிகு உறுப்பினர் அப்துல் லத்தீப் அவர்கள் இருக்கிறார்கள், நானும் கல்லூரியினுடைய தாளாளராக இருக்கிறேன். பிரின்சிபால் அவர்களுக்கு 2 தொகுதி, அவர்கள் இரண்டு பேர்கள் அந்த சிண்டிகேட்டிலே இடம் பெறமுடியும். அதேபோல் கல்லூரிப் பேராசிரியர்கள் இரண்டு பேர்கள் அந்த சிண்டிகேட்டிலே தேர்தல் மூலமாக வர முடியும். ஆனால் இந்த நிர்வாகத்திலே இருக்கிற செயலாளர்களுக்கு தனித் தொகுதி இருக்கிறதா என்றால் இதுவரையில் இல்லை. மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தை எடுத்துக் கொண்டால், 42 கல்லூரிகள் இருக்கின்றன. ஆனால் அதிலே ஒன்றே ஒன்றுதான், ஒரு அரசுக் கல்லூரிதான் இருக்கிறது, 41 கல்லூரிகள் தனியார் கல்லூரிகள். அதிலே நிர்வாகத்திலே இருக்கின்ற எங்களுக்கு, அந்தப் பல்கலைக் கழகத்திலே, சிண்டிகேட்டிலே ஏதாவது சொல்லவேண்டுமானால் எங்களுடைய கருத்துக்களை எடுத்து வைப்பதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. தேர்தலுக்கான ஒரு தனித் தொகுதி இல்லை. இதைப் பலமுறை எங்களுடைய நிர்வாகச் சங்கத்தின் மூலமாக நாங்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தாலும், இதுவரையில், அதற்காக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. நாங்களும் பல்கலைக்கழகத்திலே ஒரு அங்கமாக இருக்கிறோம். எனவே, எங்களுக்காக ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலேயும் உள்ள சிண்டிகேட்டிலே இரண்டு தனித் தொகுதிகள் - புதிதாக வந்த சட்டம் இப்போது மதுரைப் பல்கலைக்கழகம் மற்றும் மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திலே எல்லாம் அப்படிப்பட்ட சட்டங்கள் வந்திருக்கின்றன, எனவே தனியாக,—இரண்டு பேர்கள் சிண்டிகேட்டிலே நிர்வாகத்தின் சார்பாக தாளாளர்கள் இடம் பெறுவதற்காக சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று, புதிதாக துவக்கப்பட்ட மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில், அது இன்னும் குழந்தைப் பருவத்திலே இருக்கிறது. அதற்கு தனிக் கவனம் செலுத்தி, நிதி ஒதுக்கீடு செய்து, அதை வளர்ச்சி பெறச் செய்யவேண்டும் என்று கூறி, இந்தச் சட்டமுன்வடிவை ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக்கழகங்களில் சிண்டிகேட் உறுப்பினர்களுடைய

பதவிக்காலம் பற்றிய திருத்த மசோதாவில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு கொடுத்த உங்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய 14 பல்கலைக்கழகங்களிலே தாழ்த்தப்பட்ட, மிகமிகப் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீட்டு முறையை முறையாக அமலாக்குவதில்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பல பல்கலைக்கழகங்களிலே ஓரிருவர்கூட தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இல்லாதது வேதனைக்குரிய விஷயம். சமீபத்திலே தமிழ்ப் பல்கலைக்கழகத்திலே இதுபோன்ற ஒரு அவல நிலை இருப்பது சுட்டிக்காட்டப்பட்டபோது, அவர்கள் மீண்டும் ஒரு அறிவிப்பு கொடுத்து வேலைவாய்ப்புக்கு எடுக்கின்றபோது, எந்தத் துறையிலே அதிகமாக தாழ்த்தப்பட்ட படித்த மாணவர்கள் இருப்பார்களோ, அந்தத் துறைக்கு எல்லாம் கொடுக்காமல், தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்றே அதிகமான தகுதிகளை நிர்ணயித்து மீண்டும் ஒருவரும்கூட அந்த வேலைவாய்ப்பைப் பெற முடியாத அளவிற்கு எல்லாம் நிலையை உருவாக்குகிறார்கள். எனவே, பல்கலைக்கழகங்கள் என்பது ஒட்டுமொத்தமான சமூக நிலைகளைக் கணக்கில் கொள்ளாமல் செயல்படக்கூடிய நிலையை நாம் காண்கிறோம். எனவே, அதையும் கணக்கிலே கொண்டு பல்கலைக்கழகங்கள் சமூக மாற்றத்திலே பங்கேற்கக் கூடிய நிலையங்களாக மாற்றி அமைக்கப்பட்டு, அங்கே இட ஒதுக்கீடு முறையை முறையாக அமலாக்குவதற்கும், இதுவரையிலே அமலாக்கப்படாமல் இருக்கக் கூடிய பின்தங்கல்களை எல்லாம் அமலாக்குவதற்கும் இந்த நேரத்திலே தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த மசோதா திருத்தத்திலே என்னுடைய கருத்தை வலியுறுத்தி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

*பிற்பகல் 1-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், பேசுங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக்கழகங்களிலே செனட் உறுப்பினர்களாகவும், சிண்டிகேட் உறுப்பினர்களாகவும், தொடர்ச்சியாக 6 ஆண்டுகள் பதவி வகித்தவர்கள் மேலும் பதவி வகிக்க இயலாமல் இருந்த அந்தத் தடையை நீக்கி, இடையிலே மூன்று ஆண்டு காலம் இடைவெளி இருந்தால், அவர்கள் மீண்டும் செனட்





உறுப்பினர்களாகவோ, சிண்டிகேட் உறுப்பினர்களாகவோ வருவதற்கு வாய்ப்பளித்திருக்கின்ற இந்தச் சட்டத் திருத்தத்தை நாங்கள் வரவேற்கிறோம்.

அதே நேரத்திலே இன்றைக்கு அந்த செனட், சிண்டிகேட் பொறுப்புகளிலே நியமனம் செய்யப்படுகிறபோது பொதுவாக பல்கலைக்கழகங்களிலே ஆசிரியப் பிரதிநிதிகள் வருகிறார்கள். அடுத்து அரசு நியமனம் செய்கின்ற உறுப்பினர்கள் இடம் பெறுகிறார்கள். ஆனால் பல்கலைக்கழகங்களிலே பெரும்பாலும் பணியாளர்கள் நிரம்பப் பணி செய்கின்ற காரணத்தினாலே, அவர்களிடம் எழக்கூடிய பிரச்சினைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு இப்போது அதிகமான வாய்ப்புகள் இல்லை. அவர்கள் நியமன உறுப்பினர்கள் மூலமாகவோ அல்லது மற்றவர்களின் மூலமாகவோதான் தங்களுடைய கோரிக்கைகளை முன்வைக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்தி, பல்கலைக்கழகங்களிலே பணியாற்றக் கூடிய பணியாளர்களும் எப்படி நிர்வாகத்திலே இருப்பவர்கள் பிரதிநிதித்துவம் வேண்டுமென்று கேட்கிறார்களோ, அதைவிட மிக முக்கியமான ஒன்று, பல்கலைக்கழகத்திலே பணியாற்றுகின்ற பணியாளர்களுடைய பிரதிநிதிகள் செனட், சிண்டிகேட்களிலே இடம் பெறுவதற்கு வாய்ப்பளிக்கின்ற வகையிலே ஒரு திருத்தத்தினை நீங்கள் உங்களுடைய கவனத்திலே கொள்ளவேண்டுமென்று இந்த நேரத்திலே வேண்டி விரும்பி கேட்டுக்கொண்டு, நல்ல திறமையாளர்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கு பல்கலைக்கழகங்களுக்கு வாய்ப்பளிக்கின்ற இந்த முறையினை சட்டத் திருத்தத்தினை நான் வரவேற்று, அமைகிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக்கழகங்களில் 6 ஆண்டுகாலம் செனட் மெம்பராகவோ, சிண்டிகேட் உறுப்பினராகவோ இருந்தால், அவர்கள் மீண்டும் வரக்கூடாது என்கின்ற சட்டத்தை மாற்றி 3 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு அவர்களை மீண்டும் அந்தக் குழுவிலே இணைத்துக்கொள்ளலாம் என்கின்ற இந்தச் சட்டமுன்வடிவினை நாங்கள் வரவேற்கிறோம்.

ஆனால் அதே நேரத்திலே பல்கலைக்கழகங்கள் தங்களுக்கு ஏற்புடையவர்களையே நியமனம் செய்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்படுகிற உறுப்பினர்களைவிட நியமிக்கப்படுகிற உறுப்பினர்களுடைய

எண்ணிக்கை அதிகமாக இருக்கக்கூடாது. ஆனால் எல்லா பல்கலைக்கழகங்களிலும் நியமிக்கப்படுகிறவர்களுடைய எண்ணிக்கை தான் அதிகமாக இருக்கிறதே ஒழிய, தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களுடைய எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கின்றது. எனவே அறிவு பெற வேண்டிய இடத்திலே, ஞானம் பெற வேண்டிய இடத்திலே, அடிமைகளைக் கொண்டுபோய் நாம் விட்டுவிடக் கூடாது. நியமிக்கப்படுகிறவர்களிலே பெரும்பாலனவர்கள் பல்கலைக்கழக நிர்வாகம் என்ன சொல்கிறதோ, அதனை ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களாகத்தான் இருக்கிறார்கள். எனவே அந்த வகையிலே தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கிறமாதிரி பார்த்துக்கொள்ள வேண்டுமென்றுதான் நான் இந்த இடத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல இட ஒதுக்கீடும் இதிலே மிக அவசியம். சமூக நீதி பேசுகின்ற நம்முடைய அமைப்பு பல்கலைக்கழகங்களுடைய ஆட்சிமன்றக் குழுவிலே இட ஒதுக்கீடு இருக்கிறமாதிரி பார்த்துக்கொண்டால், அது ஏற்புடையதாக இருக்கும். அந்த இட ஒதுக்கீடுகூட தேர்தல்முறையிலே வரவேண்டும். அதிலேகூட நியமனம் இருக்கக் கூடாது. எனவே அதைப்போன்ற ஒரு சட்டத் திருத்தத்தை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கொண்டுவருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வியமைச்சர்.

*பிற்பகல் 1-15*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக்கழகங்களுடைய சட்டத்தில் ஒரு குறிப்பிட்ட திருத்தத்தை நிறைவேற்றுவதற்காக இந்தத் திருத்தச் சட்டம் வந்திருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் பல கட்சிகளைச் சேர்ந்தவர்களும் பல்கலைக் கழகங்களிலே எப்படிப்பட்ட மாற்றங்கள் தேவை என்பதைக் குறித்து அவர்கள் விரும்புகிற கருத்துருக்களை எடுத்துச்சொன்னார்கள்.

அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் ஒரே சட்டம், ஒரே மாதிரியான சட்டம் இருக்க வேண்டும் என்ற ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. பல்கலைக்கழகங்களிலே, கல்லூரிகளின்





நிர்வாகத்திலே இருப்பவர்கள், தாளாளர்கள், அவர்கள் இடம் பெறுவதற்கு ஒரு வழிமுறை காண வேண்டுமென்ற ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. பல்கலைக்கழகங்களிலே இடம் பெறுகிற, நியமிக்கப்படுகிற ஆசிரியர்கள், மற்றவர்கள் அனைவரும் சமூக நீதி அடிப்படையிலே இடம் பெற வேண்டும் என்ற ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. அதேபோல, நியமனம் ஆகின்றவர்களைவிட தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் அதிகம் இருக்க வேண்டும் என்ற ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. சில குறிப்பிட்ட நிலைகளில் நியமனம்தான் செய்ய முடியுமே தவிர, அவர்களைத் தெரிவு செய்வதற்கான ஒரு வாய்ப்பை உருவாக்க முடியாது. ஒரு சிறந்த நிபுணரை நியமிக்க வேண்டுமானால், நிபுணரைத் தேர்ந்தெடுங்கள் என்றால், நிபுணத்துவம் இல்லாதவர்தான் தேர்ந்தெடுக்கப்படுவார். ஆகவே, இடம், பொருள், ஏவலைப் பொறுத்துத்தான் தேர்வு செய்து அனுப்ப வேண்டும், இடம் பெறச் செய்ய வேண்டும் என்ற கருத்தை ஏற்கலாகும். சமூக நீதிக் கொள்கையில் எனக்கு இளமையிலிருந்து ஒரு அழுத்தமான, உறுதியான நம்பிக்கையுண்டு, அது, இங்கே பல நண்பர்களுக்குத் தெரியும். ஆனால், ஏற்கெனவே இடம் பெறாமல் போய்விட்ட அந்த நிலைமைகளுக்கு சமூக நீதியை நாம் இன்றைக்கு வலியுறுத்துகிறபோது, பழைய நிலைமைகளை எல்லாம் சரிசெய்துவிட முடியாது. புதியதாகச் செய்யப்படக்கூடிய அத்தனை காரியங்களிலேயும், புதிய நியமனங்களில் சமூகநீதி அடிப்படையில் ஏற்கெனவே உள்ள நிலைமைக்கு இழப்பீடு செய்யும் முறையில் ஏதேனும் ஈடுகட்ட முடியுமா என்ற அடிப்படையில் கருதிப் பார்த்துச் செயல்படுத்தலாம். பல்கலைக்கழகங்களுக்கு அந்த வேண்டுகோள் அரசின் சார்பில், துறைச் செயலாளர் மூலமாக ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது பல நிலைகளில் ஆய்வு செய்யப்படுகிறது. பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், இவர்களைத் தெரிவு செய்கிறபோது சில குறிப்பிட்ட, மிக முக்கியமான பாடங்களில் நம்முடைய சமூகத்திலே மிக மிகத் தாழ்ந்து போய்விட்ட அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் குறிப்பிடத்தக்க தகுதியோடு விண்ணப்பிக்கக்கூடிய நிலை பல இடங்களிலே இல்லை. ஆனால், ஒரு குறிப்பிட்ட பாடத்திலேயே அவர்கள் பலபேர் விண்ணப்பிக்கக் கூடிய நிலை இருக்கிறது. அந்த ஒரு துறையிலே, அவ்வளவுபேரும், அந்தப் பாதிக்கப்பட்ட, ஏற்கெனவே இழப்புக்கு ஆளான சமூகத்தைச் சேர்ந்தவர்களாக மட்டும் நியமிக்கலாமா என்றால், அதிலே வேறு சில குறைபாடுகள் வரும். எனவே, இவைகளையெல்லாம் ஆய்வு செய்துதான் அவ்வப்போது

உள்ள நிலைமைகளுக்கு ஏற்ப எந்த வகையில் சமூக நீதியை இன்றைய நிலையில் நிலைநாட்ட முடியுமோ அந்த வகையிலேதான் நிலைநாட்ட முடியும் என்பதை, அதிலே உள்ளூர உடன்பாடு உள்ள நான் கருதுகிறேன். திரு. தியாகராய செட்டியார் அவர்கள் முதன் முதலாக சமூக நீதி உணர்வோடு ஒரு இயக்கத்தைத் தொடங்கியபோது இருந்த நிலைக்கும், இன்றைய நிலைமைக்கும் நாம் திரும்பிப் பார்த்தால் எவ்வளவோ மாற்றங்கள், எவ்வளவோ வளர்ச்சிகள். ஒவ்வொரு 10 ஆண்டுகளிலேயும் சில மாற்றங்கள், சில வளர்ச்சிகள் என்று தொடர்ந்து ஏற்பட்டு வருகின்றன. அந்த வளர்ச்சி உயர் நீதிமன்றம் வரையில் அதேபோல் பல்கலைக்கழகம் வரையில், அனைத்துத் துறைகளிலேயும் மெல்ல, மெல்ல அது ஏற்றம் பெறத்தான் செய்யும், வளரும், அதிலே எனக்கு நம்பிக்கை உண்டு என்பதை மட்டும் நான் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்த மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் நம்பிக்கையோடு இருக்கலாம். அண்மையிலே திருச்சியிலே உள்ள பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக நியமிக்கப்பட்டவர் ஒரு தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பேராசிரியர்தான். அதேபோல, மிகப் பிற்படுத்தப்பட்ட, விடுபட்டுப் போனதாகக் கருதப்பட்ட ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர் இன்னொரு பல்கலைக்கழகத்திலே—பெரியார் பல்கலைக்கழகத்தில் துணை வேந்தராக நியமிக்கப்பட்டுள்ளார். ஆகவே, இந்தக் குறைபாடுகளை அரசு அந்தக் கண்ணோட்டத்தில் எண்ணி, வாய்ப்பு உள்ளபோது அந்தக் குறைபாடுகளைப் போக்கும் என்பதைப் பொதுக் கருத்தாக நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்னும் ஒன்று, பல்கலைக்கழகங்களுக்கெல்லாம் சட்டம் ஒரே மாதிரியாக இருக்க வேண்டுமென்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஏனென்றால், அந்தந்தப் பல்கலைக்கழகங்களுக்கு ஒரு தனி வரலாறு இருக்க வேண்டும், தனித் தன்மை இருக்க வேண்டும். அந்தப் பல்கலைக்கழக நிலையில் எதைச் செய்ய வேண்டுமோ அதற்கான மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்று நான் விரும்புகிறேன், ஆனால், ஒருவேளை பெரும்பான்மை கருத்து அப்படி உருவாகுமானால் அதிலே எனக்குத் தடையில்லை. இந்தத் திருத்தத்தைப் பொறுத்தவரையில், மிக முக்கியமான கருத்து, நம்முடைய தமிழ்நாட்டிலே உள்ள பல்கலைக்கழகங்களில் கல்வித் துறையோடு தொடர்புடைய பல்கலைக்கழகங்களில் — இதில் தமிழ்ப் பல்கலைக்கழகம் இடம் பெறாது, மிச்சம் இருக்கிற பல்கலைக்கழகங்கள்தான் இடம் பெறும். அதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம் இந்தக் கருத்தை நான்





முன்கூட்டியே பேசியிருக்க வேண்டும், ஆனால் அது அனைவருக்கும் தரப்பட்டிருக்கிற சட்டத் திருத்தத்தில் உள்ள கருத்துதான்.

பிற்பகல் 1-20

1923 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகச் சட்டம், 1929 வது ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டம், 1965-ஆம் ஆண்டு மதுரை காமராஜர் பல்கலைக்கழகச் சட்டம், 1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டம், 1981 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டம், 1981 ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டம், 1984 ஆம் ஆண்டு அன்னை தெரஸா மகளிர் பல்கலைக்கழகச் சட்டம், 1985 ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக்கழகச் சட்டம், 1990-ம் ஆண்டு மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்டம் ஆகியவற்றில் தற்போதுள்ள விதி முறைகளின்படி அந்தப் பல்கலைக் கழகங்களின் பல்வேறு அதிகார அமைப்புக்களில் ஏதேனும் ஒன்றிலோ அல்லது இரண்டு அமைப்புகளிலோ மொத்தத்தில் 6 ஆண்டுக்கால அளவிற்குப் பதவி வகித்து வந்துள்ள ஒருவர் அந்தந்தப் பல்கலைக் கழகங்களின் பல்வேறு அதிகார அமைப்புகளில் ஏதொன்றுக்கும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கோ, அவர் பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கோ தகுதி உடையவராகமாட்டார் என்ற ஒரு விதி அண்மைக் காலத்திலே கடந்தகால ஆட்சியிலே சேர்க்கப்பட்டது. அது கல்வித் துறையிலே மிகுந்த ஈடுபாடும், தேர்ச்சியும் உடையவர்கள் ஒரு 6 ஆண்டுக்காலம் அந்த பல்கலைக்கழகத்தில் ஒரு குறிப்பிட்ட அமைப்பிலே இடம் பெற்றுவிட்ட காரணத்தால் பின்னர் என்றைக்குமே அந்த பல்கலைக் கழகத்தில் ஆட்சிக் குழுக்களில் அவர்கள் பணியாற்ற அல்லது குழுவிலே இடம்பெற உரிமையில்லை என்று செய்யப்பட்டது. அது அடிப்படை உரிமைக்கேகூட – தனி மனித உரிமைக்கேகூட சற்று மாறுபட்டது என்பதுதான் என்னுடைய கருத்து. விரும்பி ஏற்றுக்கொள்ளப் படுவார்களேயானால் அதைத் தடுப்பது, சட்டத்தின் மூலமாகத் தடுப்பது நியாயம் அல்ல. ஆனாலும் கூட மற்றவர்களுக்கு அதனால் வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது என்ற ஒரு கருத்து இடையிலே ஏற்படுகிற காரணத்தால், இப்போது வருகிற திருத்தச் சட்டத்தில் ஒரு 6 ஆண்டுக்காலம் ஒரு அமைப்பில் பல்கலைக்கழகத்திலே நியமனத்தின் மூலமாகவோ, தேர்ந்தெடுக்கப்பட்டோ இடம்பெற்றுவிட்டவர்கள் தொடர்ந்து மறுபடியும் அவர்களே அதிலே இடம் பெறுகிற நிலையை சற்று மாற்றி 3 ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்னர்தான் அவர்கள்

[பேராசிரியர் க. அன்பழகன்] [1997 அக்டோபர் 16

மறுபடியும் நியமிக்கப்படலாம் அல்லது தேர்ந்தெடுக்கப்படலாம். என்பதுதான் இப்போது செய்துள்ள திருத்தம் ஆகும்.

குறிப்பாக சில அமைப்புகளில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் துணை வேந்தராகவே 25 ஆண்டுகளுக்கு மேல் டாக்டர் லட்சுமணசாமி முதலியார் அவர்கள் தொடர்ந்து பணியாற்றி பல்கலைக்கழத்திற்கு ஒரு பெருமை சேர்த்தார்கள். ஒரு 6 ஆண்டு காலத்திற்கு மேல் தொடர்ந்து துணைவேந்தராக இருக்கக் கூடாது என்பதற்கு அண்மைக் காலத்திலே யு.ஜி.சி. மூலமாக ஏற்பட்ட விதிமுறைகளில் இரண்டு தடவைதான் இருக்கலாம் என்ற ஒரு விதி இருக்கிறது. 65 வயதிற்கு மேல் இருக்கக் கூடாது என்ற ஒரு விதி இருந்தது. இருந்தாலும்கூட தேர்ந்த நிபுணத்துவம் உடையவர்கள் அல்லது நல்ல நிர்வாகத்திற்கான அறிவுரை சொல்லக்கூடியவர்கள் அவர்கள் அடியோடு அந்த மன்றங்களிலே இடம் பெறக்கூடாது என்று தடுப்பது முறையல்ல என்பதை இந்த அரசு உணர்ந்த காரணத்தால் இந்தத் திருத்தம் கொண்டு வருவது மூலமாக இடைவெளியாக 3 ஆண்டுகள் கடந்ததற்குப் பின்னர் மறுபடியும் அவர் தேர்ந்தெடுக்கப்படுவதையோ அல்லது அவர்கள் நியமிக்கப்படுவதையோ இந்தச் சட்டம் தடுக்கக்கூடாது என்பதற்காக வருகிற இந்தத் திருத்தத்தை இந்த அவையிலே உள்ள பலரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

இன்னும்கூட, ஏற்கெனவே வந்த தடைச் சட்டத்தில் ஒருவர் ஒரு அமைப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு அதிலேயிருந்து இன்னொரு அமைப்பிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் இரண்டு இடங்களிலே இருந்த காலமும் சேர்த்துகூட்டி கருதப்படும் என்ற ஒரு கருத்து இருக்கிறது. 3 ஆண்டுகள் ஒரு அமைப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சிமன்றக் குழுவிற்கோ அல்லது ஆட்சிப் பேரவைக்கோ தேர்ந்தெடுக்கப்பட்டு அதிலேயிருந்து அவர் இன்னொரு அமைப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் இதிலே 3 ஆண்டுகள் இருக்கிறபோது அதிலே 2 ஆண்டுகள் இருந்தால் 5 ஆண்டுகள் என்று சேர்த்துக் கருதப்படும் என்றெல்லாம் அந்தப் பழைய திருத்தம், பழைய தடைச் சட்டம் உள்ளது. அப்படிப்பட்ட கருத்தைக் கொண்டிருந்தால் அது முறையல்ல என்ற காரணத்தால் அதை விலக்கி இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. அதை முழுவதுமாக ஏற்று நிறைவேற்றித்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1997 அக்டோபர் 16]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 33 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 33 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

பிற்பகல் 1-25

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 65/1997) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஒ) இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்முடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 67/1997) மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 67/1997) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வந்திருக்கிற இந்த சட்டமுன்வடிவிலே 78-வது பிரிவை இந்த இடத்திலே மாற்றி அமைக்க வேண்டும். அரசாங்கம் ஒரு சொத்துக்கு ஏற்கெனவே அவர்கள் இவ்வளவு தான் ஸ்டாம்பு டூட்டி என்று சொல்லி அவர்கள் பதிவு செய்த பிறகு அதை அவர்கள் குறைப்பதற்கோ அல்லது தள்ளுபடி செய்வதற்கோ ஒரு அதிகாரம் வேண்டும் என்று சொல்லி இந்த சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதுபோன்ற வரம்பு இல்லாமல் சென்று விட்டால்; கடந்த கால ஆட்சியில் கூட நீங்கள்

@16-10-1997ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



பார்த்திருப்பீர்கள். ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை வாங்கிப் போட்டவர்கள், டான்சி நிலத்தை எல்லாம் வாங்கியவர்கள் எல்லாம் இப்போது விதி விலக்கு, இதுபோன்ற ஸ்டாம்பு டியூட்டியிலிருந்து எக்ஸ்சம்ஷன் என்று போட்டுக்கொள்வார்கள் என்று சொன்னால் தவறானவர்கள் கையில் இதுபோன்ற ஒரு அதிகாரம் போய் மாட்டிக் கொள்ளும் என்று சொன்னால் நாளைக்கு பெரிய ஆபத்து கூட வரும். ஆகவே, அதுவெல்லாம் வர விடாமல் ஏதாவது நாம் விதிகளை இயற்றி இதற்கு தளர்வு செய்வதற்கோ, குறைப்பதற்கோ, நீக்குவதற்கோ ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த 78-வது பிரிவை நாம் உபயோகம் செய்கிற போது இதற்கு ஏதாவது சில விதிமுறைகளை வைக்கவேண்டும். ஒரு கல்வி ஸ்தாபனம் அல்லது நல்ல நோக்கத்திற்கு மட்டும் இதுபோன்ற குறைப்புகளும் அல்லது தள்ளுபடிகளும் வர வேண்டுமே ஒழிய, ஏதாவது பெரிய அளவிலே சொத்து சேர்க்க வேண்டும் என்ற ஆதங்கத்தில் நாட்டை கொள்ளையடிக்க விரும்புகிறவர்களுக்கு எல்லாம் இது உபயோகமாக நாளைக்குப் போய் விடக்கூடாது என்பதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில விதிமுறைகளை ஏற்படுத்திக் கொடுப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவாளர்களுக்கு வரம்பு இல்லாத ஒரு அதிகாரத்தை அளிப்பது கூடாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். முத்திரைத் தாள்கள் பதிவு செய்யப்பட்ட பிறகு அவைகளை உரியவர்களிடம் சேர்க்காமல் தங்களிடத்திலே வைத்துக்கொண்டு தங்களுடைய மேலதிகாரிகளிடத்திலே அனுப்பி மீண்டும் அதற்கு மேற்கொண்டு ஏதாவது கட்டணம் கட்ட வேண்டுமா என்பதைத் தீர்மானித்த பிறகு தான் அந்தப் பதிவு செய்யப்பட்ட தாள்கள் உரியவர்களிடம் சேர்ப்பிக்க வேண்டுமென்ற ஒரு வழக்கம் இப்போதே கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

எனவே, இது மிகப்பெரிய சிக்கல்களை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதேநேரத்தில் முத்திரைத் தாள்களைப் பதிவு செய்யும்போது பதிவு செய்ய வருபவர்கள் அவர்கள் அந்தச் சொத்துக்கு உரியவர்கள் தானா என்றுகூடத் தெரிந்துகொள்வதற்கு தற்போது எதுவும் வாய்ப்பு இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய வீட்டைக்கூட நான் என்னுடைய வீடு என்று சொல்லி பதிவு செய்து கொள்ளலாம். அந்த மாதிரியாக ஒரு முறைதான் இப்போது இருந்து கொண்டிருக்கிறது. இதனால் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. இதற்கு ஏதாவது ஒரு முறை கண்டாக வேண்டும். அதாவது அவர்கள் பத்திரத் தாள்களைச் சமர்ப்பிக்கும்போது இது எனக்குச் சொந்தமானதுதான் என்பதற்கு உரிய சில ஆவணங்களையும் அவர்களிடத்திலே கேட்டுப் பெற்று அதன் பிறகுதான் பதிவு செய்ய வேண்டும் என்ற ஒரு முறையைக் கொண்டு வந்து இந்தப் பதிவுத் துறையை ஒரு முறைப்படுத்த வேண்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பல சொத்துக்கள்—குறிப்பாக கோவில் சொத்துக்கள், வக்ப் சொத்துக்கள் இந்த மாதிரி பொதுச் சொத்துக்களைக்கூட நிர்வகிக்கக் கூடியவர்கள். எங்களுக்குத்தான் சொந்தமானது என்று பலவகையான பெயர்களை வைத்து அதைப் பதிவு செய்து விடுகிறார்கள். பிறகு அது தெரிய வருகிறபோது உரிய துறைக்குத் தெரிவித்தால் எங்களுக்கு பதிவு செய்யத்தான் அதிகாரமே தவிர அதை திருத்துவதற்கோ அல்லது தள்ளுபடி செய்வதற்கோ அதிகாரம் இல்லை. பதிவு செய்ததுதான் என்று சொல்கிறார்கள். இதைப்பற்றி நீங்கள் சட்டபூர்வமான ஒரு அறிவிப்பு-தேவைப்பட்டால் கோர்ட்டுக்குக்கூட போங்கள் என்ற பதில்தான் எங்களால் பெற முடிகிறது. எனவே, அப்படிப்பட்ட நிலைமையில் பதிவு செய்த பிறகு இவன் கோர்ட்டுக்கு எத்தனை முறை எத்தனை காலத்திற்கு அலைவான். வசதி இல்லாதவர்களுடைய சொத்தை வசதி உள்ளவர்கள் ஒரு இடத்திலே அவர் தன்னுடைய சொத்து என்று சொல்லி விற்பனை செய்து விட்டால் அது பதிவு செய்யப்படுகிறது.

ஒரு ஏழை, எப்படி கோர்ட்டிலேயிருந்து டிக்ளரேஷன் வாங்கி அது என்னுடைய சொத்துதான் என்று நிரூபிக்கமுடியும். நீங்கள் பெற்றுக் கொள்ளுங்கள், அதிலே எங்களுக்கு வாய்ப்பு இல்லை, எங்கள் அதிகாரிகளுக்கு அதிலே எந்த அதிகாரமும் இல்லை. என்ற பதிலை நாம் பெறுவதாக இருந்தால் தயவு செய்து இதுகுறித்து ஒரு முறை வேண்டும்; ஒரு வரையறை வேண்டும்; அதற்கு உரிய உரிமைகளுக்கு ஒரு பாதுகாப்பு வேண்டும். எனவே, அதுகுறித்து அரசு சிந்தித்து,





தயவு செய்து இந்தப் பதிவுக்காக வரக் கூடியவர்களிடத்திலே சில குறிப்புகளை அவர்கள் கொடுத்துத்தான் ஆக வேண்டுமென்று பெற்றுக்கொண்ட பிறகு பதிவு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-30*

அதேநேரத்தில் இந்தத் திருத்தச்சட்டம் அளிக்கின்ற இந்த அதிகாரம் எந்த அளவுக்கு நியாயமாக, உரிய முறையில் பயன்படுத்தப்படும்; இதிலே நடைமுறைச் சிக்கல்கள் என்ன வரும் என்பதைப் பற்றியும் அரசு சிந்தித்துப் பார்த்து அதற்கேற்றவகையிலே, சட்டம் நிறைவேறிய பிறகு வேண்டிய, உரிய விதிமுறைகளை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தினுடைய நோக்கத்தை நான் புரிந்து கொண்டிருக்கிறேன். அதை ஆதரிக்கிறேன். ஆனால் அதேநேரத்தில், எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனத்திற்கொண்டு விதிமுறைகளை உரிய முறையில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அலுவல் நேரம் நீடிக்கப்படுகின்றது. மாண்புமிகு அமைச்சரவர்கள்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் பேசுகின்ற பொழுது, முத்திரைத் தாள்களுக்கு விதிவிலக்கு கொடுக்கின்ற காலத்திலே நிறையத் தவறுகள் நடப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. காரணம் கடந்த கால அரசிலே இப்படிப்பட்ட நடைமுறைகளெல்லாம் நடந்திருக்கின்றன என்பதை எடுத்துச் சொன்னார்கள். ஆனால், இந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவில், சட்டம் 78 - பதிவுக் கட்டணம், மாநில அரசானது இப்பொழுது பதிவுக் கட்டணம் என்று ஒரு சதவிகிதம் வசூல் செய்கின்றது. பதிவுக் கட்டணம் வசூல் செய்யும்போது, பதிவு செய்வதற்கு என்று ஒரு சதவிகிதம், அதே மாதிரி நகல் எடுப்பதற்கு என்று ஒரு கட்டணம்; அதேபோல, அங்கே வில்லங்க சர்ட்டிபிகேட் வாங்குகின்றபோது அதற்கு ஒரு கட்டணம்.

இப்படி கட்டண விகிதங்களை மாநில அரசு எவ்வளவு என்று நிர்ணயிப்பதற்கு சட்டம் 78-லே அதிகாரம் இருக்கிறது. பிரிவு 78-லே இருக்கக்கூடிய அதிகாரப்படி, கட்டணங்கள் விதிப்பதற்குத்தான்

அதிகாரங்கள் இருக்கின்றன. ஆனால், அந்தக் கட்டணங்கள் சமயத்திலே கூடுதலாக இருக்கின்றதோ அல்லது குறைவாக இருக்கின்றதோ அல்லது ஒரு பொதுத் துறை நிறுவனம் அரசு நிறுவனம் பதிவு செய்கிறது என்றால் அதற்கு விதிவிலக்கு இருக்கின்றது. ஒரு அரசுத் துறையைச் சார்ந்த நிறுவனம் இன்னொரு அரசுத் துறையைச் சார்ந்த நிறுவனத்திற்கு மாறுதல் செய்கின்றபொழுது நாம் விதிவிலக்கு கொடுக்கின்றோம். தனியார்களுக்கு அல்ல.

ஆகவே, 78-ஆவது விதியிலே நிர்ணயிப்பதற்கு மட்டும்தான் உரிமம் இருக்கிறது. இப்பொழுது 1 சதவிகிதம் என்றால் 2 சதவிகிதம் என்று உயர்த்தலாம் நிர்ணயம் செய்யலாம். ஆனால் உயர்த்தவோ அல்லது குறைப்பதற்கோ, ரெமிட் பண்ணுவதற்கோ அல்லது குறைப்பதற்கோ மாநில சர்க்காருக்கு அதிகாரம் இல்லை. அதற்குத்தான் அதிகாரம் வழங்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றோம். ஏனென்றால், விதிவிலக்கு கொடுப்பது என்றாலும் அந்த அதிகாரம் இல்லை. கட்டண விகிதத்திற்கு விதிவிலக்கு கொடுக்க மாநில அரசுக்கு விதி எண் 78-இல் அதிகாரம் இல்லை. அது வேண்டுமென்றுதான் கேட்கிறோம். குறைக்க வேண்டும் என்றாலோ, கூட்ட வேண்டும் என்றாலோ, விதிவிலக்கு கொடுக்க வேண்டும் என்றாலோ அதற்கு அதிகாரம் வேண்டும் என்று கேட்கின்றோம். ஏனென்றால், விதி 21-ஐத்தான் இப்பொழுது இதுவரைக்கும் பயன்படுத்திக் கொண்டு வருகிறோம்.

ஆனால், மற்ற மாநிலங்களிலேயெல்லாம், இந்தியாவிலே இருக்கக்கூடிய அனைத்து மாநிலங்களிலேயுமே 68-லிருந்து 75-க்குள் இந்த விதி திருத்தம், விதி எண் 78-ஐத் திருத்தி விட்டார்கள். தமிழ்நாட்டிலே மட்டும் திருத்தவில்லை. அதனாலேதான் விதி எண் 78-ஐ திருத்துகிறோம்.

இரண்டாவதாக, முத்திரை தீர்வையிலேயிருந்து விதிவிலக்கு கொடுப்பதைப்பற்றி நமது ஞானசேகரன் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே மாநில அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. எவ்வளவு வேண்டுமானாலும் விதிவிலக்கு கொடுக்கலாம். எதற்கு வேண்டுமானாலும் விதிவிலக்கு கொடுக்கலாம் என்று முத்திரைத்தாள் சட்டப் படி விதிவிலக்கு கொடுப்பதற்கு முழு அதிகாரம் மாநில அரசுக்கு இருக்கிறது என்பது சட்ட விதியிலே இருக்கின்றது. ஆகவே இந்த அரசைப் பொறுத்த வரையில் விதிவிலக்கு, அவர் சொன்ன மாதிரி கொடுக்க மாட்டோம். பழைய அரசிலே கொடுத்தது மாதிரி





எந்தப் பதிவிலும் விதிவிலக்கு கொடுப்பதற்கு எங்களுக்கு அதிகாரம் இருந்தாலும் அதைக் கண்டிப்பாக இந்த அரசு தவறாகப் பயன்படுத்தாது.

திரு. லத்தீப் அவர்கள் பேசுகின்றபோது சொன்னார்கள், யார் வேண்டுமானாலும் இருக்கக்கூடிய வக்ஃப் போர்டு சொத்தைக்கூட, பொதுச் சொத்துக்களையெல்லாம் மாற்றம் செய்து கொள்கிறார்கள் என்று சொன்னார்கள். அதற்குரிய விதிமுறைகள் மாற்றம், இன்றைக்கு இருக்கக்கூடிய அரசு சொத்தாக இருந்தாலும் சரி, வக்ஃப் போர்டு சொத்தாக இருந்தாலும் சரி, கோவில் சொத்தாக இருந்தாலும் சரி, அந்தச் சொத்துக்களை மாற்றம் செய்கின்றபொழுது அங்கேயிருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவரோ அல்லது தாசில்தார் அளவிலே இருக்கின்றவர்களைக் கொண்டு அனுமதி வாங்க வேண்டும் என்று சொல்லி இப்பொழுது நாம் திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம். ஏற்கெனவே அதற்கு சட்டத் திருத்தம் கொண்டு வந்து விட்டோம். அரசாங்கச் சொத்துக்களைப் பதிவு செய்ய வேண்டுமென்றால் அங்கேயிருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவருடைய அனுமதி பெற்றுத்தான் இனிமேல் பத்திரம் பதிவு அலுவலகத்திலே சென்று மாற்றம் செய்ய முடியும் என்று திருத்தம் கொண்டு வந்துவிட்டோம். அதனால் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. இனிமேல் வருங்காலங்களில். யாரும் அரசினுடைய சொத்தை, வக்ஃப் போர்டு சொத்தை, பொதுத் துறை நிறுவனங்களுடைய சொத்தை, அரசுத் துறை சார்ந்த நிறுவனங்களுடைய சொத்தை மாற்றம் செய்ய முடியாது.

பிற்பகல் 1-35

**திரு. ம. அப்துல் லத்தீப்:** இது டைட்டில் சம்பந்தமான விஷயம். ரிஜிஸ்டிரேஷன் செய்த பிறகு அதனுடைய சட்ட விளைவுகள்படி வாங்குபவனுக்குக்கே அது உரிமையாகிவிடுகிறது. தவறான உரிமையாக இருந்தாலும், அதைத் திருத்துவதற்கு நமக்கு வழியில்லை. எனவேதான் அதைப் பதிவு செய்யும்போது மிகுந்த ஜாக்கிரதை தேவை. டைட்டிலை, அவனுடைய உரிமையை அவன் மாற்ற விரும்பினால், பதிவுத் துறைக்கு அதிகாரமில்லை, செய்தது செய்ததுதான், நீங்கள் நீதிமன்றத்திற்குச் சென்றுதான் டிக்ளரேஷன் வாங்க வேண்டுமென்று இப்போது நடைமுறையிலே சொல்லப்படுகிறது. இது பெருத்த சிக்கலை ஏற்படுத்துகிறது. பலர் அவர்களுடைய சொத்துக்களை இழந்திருக்கிறார்கள். கோர்ட்டுகளுக்குச் செல்லக்கூடிய அளவுக்கு அவர்களுக்கு வசதியில்லை. எனவேதான் அதைத் தடுப்பதற்கு, அரசு

பதிவு செய்வதற்கு முன்பே ஜாக்கிரதையோடு பதிவு செய்ய வேண்டும். அதற்கான விதிமுறைகள் ஏற்படுத்த வேண்டுமென்றுதான் நான் மாண்புமிகு அமைச்சரிடத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மூன்று கருத்துக்களைச் சொன்னார். ஒன்று யார் வேண்டுமானாலும் ஒருவர் சொத்தை விற்கலாம், அதைப் பதிவு செய்துவிடுவார்கள், பிறகு கேட்டால் அதை மாற்ற இயலாது என்று பதிவுத் துறை அலுவலர்கள் சொல்கிறார்கள் என்று சொன்னார். ஆனால், அங்கே பதிவு எழுத்தர் இருக்கிறார், யார் சொத்தை யாருக்கு வேண்டுமானாலும் எழுதிவிடுவதற்கு வாய்ப்பில்லை. அவரும் அதில் உடன்பட்டு செய்தால்தான் முடியும். சில சட்டத்திட்டங்களுக்குட்பட்டுதான் பதிவு எழுத்தர் லைசென்ஸ் அரசாங்கம் கொடுக்கிறது. பெரியசாமி சொத்தை லத்தீப்புக்கு கொடுக்கிறார் என்றால் அது உண்மை என்பதைத் தெரிவித்துத்தான் அவர் எழுதுகிறார் பதிவு எழுத்தர், அதற்கு முழு பொறுப்பு, பதிவு எழுத்தர் இருக்கிறார். எல்லோரும் இருக்கிறார்கள். உறுப்பினர் சொல்வது போல் 'டைட்டில் டீட்' அப்படி எழுத ஆரம்பித்தால், எல்லோரும் மாற்றி எழுதிவிடுவார்கள். அவர் சொல்வது மாதிரி இல்லை. பதிவு எழுத்தருக்கு முழு பொறுப்புள்ளது.

சொத்தினுடைய மதிப்பைக் குறைத்து மதிப்பு எழுதினால், ஸ்டாம்ப் டியூட்டி கலெக்டர் போட்டிருக்கிறோம், அது அவருடைய விசாரணைக்குப் போகும். பத்திரம் எழுதி ரொம்ப நாட்கள் வைத்துக்கொள்கிறார்கள், பிறகு மேல் அதிகாரிகளுக்கு அனுப்புகிறார்கள், அதனால் நிறைய இடர்பாடுகள் வருகின்றன என்று சுட்டிக்காட்டினார்கள். விதி 47(ஏ)-ல் ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பு இருக்கக்கூடிய சொத்தை 10 ஆயிரம் ரூபாய்க்கு பதிவு செய்கிறார்கள் சிலபேர். அரசுக்கு வரக்கூடிய வருவாயில் இழப்பு ஏற்படக்கூடிய வகையில் குறைத்துப் பதிவு செய்கிறார்கள். அப்படிச் செய்யும்போது, அங்கே இருக்கக்கூடிய வழிகாட்டி மதிப்பீட்டுக்கு மிகவும் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், மேல் அதிகாரிகளுக்கு அந்தப் பத்திரத்தை அனுப்புவது வழக்கம். உடனே ஆவணங்களைத் திருப்பி கொடுப்பது வழக்கமில்லை. வழிகாட்டி மதிப்புக்கு உட்பட்டு பதிவு செய்திருந்தால் உடனே அந்த ஆவணங்கள் திருப்பிக் கொடுக்கப்படும். நீங்கள் சொல்வது மாதிரி ஒரு தனியாருடைய சொத்தை அவர்கள் அவ்வளவு இலகுவாக விற்க முடியாது. இதிலே இன்னும் என்ன குறைபாடுகள்



இருக்கின்றதோ அவற்றை எதிர்காலத்திலே களைந்து முழு உருவம் பெறுகின்ற அளவுக்கு இந்தத் துறையை நாங்கள் மாற்றி தருவோம் என்ற உறுதியை இந்த நேரத்திலே சொல்லி இந்தச்சட்ட முன்வடிவை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.*

*சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.*

*பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.*

*பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.*

*பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

[பேரவைத் தலைவர்] [1997 அக்டோபர் 16

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு இந்திய முத்திரை (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 67/1997) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஓ) பதிவு செய்தல் (தமிழ்நாடு இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1997)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997-ஆம் ஆண்டு பதிவு செய்தல் (தமிழ்நாடு இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 68/1997), மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

பிற்பகல் 1·40

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு பதிவு செய்தல் (தமிழ்நாடு இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 68/1997) @ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

@16-10-1997ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1997 அக்டோபர் 16]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு பதிவு செய்தல் (தமிழ்நாடு இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 68/1997) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (17-10-1997) காலை 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.41 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்.

99. குறைந்த முதலீட்டில் தயாரிக்கப்படும் படங்களுக்கு படம் வெளியிடப்படும் நாளிலிருந்து முதல் நான்கு வாரங்கள் வரை கேளிக்கை வரிவிதிப்பிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 1-4-1997-ஆம் நாளிட்ட 106-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1939-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16(4). பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).



D4211,31 N97 N97.38.1



100. 1970-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி பணிகள் (வகைப்படுத்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் மேல்முறையீடு) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 13-08-1997-ஆம் நாளிட்ட 202-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919)348(டி) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

101. 1996-ஆம் ஆண்டு தமிழ்நாடு குறித்துரைக்கப்பட்ட வணிகப்பொருள் சந்தைகள் (அமைவிடத்தை முறைப்படுத்துதல்) விதிகளை வகுப்பது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 18-10-1996-ஆம் நாளிட்ட 454-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு குறித்துரைக்கப்பட்ட சந்தைகள் (அமைவிடத்தை முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1996) 67(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

102. 1994-95-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முன்னாள் படைவீரர் வாணிபக் கழகத்தின் பத்தாம் ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

103. 1995-96-ஆம் ஆண்டிற்கான அண்ணா பல்கலைக் கழகத்தின் ஆண்டுக் கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை. (1978-ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

104. 1995-96-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தின் இருபத்தி இரண்டாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

ஏதுமில்லை.

ஃஃ

218444 சென்னை-600 009

**Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.